Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்-15 வெள்ளி-42 17-23 டிசம்பர் 2004



# தொடர் மழையின் அவலம்...

## படித்ததில் பிடித்தது

# பிளாண்டர்ஸ்ஸின் களங்களிலே...

மேற்படி தலைட்பிலான புகழ்பெற்ற கவிதையை எழுதியவர் லெப்.கேணல் ஜோன் மக்றே (LT. COl. JOHN MCCRAE) ஆகும். முதலாம் உலகப்போரின் போது பிளாண்டாஸ்ஸின் சமர்க்களங்களில் வைத்து அதனை எழுதினார் கவிஞர் என்பதற்கும் அப்பால் அவர் ஒரு மருத்துவராக ஒரு போர்வீரனாக, எழுத்தாளராக, சித்திரக்கலைஞராகவும் இருந்தார். ஒன்ராறியோரவில் உள்ள குவெல்ட் இல் 1872 இல் பிறந்த அவர் அந்தமண்ணின் புகழ்பெற்ற புதல்வர்களில் ஒருவராக நினைவு கூறப்படுகிறார்.

மலர்களை நாம் நினைவுச்சின்னமாக அணியும் வழக்கத்தை உருவாக்கியவர் மொய்னா மைக்கல் (MOINA MICHAEL) என்ற ஆசிரியையாகும். போர்கள சேவையின்போது "பிளாண்டர்ஸ்ஸின் களங்களிலே" கவிதையை வாசித்த பின்னரே இவ் வழக்கத்தை அவர் உருவாக்கினார்.

பல்துறை நிபுணரான அந்த அற்புதமான கவிஞரின் நினைவாக அவரது உலகப்புகழ்பெற்ற கவிதை கிழே தரப்பட்டுள்ளது.

பிளாண்டர்ஸ்ஸின களங்களிலே.......
பிளாண்டர்ஸ்ஸின் களங்களிலே
எங்கள் இடங்களை காட்டும்
சிலுவை வரிசைகளிடை
பொப்பி மலர்கள் அலை பாய்கின்றன.

இன்னமும் துணிவோடு கானமிசைக்கிற
வானம்பாடிகள் வானில் பறக்கின்றன.
கீழே, பீரங்கிகள் நடுவே
அந்தக் கானங்கள் கேட்பதில்லை.

மரணித்தவர்கள் நாங்கள்.
சில நாட்களுக்கு முன்புவரை
நாங்கள் வாழ்ந்தோம்.
காலை மலர்வதை உணர்ந்தோம்.
மாலைச்சூரியன் ஒளிர்வைக் கண்டோம்
நேசித்தோம்.
நேசிக்கப்பட்டோம்
பிளாண்டர்ஸ்ஸின் களங்களிலே
இன்று துயில்கின்றோம்.

பகை விரட்ட போரிட்ட
எம் பணி தொடரட்டும்
சோர்கின்ற எம் கரங்கள் சுமந்த
விடுதலைச் சுடரை
உங்களுக்கு எறிகிறோம்.

தூக்கிப் பிடியுங்கள்
மரணிக்கும் எங்கள்
நம்பிக்கைகள் குலைந்தால்
பிளாண்டர்ஸ்ஸின் களங்களில்
பொப்பிகள் மலந்தாலும்
நாங்கள் தூங்கமாட்டோம்.

லெப்.கேணல்: ஜோன் மக்றே
தமிழில்:- புளோறன்ஸ்

---

## கார சாரம்

# அமைதி... அமைதி... அமைதி...!

யாழ்ப்பாணம் வவுனியாப் பகுதியெங்கும் லவுஸ்பீக்கர் சத்தம் காதைபிளக்குது. அதிகாலை நான்குமணிக்கு ஆரம்பித்து இரவுபத்துமணி வரை நடக்கிறது. அயலில் வேற்று மதத்தவர்களும் குடியிருக்கிறார்கள், அவர்களும் பிரார்த்தனை செய்வார்கள் அயலில் பாடசாலைகள் உண்டு, அயலில் பரீட்சைக்குப் படிக்கும் பிள்ளைகள் உண்டு. பகல் முழுதும் உழைத்துக் களைத்து இரவில் நெடு நேரத்தின் பின் உறங்கும் மனிதர்கள் உண்டு, வைத்திய சாலையுண்டு. இவர்களுக்'கெல்லாம் கொஞ்சம் அமைதிவேண்டும் என்ற சிந்தனை இந்த தர்மஸ்தாபன நிர்வாகிகளிடம் இருக்கவேண்டுமே. சரி, பக்தி முத்திப்போய் அதை உலகோர் உய்யும் வண்ணம், இறைவனுடைய பெருமையைப் பறைசாற்றுவது வரவேற்கவேண்டியவிடயம்தான். ஆனால் அப்படித்தான் நடக்கிறது என்று சொல்லக் கூடிய ஆலயங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். நல்லைக்கந்தன் ஆலயத்தில் நிலவும் அமைதி, வட்டக்கச்சி மாயவனூர் சிறி ரங்கநாதப் பெருமாள் கோவில், ஒட்டுசுட்டான் தான்தோன்றிஸ்வரர் கோவில், என ஊருக்கொன்று இருக்கத்தான் செய்கிறது. ஏனையவற்றில் ஒலிப்பதிவு செய்த நாடாவை வானொலிப் பெட்டியில் ஓட விட்டு விட்டு, தங்கள் சொந்த விடயங்களைக் கதைத்துப் பொழுது போக்கும் நிர்வாகிகளையே காணக்கூடியதாகவே உள்ளது. மனிதனின் செவியை அதிர்க்கும் இவ்'வொலி அலைகளால் அவன் எவ்வளவு பாதிக்கப்படுகிறான் என்பதை யாரும் உணர்வதில்லை. தூக்கமின்மை, உயர் ரத்த அழுத்தம், மன உளைச்சல், வயிற்றுப்போக்கு, தலை வலி, ஏன் உயர் ஒசைக்குள் வாழும் ஒருவன் ஆயுள், பத்தில் ஒருபங்கு குறைகிறது என்று கூட ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒலிபெருக்கிகளின் உபத்திரவம் தாங்கமுடியவில்லை என்றார் ஒரு முதியவர். சந்திக்குச் சந்தி கோவில்கள் எல்லா ஒலிபெருக்'கியிலும்' பாடலோ,மந்திரமோ வந்து கொண்டேயிருக்கும். ஒன்றுடன் ஒன்று மோதி ஒரு கலவையான இரைச்சலே காதில் விழுகிறது. ஒரு ஒலிபெருக்கியோசை கேட்கக் கூடிய எல்லைக்குள் பல ஒலிபெருக்கிகள் ஒலிக்க வேண்டிய தேவை என்ன? ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கவேண்டிய இடங்களில், யார் பெரியவர் என்ற ஆணவமே இவ்வொலி களூடாக வெளிப்படுகின்றன. மக்களில் கூடச் சிலர், அது எங்கட கோவில்சத்தம், உது அவயட கோவில் சத்தம் என்று வெளிப்படையாகப் பேசுகிறார்கள். அதிலும் ஒலிபெருக்கியை எவ்வளவு உயர்த்திக்கட்டுவது ஒலியை எவ்வளவு உச்சத்தில் வைப்பது என்பதில் பெரும் போட்டியே நடப்பதுபோல் தெரிகிறது. இதேகேடு, போக்குவரத்து வாகனங்களிலும் நடக்கிறது. சில சிற்றூர்திகள் மன்மதராசாவிலிருந்து, ஓடிப்போய் கல்யாணம் கட்டுவதுவரை பாடல்களை காது செவிடுபடும்படி போடத்தான் செய்கிறார்கள், பாடலில் 'கிக்' ஏறஏறவாகனத்தின் வேகமும் ஏறுகிறது. பயணிகள் உயிரைச் சாரதியின் கையில்கொடுத் துவிட்டு மீண்டும். தருவானா தருவானா என்று கடன் கொடுத் தார் நெஞ்சம் போலக் கலங்குவதைக் காணக்கூடியதாக உள்ளது. பயணிக்கும் போது. பாடல் அவசியமா? பாடலில் கவனத்தை வைத்துப் பாதையைக் கவனிக்காது போனால்... பயணம் செய்பவர்களுக்கு வீட்டுக்கு வந்தபின்னும் வாகன இரைச்சல் காதில் நிற்பதுண்டு. இப்போதெல்லாம் தலையிடி மட்டுமே நிற்கிறது.

இப்போதெல்லாம் உணவகங்களிலும் பாட்டுத்தான் ஏதோ நாடகக் கொட்டகைபோல பெட்டிவைத்து பெரிய சத்தத்தில் பாடல் ஒலிபரப்புவதைக் காணலாம். சேவையிலிருப்பவர்கள் வாடிக்கையாளர்களைக் கவனிக்கவே முடிவதில்லை. கூப்பிட்டு நமக்குத் தேவையானதை செவிடன் காதில் சங்கூதுவது போல உரத்த சத்தத்தில் சொல்ல வேண்டியுள்ளது. கல்லாவில் இருப்பவரும் அப்படியே-சைகையில்தான் பேசுவார். பாட்டைக் குறைக்கலாமே என எண்ணத் தோன்றாது. நான் நினைக்கிறேன். உலகின் புதிய தலை முறை செவிப்புலன் குறைந்த தாகவே படைக்கப்பட்டு விட்டதோ. சில அரங்க நிகழ்ச்சி களில்கூட நாற்பது பேர்பார்வை யாளர், பத்துப்பேர் ஓடியாடி ஒலியமைத்து முப்பதடி மண்டபத்தில் நாலு "பொக்ஷ் வைப்பார்கள். அதற்குப் பக்கத்திலும் இருக்கைகள் இருக்கும்- ஒலியோ நாநூறு மீட்டர் பாயும், மண்டபத்துள் வந்தமர்வது மாடுகளா? அவர்களது செவிகளைப்பற்றி உளநலம்பற்றி ஏன் சிந்திக்கிறீர் களில்லை. மண்டபச் சுவர்களே அதிரும் ஒலியில் நிகழ்ச்சியில் மனம் லயிக்குமா? காதுகளைக் கைகளால் பொத்திக்கொண்டும் முகத்தைச் சுழித்துக்கொண்டும் இருப்பவர்களைக் கண்டால் ஒலியமைப்பவருக்கு தனி மகிழ்ச்சி ஏற்படுகிறதோ? வரவர மண்டப நிகழ்ச்சிகளுக்குப் போவதையே மனம் வெறுக்குமளவுக்கு இந்த நடவடிக்கை அமைகிறது. சரி நீங்கள்தான் ஒலிபெட்டியை விட்டு நகர்ந்து உட்காரலாமே என்று சொல்வீகள், நகர்ந் திருந்து எதைப்பார்பது ஒளிப் படம் எடுப்பவர்களது முதுகையா? முக்கியமான நிகழ்ச்சிக்கு மக்களை அழைப்பார்கள். மக்களும் ஏதோ கூப்பிட்டார்களே என்று போவார்கள். மேடையையே சுற்றி வளைத்துப் படப்பிடிப் பாளர்கள் நிற்பார்கள் பார்வை யாளர்களைப் பற்றி அவர்களுக் கென்ன? திருப்பி அவர்களையும் (எல்லாம் முடிந்தபிறகு) திரும்பி ஒரு படம் எடுப்பார்கள். பார்வை யாளர்களை யார் மதிப்பது வருங்களாலத்தில் இந்த நிகழ்ச் சிகளின் மீதே வெறுப்பு ஏற்படு மளவுக்கு அரங்க, மண்டப அமைப்பாளர்களும் நிகழ்ச்சி அமைப்பாளர்களும் நடந்து கொள்கிறார்கள்.

ஒலி என்பது ஒரு குறிப்பிட்ட அளவை மிஞ்சிவிட்டால் அது ஆபத்தானதுதான். எப் போதும் மிகையாலிக்குள் வேலை செய்யும் ஊழியர்களுக்கு விசேட படி வழங்கப்படுகிறது என்றாலும் சுமார் ஐந்து வருடங் கள் இயந்திர ஓசைக்குள் செவிப்பாதுகாப்பின்றி இருப்பவர், முற்றாகக் கேட்கும் சக்தியை இழக்கிறார். இவர்களுக்கு விசேட நட்ட ஈடுகளைத் தொழில் தருவோர் வழங்குகின்றனர். வழங்க வேண்டும்.

இப்படி அநாமதேயமாக மக்களின் செவிப்பபுலனுக்கு ஏற்படும் தீங்கை என்னவென்பது. ஒரு ஒலிபெருக்கிக்கான உரிமம், அதனை உபயோகிப் பதற்கான உரிமம் என்பனவான இவற்றையெல்லாம் கவனித்து வழங்கவேண்டிய கடமையிலுள்ளவர்கள் கொஞ்சம் கவனமெடுத்தால் என்ன? சில குறிப்பிட்ட மதமக்கள் வருடத்தில் சில நாள் விழாக்களை மக்கள் நெரிசலாக வாழும் இடங்களுள் கொட்டகை போட்டு நடாத்துவார்கள். இந்த இரண்டு மூன்று நாளும் ஆங்கிலப்பறையின் உதவியோடு தொடர்ச்சியாக விடிய விடிய கூச்சலிட்டுக் கொண்டேயிருப்பார்கள் இரண்டு நாட்களுக்கு அயலவர்கள் எங்கேயாலும் இடம்பெயர்ந்து போக வேண்டியதுதான். யாருடைய மனதையம் புண்படுத்தும் நோக்கம் இக்கட்டுரைக்கு இல்லை. ஆனால் ங்களுடைய செவிகளையும் மனதையும் புண்ணாக்காதீர்கள் என்றுதான் கேட்கிறோம். பெருமெடுப்பில் காளான்கள் பூத்ததுபோல ஒலிக் குழாய்களை கோவில்கள் தோறும் கட்டிவைப்பதினால் எந்த நன்மையும் இல்லை. அமைதி! அமைதி!! அமைதிக்காக வழி விடுங்கள் "உங்கள் அயலாரையும் நேசியுங்கள்"

மாயா

# ரணில் விக்கிரமசிங்க என்ன செய்யவேண்டும்?

நிலாந்தன்

தனது கட்சிப்பிரமுகர் திஸநாயக்க கைது செய்யப்பட்டதை எதிர்த்து உள்நாட்டிலும் சர்வதேசஅளவிலும் பெருமெடுப்பில் போராடப்போவதாக ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். மக்களை தெருவில் இறக்குவது; நாடாளுமன்றத்தை ஸ்தம்பிக்கசெய்வது; சர்வதேச சமூகத்திடம் முறையிடுவதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் திஸநாயக்கவை விடுவிப்பதற்காக போராடப்படும் என்று ரணில் அறிவித்திருக்கிறார்.



ஆனால் இதில் தமிழர்களுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற எரிச்சலூட்டுகின்ற ஒரு விசயம் என்னவென்றால்- தான் தொடங்கிய சமாதானத்தை காப்பாற்றுவதற்காக இப்படியெல்லாம் போராட ரணில் முன்வரவில்லை என்பதே.

திஸநாயக்க ஏற்கனவே ஒருமுறை நீதிமன்றத்தை அவமதித்ததிற்காக உயர் நீதிமன்றத்தால் எச்சரிக்கப்பட்டவர். முன்பு சந்திரிகாவுக்கு மிக நெருக்கமாக இருந்தவர். இதனாலேயே சந்திரிகாவின் அந்தரங்கமான விசயங்கள் இவருக்கு அதிகம் தெரியும் என்று நம்பப்படுகிறது. தன்னை சிறையில் அடைத்தால் சந்திரிகாவின் உள் விவகாரங்களை நூலாக எழுதி வெளியிடப்போவதாக சில கிழமைகளுக்கு முன்பு இவர் எச்சரித்திருந்தார். ஆனால் இத்தகைய எச்சரிக்கை எதுவும் சந்திரிகாவை அசைக்கக்கூடியது அல்ல என்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

கீர்த்தியும் அபகீர்த்தியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களே. அன்னை திரேசா இராமகிருஸ்ண பரமஹம்சர் போன்றோரின் கீர்த்தியையே கேள்விக்குள்ளாக்குகின்றார்கள் என்றால் சந்திரிகா எம்மாத்திரம்? அவருடைய தாயைப்பற்றி, தந்தையைப் பற்றி, தந்தையான பண்டாரநாயக்க கொல்லப்பட்டதன் பின்னணி பற்றி ஏராளமான ஊகங்களும் செவிவழிக்கதைகளும் உண்டு. மேலும் பிரேமதாசவின் அந்தரங்கம் பற்றியும் ஏன் ரணில் விக்கிரமசிங்கவின் அந்தரங்கம் பற்றியும்கூட பலவிதமான கதைகள் உண்டு. இத்தகைய ஒரு பின்னணியில் தன்னுடைய அந்தரங்கம் வெளியரங்கமாகப் போவதுகண்டு சந்திரிகா அஞ்சுவார் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. தன்னுடைய தனிப்பட்ட மற்றும் அரசியல் வாழ்க்கை குறித்த விமர்சனங்களையிட்டு அலட்டிக்கொள்ளாது தன்வழியில் தொடர்ந்தும் முன்னேறும் ஜெயலலிதாவைப் போன்றவரே சந்திரிகாவும். தன் மீதான விமர்சனங்களால் அதிகம் செதுக்கப்பட்டவரே ஜெயலலிதா. சந்திரிகாவும் அப்படித்தான். தொடர்ச்சியான இழப்புக்கள் வன்முறைகள் ஏமாற்றங்கள் அவமதிப்புக்கள் போன்றவற்றால் செதுக்கப்பட்டவர் அவர். இப்படிப்பட்ட ஒருவர் திஸநாயக்கவின் புத்தகத்திற்கு அஞ்சுவார் என்று எடுத்துக் கொள்ளலாமா?

ஒரு காலம் சந்திரிகாவோடு நெருக்கமாக நின்றவர் என்ற காரணத்தினாலேயே திஸநாயக்க ஐ.தே.க. வால் சந்திரிகாவுக்கு எதிரான பிரதான பிரசாரப்பீரங்கியாக முன் நிறுத்தப்பட்டவர். சந்திரிகாவுக்கு அதிகம் எரிச்சலூட்டிய, பழிவாங்கப்படவேண்டிய ஒரு இலக்காக அவர் காணப்பட்டார். அவரை உள்ளே தூக்கிப்போட்டதன்மூலம் சந்திரிகா நெடுநாள் பழியை தீர்த்துக்கொண்டதோடு ஐ.தே.க. வின் முகத்தில் ஓங்கிக்குத்தியும் உள்ளார். இது ஒரு ஒத்திகை என்றுகூட சொல்லலாம். இதற்கு எதிராக ஐ.தே.க. வும் சர்வதேச சமூகமும் எப்படிச்செயற்படக்கூடும் என்பதைப் பொறுத்திருந்து பார்த்து அடுத்த கட்டமாக அவர் சபாநாயகரில் கைவைக்கக் கூடும்.

இதை இப்படியே போகவிட்டால் ஒரு கட்டத்தில் அவர் ரணில் விக்கிரமசிங்கவிலும் கைவைக்கக்கூடும் என்ற அச்சம் ஐ.தே.க.க்குள் ஒரு பகுதியினர் மத்தியில் காணப்படுகிறதாம். ரணில் விக்கிரமசிங்க, உடுப்பின் மடிப்புக் குலையாது போராடிக்கொண்டிருக்கும்வரை நிலைமை அப்படியும் ஆகலாம். இது தெரிந்துதான் அவர் தெருவில் இறங்க முடிவெடுத்திருக்கிறார்.

ஆனால் சமாதானத்திற்காக அவர் இப்படி தெருவில் இறங்கத்தயாராக இருந்ததில்லை என்பதே தமிழர்கள் அவர் மீது வைக்கும் குற்றச்சாட்டு அதாவது அவர் சமாதானத்தின் தியாகியாக விரும்பவில்லை.

அவர் செய்த சமாதானத்தைப் பலியிட்டே சந்திரிகாவின் கூட்டு முன்னணி ஆட்சிக்கு வந்தது. என்றாலும்கூட தனது அரசியல் இலட்சியமாக சமாதானத்தை வரித்துக்கொள்ள அவர் தயாரில்லை. இதுதான் பிரச்சினை இந்த இருமை நிலைதான் அவர் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கும் எல்லாநெருக்கடிகளுக்கும் காரணம். உண்மையில் அவருடைய அரசியல் இலட்சியம் எனப்படுவது என்றைக்கோ ஒருநாள் சனாதிபதியாக வருவதே. அந்த இலட்சியத்தை அடைவதற்கான ஒரு கருவியாக அவர் சமாதானத்தைக் கருதுகிறார். சனாதிபதியிடம் உள்ள நிறைவேற்று அதிகாரங்களின் காரணமாகவே சந்திரிகாவால் இவ்வளவையும் செய்யமுடிகின்றது. இப்பொழுது ஐ.தே.க. வை முடக்கி வைத்திருக்கும் இந்த நிறைவேற்று அதிகாரங்கள் ஒரு நாள் தனக்கு கிடைக்கும் என்று ரணில் நம்புகிறார்; காத்திருக்கிறார். அவருடைய இலட்சியமெல்லாம் சனாதிபதியாக வருவதுதான். நிச்சயமாக சமாதானத்துக்காகத் தியாகம்செய்வது அல்ல.

ஒருபுறம் அவர் சமாதானத்தின் நண்பன் போன்று தோன்றுகிறார். இன்னொருபுறம் அவர் சமாதானத்திற்காகத்தெருவில் இறங்க தயாரில்லை. ஒருபுறம் அவர் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களால் பலம் குன்றிக் காணப்படுகின்றார். ஆனால் இன்னெருபுறம் அதே நிறைவேற்று அதிகாரங்களைத்தானும் அனுபவிக்க ஆசைப்படுகிறார். இந்த இருமை நிலை உள்ளவரை அவரை தமிழர்களும் நம்பமாட்டார்கள். சிங்களவர்களிலும் ஒரு பகுதியினர் சந்தேகத்தோடுதான் பார்ப்பார்கள்.

அவர் இப்படி இருமை நிலையோடு தொடர்ந்துமிருந்தால் எந்த சனாதிபதி தேர்தலை நினைத்துக்கொண்டு அவர் இப்படி இருமை நிலையோடு இருந்துவருகிறாரோ அப்படி ஒரு தேர்தல் நடக்குமாயிருந்தால் அதில் அவர் வெல்வார் என்று திட்டவட்டமாக சொல்வதும் கடினமே. அவருடைய கட்சியாட்கள் பலரும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள் அவர் அடுத்த சனாதிபதியாக வருவார் என்று. ஆனால் இப்படி இருமை நிலையோடு உள்ளவரை வெற்றியை உறுதிப்படுத்துவது கடினமே. இத்தகைய இருமை நிலை சந்திரிகாவிற்கே அதிகம் சாதகமானது. அடுத்த சனாதிபதி தேர்தல் என்று ஒன்று நடக்குமாயிருந்தால் அதற்கிடையில் சந்திரிகா யார்யாரை விலைக்கு வாங்குவார், யாரைத்தூக்கி உள்ளே போடுவார் என்பதையெல்லாம் எதிர்வு கூறுவது கடினமே. அதாவது சந்திரிகா எப்படி தன்னை பலப்படுத்தக்கூடும் என்பதை ஊகிக்கமுடியாத மிகப்பலவீனமான ஒரு நிலையிலேயே ஐ.தே.க. காணப்படுகிறது. இதற்கு ஆகப்பிந்திய உதாரணமாக காட்டக்கூடியது திஸநாயக்கவின் விவகாரம். தனக்கு இப்படி ஒரு கடும் தண்டனை கிடைக்குமென்று திஸநாயக்க கற்பனைகூடச்செய்திருக்கவில்லை. தீர்ப்பைக் குறித்து அவர் பெருமளவிற்கு அசட்டையாக இருந்ததாகச்சொல்லப்படுகிறது. இதுவரை வெளியில் சொல்லப்படாத ஏதோ ஒரு இரகசிய கையாளுகைக்கு ஊடாகத் தீர்ப்பு தனக்கு எதிராக திரும்பாதபடி தடுத்து நிறுத்திவிட்டதாக அவர் நம்பிக்கொண்டிருக்க, தீர்ப்போ மிகக்கடுமையாக அமைந்துவிட்டது. இப்பொழுது திஸநாயக்க சொல்கிறார் தான் பிழையான இடத்தில் நம்பிக்கையை முதலீடுசெய்துவிட்டதாக.



இப்படித்தான் ரணிலும் கடந்த தேர்தலின்போது பிழையான இடத்தில் தனது நம்பிக்கைகளை முதலீடுசெய்தார். இப்பொழுதும்கூட அவர் தனது பலம் குறித்தும் சந்திரிகாவின் பலத்தைக் குறித்தும் சரியான ஒரு சித்திரத்தை வைத்திருப்பவராகத்தெரியவில்லை. முதலாவதாக அவர் தன்னுடைய பலவீனம் எது என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும். ஏனெனில் ஒருவர் தன்னைப் பலப்படுத்துவது என்பது தனது பலவீனத்தை கண்டுபிடிப்பதிலிருந்தே தொடங்குகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான பலவீனம் அவருடைய இருமை நிலையே. இரண்டாவது பலவீனம் சிறிலங்காவின் அரசியல் கலாசாரத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாத அவருடைய கனவான் அரசியல்.

முதலில் ரணில் விக்கிரமசிங்க தனது இருமை நிலையைக் கைவிடவேண்டும் இந்நிலைப்பாடே அவரையும் பலவீனப்படுத்தி சமாதானத்தையும் காட்டிக்கொடுத்து சந்திரிகாவையும் பலப்படுத்திவருகிறது.


கடைசியாக வந்த மாவீரர் நாள் உரையில் சந்திரிகாவுக்கு மட்டுமல்ல; ரணிலுக்கும்கூட ஒரு கூரான செய்தியிருக்கிறது. சமாதானத்தைக் குறித்த ஒளிவுமறைவற்ற தளம்பலில்லாத திட்டவட்டமான அவருடைய நிலைப்பாடு என்ன என்பதை முதலில் அவர் பகிரங்கப்படுத்தவேண்டும். அப்படி சமாதானத்துக்கு ஆதரவான மிகச்துணிச்சலான ஒரு நிலைப்பாட்டை எடுத்தால்தான் சமாதானத்தை மக்கள்மயப்படுத்தும் வேலைகளை இதயசுத்தியுடன் செய்யமுடியும். சமாதானத்தை ஒரு அரசியல் இலட்சியமாக வரித்துக்கொண்டால் தான் அதற்காக தெருவில் இறங்கிப்போராடத்தேவையான திடசித்தம் உண்டாகும். அதற்கேயான ஒரு பொறிமுறையின் தேவையும் உண்டாகும். எனவே ரணில் முதலில் உறுதியான ஒரு கொள்கை நிலைப்பாட்டை எடுக்கவேண்டும்.

அப்படியொரு உறுதியான கொள்கை நிலைப்பாட்டை எடுக்கும்போதுதான் ஒன்று தெரியவரும் சந்திரிகாவுக்குச் சவாலாக எழுவதென்றால் கனவான் அரசியலில் அதற்கான பொறிமுறைகள் மிகக்குறைவு என்பது. ஒன்றில் ஜெயவர்த்தனவைப்போல தந்திரசாலியாக இருக்கவேண்டும். அல்லது பிரேமதாசவைபோல தெருவிலிறங்கத்தயாராக இருக்கவேண்டும். ஒன்றில் சமாதானத்துக்குத் தலைமை தாங்கவேண்டும். அல்லது இருபத்தியொராம் நூற்றாண்டின் சிங்கள இனவாதத்திற்கு தலைமை தாங்கவேண்டும். சமாதானத்திற்கு தலைமைதாங்குவதென்றால் போட்டிருக்கும் உடுப்புக் கசங்காமல் போராடிப்பலனில்லை. பதிலாக சிலவாரங்களுக்கு முன்பு செய்ததுபோல சட்டிபானைகளுடன் தெருக்களில் இறங்கவேண்டும் இதற்கு ஒருவித பிரேமதாசத்தனமும் வேண்டும். மாறாக திஸநாயக்க சிறையிலிருக்கும்போது ரணில் விக்கிரமசிங்க குடும்பத்தோடு சிங்கப்பூருக்கு விடுமுறையில் செல்லத்திட்டமிடுவதும், மிலிந்தமொறகொட நத்தாரைக் கொண்டாட அமெரிக்கவுக்குப் போகத் திட்டமிடுவதும் மூன்றாம் உலகநாடுகளுக்கேயான அரைவேக்காட்டுக்கனவான் அரசியலின் பாற்பட்டவையே.

கடந்த கிழமை திஸநாயக்க சிறைவைக்கப்பட்ட செய்தி கிடைத்ததும் ரணில் விக்கிரமசிங்க யாருக்குமே சொல்லாது தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் சாரதியையும் அழைத்துக்கொண்டு திஸநாயக்கவின் வீட்டுக்குப் போனாராம். வழியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவாகனம் அசையமுடியாத ஒருநிலை தோன்றியதாம். அப்பொழுது ரணில் சாரதியிடம் கேட்டாராம் "இந்த நெரிசல் நீங்களவ்வளவு நேரம் எடுக்கும்?" என்று அதற்கு சாரதி சொன்னாராம் நீண்ட நேரம் எடுக்கும் என்று. ரணில் உடனடியாக வாகனத்தை விட்டிறங்கி கால்நடையாகவே திஸநாயக்கவின் வீட்டைச்சென்றடைந்தாராம். அவர் அங்கே திஸநாயக்கவின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறிய பின் புறப்படத்தயாரான வேளையிலேயே வாகனம் அங்கு வந்து சேர்ந்ததாம். இது ஒன்றைக் குறியீடாகக்காட்டுகிறது. அது என்னவெனில் - தெருவில் இறங்கினால் தான் அதாவது-தெருவில் இறங்கிப் போராடினால்தான் அவருக்குப் பிரகாசமான ஒரு அரசியல் எதிர்காலம் உண்டு என்பதே. ●

# நறுக்கென...

## ஊழல்களும்... மீறல்களும்



போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் இன்றைய காலப்பகுதியில் யுத்த நிறுத்த உடன்பாட்டின் விதிமுறைகளை அரச தரப்பும் படைத்தரப்பும் திட்டமிட்டவகையில் தொடர்ந்து மீறிக்கொண்டே வருவதானது மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்கத் தீவிரம் காட்டும் அரசின் உள்நோக்கத்தையே வெளிப்படுத்துகிறது.

தேசியத்தலைவரின் பிறந்தநாள் மற்றும் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்ற காலங்களில் அதனை குழப்பி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி விடுதலைப்புலிகளை மோதலுக்கு இழுக்கும் நோக்குடன் படைத்தரப்பில் போர்வெறி மனநோயாளர்களாக சிலர் செயற்பட்டதை உலகறியும்.

இவர்களுக்கு அரசபீடத்திற்குள் இருந்து அதிகாரம் செய்யும் பின்புல ஆதரவு பலம் இருக்கவே செய்தது.

போர்நிறுத்த உடன்பாட்டில் இராணுவச் சமநிலை பேணப்படல் வேண்டும் 'என்ற விதி முக்கியமானதாகும்.'

அடிக்கடி விடுதலைப்புலிகள் கப்பல்களில் ஆயுதங்களைக் கடத்திவருகிறார்கள், புதிய முகாம்களை திருகோணமலையைச் சுற்றி அமைக்கிறார்கள், சிறுவர்களை படையில் இணைக்கிறார்கள் என்றெல்லாம் அர்த்தமற்றதும், பொய்யானதுமான பிரசாரங்களை புலம்பிக்கொண்டு இருந்த அரசாங்கமே அந்தச் செயல்களைத் தொடர்ந்து செய்துவந்துள்ளமை அவர்களது. வாக்கு மூலமாகவே வெளிப்பட்டுள்ளது.

அண்மையில் எந்த நிலைமையையும் எதிர்கொள்ளுமளவிற்கு இப்போது படைத்தரப்பு பலமடங்கு பலமும் வளமும் பெற்றுள்ளது என்று கடற்படைத்தளபதியும்- சனாதிபதியின் பூரண ஆசீர்வாதம் பெற்ற கூட்டுப்படைத் தளபதியுமான தயாசந்தகிரி கூறியுள்ளமையானது இராணுவச் சமநிலை என்ற விதியைதாம் மீறியுள்ளதற்கான படைத்தரப்பின் ஒப்புதல் வாக்குமூலமாகவே உள்ளது.

அடுத்தது யூகோஸ்லேவியாவில் இருந்து போர்நிறுத்த சூழலிலும் கூட10000 பீரங்கிக் குண்டுகளை கொள்வனவு செய்த விடயமானது - அதில் ஏற்பட்டுள்ளகொள்வனவு முறைகேடு காரணமாக வெளிச்சத்திற்கு வந்துள்ளமையை கூறலாம். முன்னர் பொ.ஐ முன்னணி ஆட்சிக் காலத்தில் யுத்தத்தை காரணம் காட்டி அப்போதைய இராணுவக் கொள்வனவு அதிகாரிகள் பாதுகாப்புத்துறை சார்ந்த மிக முக்கிய பிரமுகர்கள் செய்த ஊழல் மோசடிகள் பிரசித்தமானவை. இப்போது இந்தப்பீரங்கிக் குண்டுகள் கொள்வனவு விடயத்தில் மோசடி நடந்துள்ளதாகவே இந்த விவகாரம் வெளியாகியுள்ளது.

தரமற்றதும், காலாவதியானதுமான இந்த 10000 பீரங்கிக் குண்டுகளும் சமாதான சூழலில் கொள்வனவு செய்யவேண்டி அவசியமென்ன?

அரசு யுத்தத்தை ஆரம்பிக்க தன்னை தயார்ப்படுத்துகின்றது என்றுதானே அர்த்தம்? அல்லது இதனை ஒரு வழமையான நடவடிக்கை- அதாவது யுத்தத்தின் பேரால் கிடைப்பதைச் சுருட்டிக் கொள்ளும் ஊழல் செயற்பாடுதான் என்று அரசு இதற்கு காரணம் கூறப்போகிறதா?

எப்படியோ போர் நிறுத்த உடன்பாட்டு விதிகளை அரசு மீறத்தொடங்கிவிட்டது.

## கெட்டிக்காரன் புளுகுகள்...



கெட்டிக்காரன் புளுகு எட்டே நாள்தான் என்பார்கள். அதுசரிதான் பொங்கு தமிழ் பேரெழுச்சியுடன் கனடாவில் பொங்கியதால் பொறாமையும் எரிச்சலும் கொண்ட பேரினவாதிகளும் அவர்கள் அடிவருடிப் பிழைப்பு நடத்தும் தமிழினத்துரோகக் கும்பல்களும் அந்த எழுச்சி ஏற்படுத்திய உணர்வின் உத்வேகத்தைத் தடுக்க அல்லது மறைக்க 'ரொரோன்ரோ'வில் பாரிய பிரசார எடுப்புடன் மனித உரிமையைப் பாதுகாத்தல் என்ற பிரகடனத்துடன் மேற்கொண்ட தமிழின- தமிழீழ எதிர்ப்பு மாநாடு இவ்வளவு மோசமான அவமானத்துடன் பிசு பிசுத்துப்போகும் என அந்த நிகழ்வின் அமைப்பாளர்கள் கனவில் கூட எதிர்பார்த்திருக்கமாட்டார்கள்.

பொய்யான கருத்துருவாக்கத்திணிப்பின்மூலம் உண்மையை மறைக்கவும் தவறான கற்பிதங்களை உருவாக்கவும் அந்தக் கும்பல் போட்டதிட்டம் [illegible]ட்டமாய் போனதில் அண்ணாச்சிமார் அதிர்ந்து போயுள்ளனராம். நினைத்தது ஒன்று நடந்தது ஒ[illegible] மாறிப் போய்விட்டது. விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்ப்பதை கருப்பொருளா[illegible] கொண்டு - அதனை மனிதஉரிமை மீறலின் உச்சக்கட்ட செயற்பாடாகக் காட்டப்போய்- அதற்காக பெரும்பிரசாரங்களை மேற்கொள்ளப் போய் அதனை நம்பவைக்க கனடிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களை அழைக்கப் போய்...அவர்களே தர்மசங்கடத்திற்குள்ளான சம்பவமே இறுதியில் அரங்கேறியதாகிவிட்டது. அவர்கள் மாநாடு மேற்கொண்ட வேளையில் கனடாவின் 'ரொரான்ரோ ஸ்ரார்' இப்படிக் காலை வாரும் என அவர்கள் எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள்.


அந்தப்பத்திரிகை இலங்கையில் அரச பயங்கரவாதம் குறித்தும் அதன் தாக்கம் குறித்தும், தமிழ்மக்கள் படும் அவலம் குறித்தும் ஆதாரத்துடன் விளக்கமாக ஆய்வு செய்து செய்தியை வெளியிட்டதால், அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பெருமளவிலான மக்கள் அதனையொட்டி எழுப்பிய அரச மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான கேள்விகளால் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் பதில் சொல்லமுடியாது அலமலந்துபோக கூட்டம் தோல்வியல் முடிந்ததாம்.

தாம் எதிர்பார்த்ததற்கு மாறாக நிகழ்வுகள் தடம்மாறிப்போனதால் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் அவமானமுற்ற நிலையில் தரக்குறைவாக கேள்விகேட்டவர்களுடன் பேசவும் நடக்கவும் முயன்றுள்ளார்கள். இது மனித உரிமைகளை அவர்கள் எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை மேலும் பகிரங்கமாக்கிவிட்டதாம்...

தமிழர் உரிமைகளை அவர்களுக்கு வழங்க மறுப்பவர்கள் மனிதஉரிமைகள் பற்றி பேச முயன்றது கோமாளித்தனமாக முடிந்து விட்டது. இவர்களின் இந்த மாநாட்டின் பின்னணியில் இயங்கிய பேரினவாதசக்திகள் இடிந்து போயுள்ளனராம்...

'உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்' என்றதும் உண்மைதான்...

## எல்லாம் மாயைதான்



இப்பொழுது மெல்ல மெல்ல மௌன சமாதி நிலைக்குள் புழுங்கிக் கொண்டிருப்பவர் அந்த; கோமாளி இளவரசரென வர்ணிக்கப்படும் சனாதிபதியின் அருமைச் சோதரரும், இப்போது அவரது கடும் கோபத்துக்குள்ளாகியிருப்பவருமான அநுரா பண்டார நாயக்க தான்.

அண்மையில், சனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வகையில்- அவரை அவமதிக்கும் வகையில், அரசு என்ற உரிமையை தாமாக சுயாதீனமாக எடுத்துக்கொண்டு நோர்வே அரசுக்கு, தூதர ரூடாக ஜே.வி.பியினர் எழுதிய கடிதம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை கலவரம் காரணமாக அநுரா மீது சந்திரிகா அனலாக மாறியுள்ளாராம்.

அந்த விஷமும் -விஷனமுமிக்க ஜே.வி.பி தோழர்களால் ஆரம்பம் முதலே அவலங்களையே சந்தித்துவரும் சந்திரிகாவுக்கு ஆத்திரமெல்லாம் அநுராமீதும், மங்கள சமரவீரமீதும்தான்.

இந்த இரண்டு பேரும்தான் ஜே.வி.பியினரை- அதுவும் தனது கணவரையே கொன்ற கொலைகாரக் கும்பலை கூட்டணிசேர்த்துக் கொள்ளுமாறு விடாப்பிடியாக நின்றவர்கள்....

சந்திரிகாவின் மந்த புத்தியோ அல்லது அவதந்திர புத்தியோ அநுராவினதும் மங்களவினதும் சொல்லைக்கேட்க வேண்டியதாயிற்று. அது இப்போது ஒட்டகத்திற்கு ஒண்டிக்கொள்ள இடங்கொடுத்த பாலைவனப் பயணியின் நிலைமையை சந்திரிகாவுக்கு ஏற்படுத்தி விட்டது.

ஜே.வி.பியினர் சந்திரிகாவின் தற்போதைய பலவீனமான அரசியல் ஸ்திரத்தன்மையை நன்கு பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். சந்திரிகா மீது தமது மேலாதிக்கத்தை செலுத்தத் தொடங்கிவிட்டார்கள்.

தங்களை விட்டால் சந்திரிகாவுக்கு தற்போது எந்தவிதமான கதியும் இல்லை என்பதில் ஜே.வி.பினருக்கு இப்போது அதீத நம்பிக்கை.

ஜே.வி.பியினரோடு முரண்டுபட்டால் அரசை கவிழ்த்துவிடுவார்கள் என்ற அச்சம் சந்திரிகாவுக்கு...

ஆகவே தான் தனது ஆத்திரத்தையெல்லாம் மங்களவையும்- அநுராவையும் நோக்கி சந்திரிகா திருப்பிவிட்டிருக்கிறார்.

ஜே.வி.பியினரை அடக்கி வாசிக்குமாறு கூறும்படி மங்களவையும் அநுராவையும் சந்திரிகா நெருக்க, அவர்கள் ஜே.வி.பியை நெருங்க, ஜே.வி.பியினர் இவர்களை நிராகரிக்க.... அரசுக்குள் குழப்பம் அதிகரித்துள்ளது ஒருபுறம் இருக்க, அடுத்த சனாதிபதித் தேர்தலில் அநுராவை ஆதரிப்பதாக முன்னர் தேர்தல் வாக்குறுதி யொன்றை வழங்கியிருந்த ஜே.வி.பி இப்போது தாங்கள் தனியாக ஒரு வேட்பாளரை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ள நிலையில் அநுரா வெந்து நொந்து போய்-

எல்லாம் மாயைதானா-பேதை
எண்ணம் யாவும் வீணா- ஏழை

எந்தன் வாழ்வில் இனி இன்பம் காண்பேனா? என்ற தேவதாஸ் பாட்டை பாடத் தொடங்கிவிட்டார் போலுள்ளது. அக்கா திட்டுகிறார், கட்சிக்காரர் கோபிக்கின்றனர், தோழர்கள் அவமதிக்கிறார்கள் பாவம் என்ன செய்வார்?

## குண்டுத்தாக்குதலின் பின்னணியில்...



கடந்த சனிக்கிழமையன்று இரவு கொழும்பு குதிரைப்பந்தய திடலில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியொன்றில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் அரசுக்கு பெரும் தலைவலியைக் கொடுத்துள்ளது.

கொழும்பில் குண்டு வெடித்தால் அது புலிகளின் செயல் எனப் பிரசாரம் செய்து அரசியல் லாபம் பெறத்துடிக்கும் ஆட்சியாளர்களுக்கு இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் அதற்கான காரணத்தை கூறமுடியாத நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த கலைநிகழ்ச்சியில் இந்தியாவில் இருந்து அழைக்கப்பட்டு வந்த கலைஞர்கள் பலர்கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்ல; இந்த கலை விழாவில் பார்வையாளர்களாக கலந்துகொண்டவர்களில் பெருமளவிலானோர் மேலோர் வட்டத்தைச் சார்ந்தவர்கள் என்பது கவனத்தில் கொள்ளவேண்டியதுமாகும்.

இந்த சம்பவம் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் இத்தாக்குதல் மேடையில் இருந்த கலைஞர்களைக் குறிவைத்தே நடத்தப்பட்டதாக தெரிவித்துள்ளமையால்- இது இந்திய இலங்கை உறவை சீர்குலைக்கலாம் என அஞ்சும் அரசு-சனாதிபதி செயலகமூடாக விடுத்துள்ள அறிக்கையில், நாட்டில் இனப்பிரச்சினைக்கு அமைதியான தீர்வினை எட்டவிரும்பாத தீயசக்திகளே நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் இதனை செய்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் பார்த்தால் சமாதான முயற்சிகளை இப்போது எதிர்ப்பவர்களும் குழப்பங்களை ஏற்படுத்தி அரசியல் ஆதாயம் பெற முயல்பவர்களும் பேரினவாத சக்திகளான ஹெல உறுமயவினரும், ஜே.வி.பியினரும்தான்... சனாதிபதி செயலகம் இவர்களை விரல் சுட்டியா அறிக்கையை வெளியிட்டுள்ளது?

பொலிசாரோ ஹெல உறுமயவினருடன் ஐ.தே.கட்சியினரையும் இணைத்துக் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஹெல உறுமய இச்சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் எவ்வித தொடர்பு மில்லையென்று அறிவித்துள்ளது. அரசே இச்சம்பவத்திற்கு பொறுப்பை ஏற்க வேண்டும் என தெரிவித்துள்ளது.

எப்படியோ ஆளையாள் மாறிமாறி குற்றம் சாட்டினாலும் இந்தக் கொழும்புக் குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகள் தென்பகுதி அரசியல் சக்திகள்தான் என்பது தெளிவாகியுள்ளது.

இத்தாக்குதலின் பின்னணியில் பௌத்த மதவாத சக்திகளே உள்ளதாகவும் இன்னொரு கருத்தும் தெரிவிக்கிறது. இதனையும் நிராகரிக்க முடியாது.

எதுவானாலும் இச்சம்பவம் தென்னிலங்கையின் ஆளும் ஆட்சியாளரும் பிரதான எதிர்கட்சியினரும், பௌத்த மத அமைப்புகளும், பேரினவாதிகளும் குண்டுத்தாக்குதல் அரசியல் கலாசாரத்திற்குள் இறங்கிவிட்டார்கள் என்பதையே ஒருவர்மீது ஒருவர் மாறிமாறி குற்றம் சுமத்துதல் நிரூபிக்கிறதல்லவா?

செங்குட்டுவன்

# சனநாயக வழியில் தீர்வு காண்பது சிங்கள தேசத்துக்கு பிடிக்காதா?

பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழர்களின் உரிமைகள் கிடைக்கபோவதில்லை. போர் மூலமே தமிழர் தம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனை இலங்கைத்தீவின் அரசியல் சித்தாந்தம் எடுத்தியம்புகின்றது.

இதுவரை காலமும் தமிழருக்கு என்ன நடந்தது? தற்போது என்ன நடக்கின்றது? இனி என்ன நடக்கப்போகின்றது? என கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும்

புலனாய்வுப் போரில் சிங்கள அரசு வெற்றி பெற்றிருக்குமானால் போர் என்றோ தொடங்கியிருக்கும். புலிகள் பலமாக இருப்பதால்தான் அரசு தமிழரை அழிப்பதற்கு தயங்குகின்றது.

தமிழரின் இராணுவப் பலம்தான் தமிழரின் உரிமையின் அளவையும் விடுதலையையும் தீர்மானிக்கும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் தமிழருக்கு எதை சொல்லி



படையினருக்கு புலிகள் சிம்மசொப்பனமாக மாறும் போதெல்லாம் ஒப்பந்தங்கள் பிறந்திருக்கின்றன. களைத்துப்போன இராணுவத்திற்கும், சரிந்து போன பொருளாதாரத்திற்கும் புத்துயிர் ஊட்டவே சிங்கள பேரினவாதிகள் சமாதான நாடகத்தை அரங்கேற்றிவருவது வரலாறாகிவிட்டது.

தமிழரின் உரிமைகளை வழங்க இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதற்காக சிங்கள ஆளும் அரசுகள் எதுவானாலும் சரி ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டு வந்ததாக வரலாற்றில் சரித்திரத்தில் இல்லை. தத்தமது ஆட்சிக காலத்தை இழுத்தடிப்பதற்கும் அரச இயந்திரத்தை இயக்குவதற்கும் ஒப்பந்தங்கள் பயன் படுத்தப்பட்டன.

ஒப்பந்தங்கள் பேச்சுவார்த்தைகள் என்று இனியும் தமிழர்கள் ஏமாறமுடியாது. கடந்த கால ஒப்பந்தங்களைப் புரட்டிப்பார்த்தால் சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்ததுபோல் இருக்கும். இது அர்த்தமற்ற கால இழுத்தடிப்புகள் என்பதும் தெரியும். இதில் சிங்கள ஆளும் வர்க்கத்தின் பேயாட்டங்களும், பித்தலாட்டங்களும், பூச்சாண்டிகளும், அரசியல் திருவிளையாடல்களும் குடியிருப்பது புரியும். ஆகவே மோசமான சமாதானத்தைவிட போர் நல்லது என்கின்ற மன நிலைக்கு மக்கள் மாறத்தொடங்கிவிட்டனர்.

தமிழர்களையும் அவர்களின் ஏகபிரதிநிதிகளாகிய புலிகளையும் அழிப்பது அல்லது பலவீனப்படுத்துவதில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் அனைத்தும் உறுதி குலையாது தளராது நிற்கின்றது என்ற சேதியினை கடந்தகால நடவடிக்கைகள் மூலம் சொல்லிவிட்டன.

தமிழரோடு தமிழரை மோதவைத்து சாகடித்து மக்களால் நிகராகரிக்கப்பட்டு திசைகெட்டு ஓடிய துரோகக் கூட்டங்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி உருவில்லாத ஒரு கட்சியாக தோன்றியிருக்கும் கருணாவின் தலைமையில் ஒரு கட்சியை உருவாக்க பிள்ளையார் சுழிபோட்டுள்ளது சந்திரிகா அரசாங்கம்.

சந்திரிகாவின் உள்ளத்தில் தூய்மையும் நேர்மையும் இருந்தால் சமாதானத்துக்கான முயற்சியில் அனைவரையும் ஒன்றிணைக்க முயற்சி செய்திருப்பார். ஆனால் அதை விடுத்து தமிழ் மக்களிடையே முரண்பாட்டை உருவாக்கி தமிழ் மக்களை பிரித்தாளும் தந்தி

வருகின்றார் என்பது தெட்டத் தெளிவாகப் புலனாகின்றது.

கருணாவை புலனாய்வு ரீதியில் தோல்வி கண்டசிங்கள அரசு இன்று அரசியல் சதுரங்கத்தில் ஆட்டம்போட இறங்கியுள்ளது.

சிங்கள அரசாங்ம் பாலுக்கு காவலாகவும் பூனைக்கு தோழனாக பேச்சை தொடங்கு வதற்கும் அதனைக் குழப்பியடிப்பதற்கும் காரண காரியங்களைத் தேடி காய் நகர்த்துகின்றது.

குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் பாணிதான் அரசாங்கத்தின் பாணி.

அரசாங்கத்தின் இராஜதந்திர நகர்வுகளை உற்று நோக்கும்போது அரசு சமரச வழியில் தீர்வுகாண விரும்பவில்லை எனவும் போர் மூலமே தீர்வுகாண முனைகின்றது என்பதும் புரிகின்றது.

அரசு பேச்சுவார்த்தைகளை தொடர ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லையானால் தமிழரின் உரிமைகளை சனநாயக வழியில் மறுக்கின்றது என்று அர்த்தம்.

தமிழர் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டதால் தமிழர்கள் போர்ப்பயணம் தொடர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என்பது அர்த்தம்.

சிங்களத் தரப்பு போர்க்களத்தில் தமிழர் தரப்பை சந்திக்க விரும்புகின்றது. தமிழினத்தை அழித்தொழிக்க முனைகின்றது என்பது அதற்குள் ஒளிந்திருக்கும் செய்தி என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும்.

சிங்களத்தின் இவ்வாறான உணர்வுகளைப் பரிசீலனை செய்தால் சமரச வழியில் சிங்கள அரசுடன் தொடர்ந்து பேசுவதில் அர்த்தமில்லை என்பது வெளிப்படுகிறது.

சமாதானம் பேச்சுவார்த்தை யுத்த நிறுத்தம் என காலம் இழுத்தடிக்கப்படுவதை தமிழர்கள் இனியும் ஏற்றுக்கொள்ளமுடியாது.

அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அணுவளவு பயனும் இல்லை. இது விளலுக்கு இறைக்கும் நீர் போன்றது. ஆனால் சர்வதேசத்திற்கும் இந்த யதார்த்த உண்மையினைப்புரிய வைத்து புலிகள் போர் வெறியர்கள் அல்ல. மக்களின் உரிமைக்காகப் போராடும் விடுதலை இயக்கம் என்றும் அது பயங்கரவாத இயக்கம் அல்ல என்பதையும் நிறுவுவது மட்டும்தான் போர் ஓய்வை நீடித்ததால் ஏற்பட்டபயன்.

தற்காலிகமாக வேனும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாத அரசாங்கத்தால் எப்படித் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண முடியும்.

சமாதானம் என்ற போர்வையில் போராட்டத்தை இழுத்தடித்து அதனை மழுங்கடிப்பதே பொதுவான உலகத் தந்திரோபாயம். அந்த தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி புலிகளையும் பலவீனப்படுத்துவதற்கே அரசு முனைக்கின்றது.

தமிழரின் உரிமைகளை வழங்க வேண்டும் என அரசு அணுவளவும் சிந்திக்கவும் இல்லை. விரும்பவும் இல்லை. தமிழரின் உரிமைகளைத் தரப்போவதும் இல்லை.

ஆகவே தமிழர்கள் சுதந்திரமாகவும் கௌரவமாகவும், நிம்மதியாகவும் வாழவேண்டுமானால் இது சுதந்திர தமிழீழத்தில்தான் சாத்தியமாகும். சுதந்திர தமிழீழம் காணும்வரை தமிழர்கள் சளைக்காது போராடியே தமது உரிமைகளைப் பெறவேண்டும்.

யுத்த நிறுத்தம் சமாதானம் பேச்சுவார்த்தை என்ற மாயையில் தமிழர்கள் மயங்கிவிடக் கூடாது. நோர்வேயின் சமாதான நல்லெண்ண முயற்சிகளுக்கு தமிழர்கள் ஒத்துழைத்தாலும் புலிகளும், தமிழரும் தம் தமிழீழம் என்ற அடிப்படை கோட்பாட்டிலும் இலட்சியத்தில் லுமிருந்து வழிதவறிவிடவில்லை.

சிங்கள அரசு தமிழர்களுக்கு நீதியான முறையில் நேர்மையான வழியில் உரிமையினை வழங்கப்போவதில்லை என்பதனை கடந்த காலம் தெளிவாக சுட்டி நிற்கின்றது. இந்த யதார்த்த உண்மையினை சமாதான மத்தியஸ்தர்களும் மிகவிரைவில் புரிந்து கொள்வார்கள். அத்தோடு உலகமும் அறிந்து கொள்ள நீண்ட காலம் எடுக்கப்போவதில்லை.

சனநாயக வழியில் தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு சிங்கள தேசம் என்றோ கதவடைத்துவிட்டது.

எனவே தமிழீழத்தைத் தவிர எந்த மாற்றுத் திட்டமும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாக அமையமாட்டாது.

ஆராய்ந்தால் புரியும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தமிழரின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என நினைப்பது பகல் கனவுக்கு ஒப்பானது போல நிலைமை இருக்கிறது.

யுத்தத்தின் மூலம் தமிழர் தாயகத்தில் இருந்து சிங்களப்படைகளை அடித்து விரட்டுவதன் மூலம் மட்டுமே தமிழர்கள் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதுதான் தமிழர்கள் தம் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள சாத்தியமான வழியென சிங்கள தேசம் நடக்கிறது.

இந்த நிலையில் தமிழர்கள் இனி என்ன செய்ய வேண்டும். போருக்கு தயாராக வேண்டும். போருக்குச் செல்வதைவிட வேறு வழி தமிழருக்கு இருக்கிறதா?

சிறிலங்கா அரசு புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தக்கூட தயாரில்லாத போக்கையே காட்டுகிறது.

போர்தான் தமிழரின் உரிமையினைத் தீர்மானிக்கும் அம்சமாக திணிக்கப்படுகிறது. எத்தனை தொன் படைப்பலம் தமிழரிடம் உள்ளதோ அத்தனை தொன் உரிமையே கிடைக்கும்.

தமிழரின் படைப்பலம் கூடக் கூட தமிழரின் உரிமையும் கூடிக் கொண்டே போகும். தமிழரின் இராணுவப் பலம் குறைந்தால் உரிமையும் குறையும்..

வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இவ் நிதர்சன உண்மை புரியும். சிங்கள இனவாத ஆளும் வாதத்திடம் பேச்சுவார்த்தை என்ற மாயா ஜாலங்களில் தமிழர்கள் மதிமயங்கிவிட முடியாது.

புலனாய்வுப் போரில் புலிகள் வென்றதனால்தான் பேச்சுவார்த்தை என்ற மாயை இன்னும் இழுபடுகின்றது.

யிருக்கின்றது என நோக்கவேண்டும். டட்லி செல்வா ஒப்பந்தமும் பண்டா செல்வா ஒப்பந்தமும் சனநாயக வழிப்போராட்டங்கள் படுதோல்வியில் முடிந்ததே சரித்திரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயுதப்போராட்டங்கள் பேருருவெடுத்த பின்னர்தான் திம்புப் பேச்சுவார்த்தை, வட்ட மேசை மாநாடு இந்திய-இலங்கை ஒப்பந்தம், புலிகள்-பிரேமதாச பேச்சு புலிகள்- சந்திரிகா பேச்சு சந்திரிகாவின் தீர்வுப் பொதி, பிரபா-ரணில் ஒப்பந்தம் மீண்டும் சந்திரிகா- புலிகள் பேச்சு எனத்தொடரும் தொடர்கதைகள் தமிழர்களுக்கு என்ன பாடத்தை புகட்டியிருக்கின்றது.

எங்கள் உரிமைகளை வழங்க மறுத்தால் எமது உரிமைகளை அடித்து எடுப்போம் என்பதனை சொல்லியிருக்கின்றது.

அரச பயங்கரவாதமும் அரச பயங்கரவாதிகளும் ஒப்பந்தங்களை எல்லாம் தீப்பந்தங்களாக மாற்றி தமிழர் விடுதலைப்போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதற்கு பயன்படுத்தியதாகவே அமைந்தது.

தமிழ் மக்களை ஏமாற்றுவதற்கு பேச்சுவார்த்தை என்ற மாயாஜாலத்தை தந்திரோபாய அரசியல் நாடகங்களாக அரசாங்கங்கள் மேடையேற்றியதே வரலாறு.

பேச்சுவார்த்தை என்ற வலையில் தமிழர்களையும், புலிகளையும் வீழ்த்தி அதில் சிக்க வைத்து பணிய வைப்பதற்காகவே ஒப்பந்தங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டன.

அதேபோல் இன்றும் சனாதிபதி சமாதானப் பிரியை என்று போலி வேடம் பூண்டு பேச்சுவார்த்தை என்ற நாடகத்தை அரங்கேற்றி தமிழர்களையும் உலகையும் ஏமாற்ற நாடகம் நடித்துக்கொண்டிருக்கிறார்.

ரோபாயத்தையேகையாள்கின்றார். . தமிழ மக்களை பிரித்தாளும் அரசியல் தந்திரோபாயத்தில் தமிழர்களின் ஏகபிரதிநிதிகளாக உருவெடுத்திருக்கும் தமிழீழவிடுதலைப்புலிகளுக்கு எதிரான அணியொன்றை உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்கு அம்மையார் இன்று ஆட்டம் போடுகின்றார்.

அதற்காக வேதாளங்களை எல்லாம் முருங்கை

**ச.சங்கரன்**

மரத்திலேற்றி ஆடவைப்பதற்கு அம்மையாரின் அரசாங்கம் காய் நகர்த்துகின்றது.

தமிழர்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்ற எண்ணக்கருவைச் சிதைத்து தமிழ்த் தேசத் துரோகக் கூட்டங்களுக்கு மாற்றுக் கருத்துடையோர் என மகுடம் வழங்க அவர்களையும் பேச்சு மேசைக்கு இழுக்க அரசு போடும் திட்டமிது.

புலிகளுடன் மட்டும் இறுதித்தீர்வுகாண முடியாது. தமிழர்களிடம் மாற்றுக்கருத்துடையோர் உள்ளனர் என்பதனால் அனைத்து தரப்பையும் அணைக்க வேண்டும் எனக் கூறுவதற்கு தனது சேலைக்குள் பொத்தி வைத்திருக்கும் குழப்பக் காரர் கருணாவையும், டக்ளசையும், தாயகத்தை விட்டோடிய தேசவிரோதிகளையும் கொண்டு அரசியல் பேச்சை குழப்பியடிக்கவே அம்மையாரின் சமகால முயற்சிகள் இடம்பெறுகின்றன.

சனாதிபதியின் குத்துக் கரணங்களும் சந்தர்ப்பவாத வேடங்களும் தமிழர்களுக்கு அரசு மீது சந்தேகத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. அதனால் அரசாங்கம் மீதும் சமாதானம் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்துவிட்டனர். சந்திரிகா புலிகளுடன் பேச்சு என முழங்குகின்றார். ஆனால் திரைமறைவில் பேச்சை சிதைப்பதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 17 . 12 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# தொடரும் துர்க்குறிகள்...!

புலிகள் இயக்கம் பெரும் எதிர்பார்ப்போடு- சமாதான முயற்சியை முன்நகர்த்தும் நோக்கோடு- ஒரு தலைப்பட்சமாக யுத்த-நிறுத்தத்தை அறிவித்து எதிர்வரும் இருபத்தைந்தாம் திகதியோடு மூன்றாண்டுகளாகிறது.

இந்த மூன்றாண்டுகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்களுக்கு தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல 'அரசியல் வெறுமையாக' கைநழுவிப்போகிறது.

துயரங்களுக்குள்ளிருந்து பெரும் நம்பிக்கையோடு சமாதான முயற்சியை நோக்கிய தமிழ் மக்களுக்கு வெறும் 'ஏமாற்றங்களே' பரிசளிக்கப்பட்டன.

சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்டு, ஆறு சுற்றுப்பேச்சுக்கள் உலகின் பல்வேறு நாடுகளின் தலைநகரங்களில் நடைபெற்று, பல குழுக்கள் அமைக்கப்பட்டு, பல்வேறு நாட்டு அரச பிரதிநிதிகள் வன்னிக்கு விஜயம்செய்தபோதும், படிப்படியாக சமாதானத்துக்கு எதிரானதுக்குறிகளே ஆரம்பம் முதல் தோன்றின.

பேச்சுக்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட உப குழுக்கள் செயலிழந்தன. புலிகளை புறந்தள்ளி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டம் டோக்கியோவில் கூட்டப்பட்டது. சமாதான முயற்சியை முன்னெடுத்த ரணில் அரசின் மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை பறித்து ரணிலை தெருவில் விட்டார் சந்திரிகா. பின்னர் இனவாதத்துள் தோய்ந்து ஊறிப்போன ஜே. வி. பி. யோடு கூட்டுச்சேர்ந்து ஆட்சி அமைத்தார் சனாதிபதி சந்திரிகா. இவ்வாறு சமாதானத்திற்கெதிரான துர்க்குறிகள் ஆரம்பம் முதலே படிப்படியாக தோன்றின.

ஆயினும் தமிழ் மக்களோ, புலிகள் இயக்கமோ சமாதான முன்னெடுப்புக்கள் மீது நம்பிக்கை இழக்காமல், சனநாயக வழியில் பற்றுறுதிகொண்டு ஒரு தேர்தலை சந்தித்து, சனநாயக வழியில் தமிழர்களின் அபிலாசையை தமிழ் மக்கள் ஒருமித்து வெளிப்படுத்த, இன்னொருபுறம் புலிகள் இயக்கம் சனநாயக ரீதியான தமது தார்மீக பலத்தை நிருபித்தனர்.

ஆயினும் என்ன நடந்தது? என்ன நடக்கிறது?

தமிழர் பிரச்சினையை தீர்க்ககூடிய எந்த வழிமுறையினுள்ளும் அரசு தனது கவனத்தை செலுத்த தயாரில்லாத நிலையிலே செயற்படுகின்றது.

இந்த நிலையில் தேசியத்தலைவர் மாவீரர் தின உரையில் "அவசர அழைப்பு" ஒன்றை விடுத்திருந்தநிலையில் சமாதான முயற்சியின் அனுசரணையாளர்களான நோர்வே அரசின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் இலங்கைக்கான விஜயம் முக்கியம் பெற்றிருந்தது.

எரிக்சொல்ஹெய்மின் இந்த விஜயத்தின் போது அரச தரப்பில் இருந்து ஒரு உருப்படியான தகவலை புலிகள் இயக்கத்திற்கு கொண்டுவரவில்லை இதனால்.

ஆயினும் எரிக்சொல்ஹெய்மின் இந்த விஜயமும் எந்த எதிர்பார்ப்பையும் நிறைவு செய்யாததோடு ஒரு பயனற்ற பயணமாகவே அமைந்திருக்கின்றது.

இதனையே எரிக்சொல்ஹெய்ம் உடனான சந்திப்பின் பின்னர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களும் குறிப்பிட்டிருந்தார்.

"எந்தவித நம்பிக்கையும் சந்திப்பில் ஏற்படவில்லை. புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகள், சம்பவங்கள் தெற்கிலே இருந்து வருகின்ற சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்கள், இவற்றை வைத்துப்பார்கின்றபோது பேச்சுவார்த்தையோ, சமாதான முன்னெடுப்புக்களோ, ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் நோக்கின் சமாதானத்தின் ஆயுளை சிங்களதேசம் குறைத்து வருவதை அவதானிக்ககூடியதாக உள்ளது.

ஆனால், சமாதானத்திற்கான எந்த நம்பிக்கை கீற்றுக்களையும் உருவாக்க முயலாத அரசு போருக்கான எல்லா தயாா நிலைப்படுத்தலைச்செய்வதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே எதிர்பார்ப்புக்கும் ஏமாற்றத்திற்கும் இடையில் சமாதானம் இப்போது கிழிபடுகிறது. இந்த நிலை எதுவரை நீடிக்கப்போகின்றது என்பதில் தான் சமாதானத்தின் இறுதி ஆயுள் தங்கியிருக்கிறது.

இதேநேரம் தமிழ் மக்களின் சலிப்பை வெளிப்படுத்தியாகிவிட்டது. தமிழ் மக்களை இனியும் பொறுத்திருக்குமாறு எவரும் கோரமுடியாத அளவிற்கு தமிழ் மக்களும் புலிகளும் பொறுத்திருந்தாகிவிட்டது.

ஆகவே தமிழ் மக்களுக்கான தீர்வை சமாதானவழியில் காணவேண்டுமாயின் அதற்கு சாதகமான பதிலை தெற்கிலிருந்து விரைவாகப்பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கே உண்டு.

# தொடர்மழையின் சீற்றம்

தமிழ் மக்களுக்கு கோடையும், மாரியும் மாறி மாறி ஓர் பாரியதாக்கத்தை, இழப்புகளை உளபாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்துள்ளதுடன் பல ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும் அழிந்துள்ளன.

இதில் பாரிய இழப்பு என்னவெனில் கோடையில் ஏற்பட்ட வரட்சியின் காரணமாக பல விவசாயிகள் தங்கள் பயிர் அழிந்து அடுத்த கட்ட பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாமல் கடன் பெற்று காலபோக பயிர்ச்செய்கை மேற்கொண்டனர். இப்போது வெள்ளம் அதனையும் அழித்து கையறு நிலையில் உள்ளனர் இது அண்மைய வெள்ளப்பெருக்கு ஏற்படுத்திய வட கிழக்கு மக்களின் பயிர் அழிவுத் தாக்கம். இத்தாக்கத்தால் இனிவரும் காலங்களில் தற்போது உள்ளதை விட அரிசியின் விலை அதிகரிக்கப்துடன் விவசாயிகளின் கடன் சுமை கூடி அடுத்த கட்ட உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவது தடைப்படும். இதனால் உற்பத்தி வீழ்ச்சியும், வறுமையும் ஏற்பட வாய்ப்புண்டு .



மக்களின் வாழ்விட அழிவுகள் ஒரு கொடிய யுத்தத்திற்கு முகம் கொடுத்து தங்களின் அனைத்து உடமைகளையும் இழந்து தமது வாழ்க்கையை 'சைபரில்' இருந்து ஆரம்பித்த மக்கள் இவ்வாறானதொரு இழப்பை மீளவும் சந்தித்துள்ளனர்.

ஏற்கனவே மீள்குடியேறிய மக்களுக்கு மீள்குடியேற்ற கொடுப்பனவு முழுமையாக வழங்கப்படாது வறுமையில் வாழும் இம்மக்களுக்கு வெள்ள இடப்பெயர்வு இன்னுமொரு துன்பம் எனலாம். இவற்றை விடவும் வெள்ளம் பொதுவாக ஏற்படுத்திய விளைவுகள் பல. குறிப்பாக யுத்தத்தினால் எந்தவொரு காலத்திலும் புனரமைக்கப்படாத வீதிகள், புனரமைக்கப்படாத குளங்கள், என்பன அண்மைய காலத்தில் சிறிய அளவிலாவது தற்காலிக புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் வெள்ளம் வீதிகளையும் குளங்களையும் முன்னைய நிலைக்கு கொண்டு வந்துள்ளது.



சில குளங்கள் உடைப்பெடுத்ததுடன் கடந்த மூன்று ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட கட்டுமானங்களையும் அர்த்தமற்றதாக, பிரயோசனமற்றதாக ஆக்கியுள்ளது. சில வீதிகளினுடான போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. இதில் பலகோடிரூபா செலவில் நன்கு திட்டமிட்டு அனைத்து தொழில்நுற்ப பிரயோகத்துடனும் புனரமைக்கபட்ட A9 நெடுஞ்சாலை பல இடங்களில் முன்னைய நிலைக்கு வந்தள்ளது. இதைவிட இனிவரும் காலங்களில் மக்கள் தொற்று நோய்த்தாக்கத்திற்கும் ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மழை வெள்ளம் தற்போது நடைபெறும் சாதாரண தர பரிட்சைக்கு தோற்றும் மாணவர்களின் இயல்பான செயற்பாட்டையும் குழப்பியுள்ளது. இதுவரை பரீட்சைகள் எவையும் பிற்போடவில்லை. ஆனால், சில பிரதேசங்களில் படகுகள் மூலம் பரீட்சார்த்திகள் செல்ல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு வடக்கு கிழக்கு மக்கள் வெள்ளப்பெருக்கினால் சந்தித்த துன்பங்கள் சொல்லில் வடிக்கமுடியாதவை. இதில் கிழக்கு மாகாணத்தில் கல்முனையில் 13000 குடும்பங்களும், நிந்தவூரில் 5700 குடும்பங்களும், காரைதிவில் 2500 குடும்பங்களும், சாய்ந்த மருதில் 2500 குடும்பங்களும், அட்டாளைச் சேனை 5000குடும்பங்களும், நாவிதன் வெளி 1500குடும்பங்களும் திருக்கோயில் 5783 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். வடமாகாணத்திலும் பல ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்து நிர்க்கதி நிலையில் உள்ளனர்.

இவ்வாறு இடம் பெயர்ந்து நிர்க்கதி நிலையில் இருக்கும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம், சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றதுடன், சர்வதேச, மற்றும் ஏனைய தொண்டு நிறுவனங்களின் உதவியையும் கோரியுள்ளது. இதுவரை நிவாரணப் பணிக்காக அரசு 70 இடட்சம் ரூபா ஒதுக்கியுள்ளதாக தெரிய வருகின்றது. இத்தொகை பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சுற்று நிவாரணப் பொருட்கள் வழங்கக்கூட போதுமானதாக இருக்காது. எனவே இவ்விடயத்தில் சர்வதேசசமூகம் மனிதாபிமான உதவிகளை வழங்கவேண்டிய கட்டாய நிலையில்உள்ளது.

இம்மக்கள் எதிர் கொள்ளவுள்ள பேராபத்துகளில் ஒன்றான சுகாதார தொற்றுநோய்களை தவிர்ப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்ளபாடுகளையும், நோய் தொற்றாது பாதுகாப்பதற்கான முன்னேற்பாடுகளையும் மேற்கொள்ளவேண்டியுள்ளது. குறிப்பாக மழைவெள்ளத்தால் கிணறுகளை மேவிப்பாயும் மழைநீரினால் கிணற்று நீர் மாசுபட்டுள்ளது. இதனையே மக்கள் பயன்படுகின்றார்கள் இவற்றுக்கு சில இடங்களில் நீர்வழங்கப்பட்டாலும் எல்லா இடங்களிலம் இவ்வாறு நீர்வழங்க முடியாத நிலைகாணப்படுகின்றது.


இவ்வாறு தொடர்ந்து பெய்த கன மழையினால் தமிழ்மக்கள் பெரும் அழிவையும் துயரத்தையும் சந்தித்துள்ளனர். ஆனால் அழிவுக்கும் அவலத்துக்கும் உள்ளான தமிழ் மக்களுக்கு உடனடி நிவாரணங்களை வழங்ககூடியதாகவோ, வழங்கக்கூடிய வசதிகளை கொண்டதாகவோ அரச கட்டமைப்பு இல்லாத ஒரு துயர நிலையும் இங்கு காணப்படுகிறது.

மக்கள் தொடர்மழையினால் தமது வாழ்விடங்களில் இருந்து இடம்பெயர்ந்து தமக்கான தேவை களுக்கென பற்றாக்குறைகளை எதிர்நோக்க அரச கட்டமைப்புக்களோ இல்லை என்கின்ற துயரநிலையில் திணறுவதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறு தொடர் கன மழையின் துயரத்தை தமிழ் மக்கள் சந்தித்து தமக்கான நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

அ.பிரகாஷ்

# இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட மணலாறு மக்கள்



க.ஐயாத்துரை,
கொக்குளாய்.
(1977 ஆம் ஆண்டில் கிராம சபை செயலாளராகவும் முல்லை பிரஜைகள் குழு உறுப்பினராகவும் இருந்தவர்) “எங்கட ஊருக்குகூலிக்குத்தான் சிங்களவர்கள் வந்தவர்கள் கடைசியில எங்கள விரட்டினதும் அவங்கள் தான்”

அகதி வாழ்வு என்பது தமிழர்கள் அனைவரும் அனுபவித்த, அனுபவிக்கின்ற ஒன்று. ஆனால் தென்னமரவாடி, கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி என மணலாறு மாவட்டத்தின் கிராமங்களை சேர்ந்த மக்கள் அகதி வாழ்வின் இருபது ஆண்டை பூர்த்திசெய்து இன்றும் அந்த பழைய கசப்பான நாட்களை நினைவிற்கொண்டு கண்ணீர் பனித்து நிற்கின்றனர்.

1984ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21,22 ஆம் திகதிகளில் இராணுவத்தாலும், சிங்கள காடையர்களாலும் அடித்தும், வெட்டியும், வெளியேற்றப்பட்டு உடைமைகள் இழந்து உறவுகளை பிரிந்து ஊர் இழந்து கண்ணீருடன் வெளியேறி இரவிரவாக காடுகளூடாக நடந்து வற்றாப்பளை அம்மன் கோவிலில் தஞ்சமடைந்து இன்றுவரை இவர்கள் அகதிகளாக, நிலமற்றவர்களாக தங்கள் சொந்த ஊர் தெரியாத ஒரு தலைமுறையை தோற்றுவித்து இன்றும் கண்ணீருக்குள் வாழுகின்ற இம்மக்களை சந்தித்து அவர்களின் துயரங்களை பகிர்ந்து கொண்டோம். அந்த வகையில் 1977ஆம் ஆண்டு கொக்குளாய் கிராம சபை செயலாளராக இருந்தவரான ஐயாத்துரை அவர்கள் தொடர்ந்து கூறுகையில் கூறியவை.


கொக்குளாய் கிராமத்தில் 1970 ஆம் ஆண்டளவில் நீர் கொழும்பில் இருந்து சிங்களவர்கள் கடல்தொழில் செய்ய வருவதுண்டு. அதுவும் எமது தமிழ் மக்களுக்கு கூலிக்குத்தான் செய்வார்கள். இவ்வாறு தொழிலுக்கு வரும் சிங்களவர்களில் நான்கு குடும்பங்களை எமது அனுமதியுடன் நாம் பாவ இரக்கம் பார்த்து 1979 ஆண்டளவில் கடற்கரை பகுதியில் தற்காலிகமாக இருத்தினோம். அதன் பின்னர் இவர்களுக்கு துணையாக சிங்கள இராணுவமும் காவல்துறையினரும் கொலைக்குற்றத்தின் பேரில் வெலிக்கடை சிறையில் இருந்த களுமல்லி என்பவன் குடியிருத்தப்பட்டான். இவன் தமிழ்மக்களை துன்புறுத்தியதுடன் சிங்கள காடையர் கூட்டம் ஒன்றையும் உருவாக்கி அடாவடித்தனங்கள் புரிந்தான். எம்மை ஊரை விட்டு வெளியேறுமாறு இராணுவம் பணித்தபோது இந்த களுமல்லியும் இராணுவத்துடன் சேர்ந்து எம்மை விரட்டினான்.

“அது 1984.12.22ஆம் திகதி ஒலி பெருக்கியில இராணுவம் அறிவித்தது உடனடியாக வெளியேறுமாறு. அதோட ஒரு சில மணித்தியாலங்களில சிங்கள காடையர்களும் இராணுவமும் மக்களை அடித்து விரட்டியது. நாங்கள் உடுத்த உடுப்போடு வீட்ட விட்டுட்டு தண்ணீரூற்றுக்கு வந்தோம்.” இவ்வாறு கூறுகிறார் கொக்குளாய்யை சேர்ந்த ஐயாத்துரை அவர்கள்.

(இவர் 1990 ஆம் ஆண்டளவில் இனம் தெரியாதோரால் கொல்லப்பட்டார்.) நாம் இடம் பெயர்ந்து வந்து வற்றாப்பளை கோவிலில் இரண்டு மாதம் இருந்தோம். கிராமங்களில் தெரிந்தவர்களின் காணிகளில் கொட்டில் போட்டு இருந்தோம். அவ்வேளையில் கூட எமது நிலத்தில் சிங்களவர்களை குடியேற்றக்கூடாது என்றும் எமது நிலத்தில் எம்மை வாழவிடுமாறு கோரியும் முல்லை அரச அதிபர் பணிமனையின் முன் ஆர்ப்பாட்டப் பேரணிகளையும் செய்தோம். ஆனால பயன் ஏதும் கிட்டவில்லை. பின்னர் இந்திய இராணுவம் வருகை தந்த போது அவர்களிடம் கூட எமது நிலத்தில் சிறிலங்கா அரசு திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்வதை நிறுத்தவேண்டும் எனவும் எமது நிலத்தை நாம் பார்க்க வேண்டு மெனவும், கோரி இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி, டிக்சித் மற்றும் முல்லை இந்திய இராணுவத் தளபதி டாட்டா ஆகியோருக்கும் மகஜர்கள் கொடுத்தோம். பயனேதும் இல்லை. அதன் பின்னர் இந்திய இராணுவத் தளபதி டாட்டா எமது கிராமங்களை பார்வையிட அனுமதியளித்து சென்று பார்த்தோம். எமது கிராமத்தின் பெரும்பாலான நிலங்களில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டிருந்தனர். கொக்குளாய் அம்மன் ஆலயம் உடைக்கப்பட்டிருந்தது. புதிய பௌத்த ஆலயங்கள் கட்டப்பட்டிருந்தன. காணிகளில் நின்ற தென்னைகள் தறிக்கப்பட்டு, ஏனைய பயன் தருமரங்கள் அழிக்கப்பட்டிருந்தன. கால்நடைகள், வீடுகள் எமது அனைத்து உடைமைகளும அழிக்கப்பட்டிருந்தன. இதைப் பார்த்த பல பெண்கள் தங்கள் தலையில் அடித்து அழுதனர். 7500 க்கும் அதிகமான மக்கள் இதை பார்வையிட்டு இந்திய இராணுவத்திற்கு முறையிட்டோம். இந்திய இராணுவ தளபதி இலங்கைப்பிரதமருக்கு கடிதம் அனுப்பி அவருக்கு வந்த பதிலில் எமது கிராமத்தில் 1931 ஆம் ஆண்டில் இருந்தே சிங்களவர்கள் வசித்து வருகிறார்கள் என்று பிரதமர் எழுதியுள்ளதாக கூறினார். அத்தோடு எமது முயற்சியை கைவிட்டு விடவில்லை. தொடர்ந்தும் நாம் பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தோம். பின்னர்.1990ஆம் ஆண்டு 2ஆம் மாதம் எமது கிராமங்களில் குடியேற அரசு அனுமதித்தது.



தங்களை சொந்த இடத்தில் குடியமர அனுமதிக்குமாறும் சிங்கள குடியேற்றங்களை தடுத்து நிறுத்து மாறும் இந்தியப் பிரதமர் உள்ளிட்ட பல முக்கியஸ்தர்களுக்கான மகஜர்களை இந்திய இராணுவ தளபதிடாட்டா விடம் கையளிக்கும் முல்லை பிரஜைகள் குழு பிரதிநிதிகள். (1988)



சொந்த இடத்தில் குடியேற விடுமாறு முல்லைத்தீவு கச்சேரி முன்பாக 1987ல் ஆர்ப்பாட்டம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கு மணலாறு மக்கள்.



நா.மகேந்திரன்,
கொக்குத்தொடுவாய்.
“எல்லாம் ஊரை விட்டுப்போங்கோ இல்லாட்டி சுடுவம் என்றாங்கள். சிலர் ஒளிச்சிருந்தவை அவையல பிடிச்சு ரோட்டில போட்டு எரிச்சவங்கள்.”

குடியேறி நான்கு மாதங்களின் பின் 6ஆம் மாதம் மீளவும் இராணுவம் விமானங்கள் மூலம் துண்டுப்பிரசுரங்கள் போட்டு எம்மை எழுந்து போகுமாறு கூறியதுடன் சிலமணி நேரங்களில் விமானத்தாக்குதல் களையும் மேற்கொண்டது. சிங்கள காடையர்களும் எம்மை அச்சுறுத்தி விரட்டினர். நாம் மீளவும் இடம் பெயர்ந்து இப்பகுதிகளில் வந்து இன்றுவரை இரவல் காணியில் வாழ்ந்து வருகின்றோம் என்கிறார் அவர்.



சு.இராசரத்தினம்,
கருநாட்டுக்கேணி.
“நாங்கள் எங்கட இடத்தில போய் நிம்மதியாய் வாழ வேணும் என்றுறதுதான் எங்கட கடைசி ஆசை. இதுக்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேணும்.”

இவ்வாறுதான் கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, மற்றும் தென்னைமரவாடி கிராமமக்களும் கூறுகின்றனர். இவ்வாறு மணலாறு மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் முல்லைத் தீவின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள சில கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் விவசாயம் செய்பவர்களாகவும் ஏனையோர் மீன்பிடித் தொழில் செய்பவர்களாகவும் உள்ளனர். இடம்பெயர்ந்த மக்களின் ஒரு பகுதியினர் முல்லைத்தீவில் பொன்நகர் எனும் கிராமத்திலும் ஏனையோர் தண்ணீரூற்று, முள்ளியவளை, பூதன் வயல், தண்ணிமுறிப்பு, ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் பல்வேறு கஷ்டங்கள் உள நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். சில குடும்பங்கள் விவசாயம் செய்யக்கூடிய வசதியிருந்தும் விவசாய நிலங்கள் இன்றி தொழில் செய்யமுடியாமலும், குடியிருக்கும் காணிகளின் உரிமையாளர்களுடன் ஏற்படுகின்ற மனத்தாக்கங்கள் சம்பவங்களுடனும், அடிப்படை வசதிகள் இன்றியும் வாழ்ந்து வருகின்றனர். கூலித் தொழில் செய்து தமது நாளாந்த வாழ்க்கையை செலுத்தும் இம் மக்கள் சமாதான காலம் என்கின்ற இந்த மூன்று ஆண்டு காலத்தில் தங்களை சொந்த இடத்தில் குடியமர்த்த மேற்கொண்ட நடவடிக்கை எதுவும் அரசினால் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

1979ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க மகாவலி அதிகாரசபை செயற்சட்டத்தின் கீழ் இப்பிரதேசம் ஒரு சிறப்புப் பிரதேசமாக சிறிலங்கா அரசால் அறிவிக்கப்பட்டு திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களின் பல கிராமங்களில் இருந்த மக்கள் கட்டாயப்படுத்தி வெளியேற்றப்பட்டனர். இதில் மகாவலி ‘எல்’ வடிவ திட்டம் என்ற போர்வையில் வெலிஓயா என சிங்களப் பெயரிட்டு அரசு மேற்கொண்ட ஒரு துரித நடவடிக்கை. இதில் உருவாகியது தான் இந்த வெலிஓயா எனும் பிரதேசம். தமிழர்களின் பூர்வீக நிலங்கள் சிங்கள அரசால் அவ்வப்போது பறிக்கப்பட்டு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. திட்டமிட்ட சிங்கள குடியேற்ற திட்டங்களுக்காக தமிழ் மக்கள் விரட்டப்பட்டு இன்றும் அகதி வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள். அவ்வாறு வாழும் அகதிகளில் இரண்டு தசாப்தங்களை எட்டிய மக்களாக கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி தென்னைமரவாடி மக்கள் உள்ளனர். “என்ர உயிர் சொந்த மண்ணில்த்தான் போகோணும்” என்றும். “எனது காணியின் எல்லையை மகனுக்குக்காட்ட வேணும்” எனவும் “அப்ப நான் சின்னப் பெடியன் அந்த கடற்கரை நல்லா நினைவிருக்கு. அதைதிரும்பப் பாப்பேனோ தெரியேல்ல” எனவும் பலவாறு ஏங்கித் தவிக்கும் இம்மக்களின் ஆசைகள் நிறைவேறுமா? அல்லது வெலிஓயாவுக்காக பலியாகிப் போகுமா?



அ.யோகராணி,
தென்னைமரவாடி.
“இடம் பெயர்ந்து பள்ளிக்கூடத்தில் இருந்த எங்களை கண்ணாடி சந்திரண்ணைதான் பொன்நகர் குடியிருப்பில குடியமர்த்தினவர் எங்கட ஊரில சிங்களவர்கள் தான் இப்ப இருக்கினம்.

அருள்

# மீறுபவர்கள் யார்...?

எஸ்.பி. திசநாயக்கவுக்கு விதிக்கப்பட்ட இரண்டாண்டு கடூழியச் சிறைத் தண்டனை குறித்து நாடாளுமன்றம் முதல் பொதுமேடைகள்வரை அனல்பறக்கும் வாதப்பிரதிவாதங்கள் பல நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உயர் நீதி மன்றத்தை அவமதித்ததாக உயர் நீதிமன்றத்தின் ஐந்து நீதியரசர்கள்கொண்ட குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்பை மாற்றும் அல்லது மேன்முறையீடுசெய்யும் சந்தர்ப்பம் நீதிமன்றங்கள் மூலம் மேற்கொள்ளமுடியாத நிலையில் மீண்டும் நாடாளுமன்றமும் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமும் முட்டி மோதிக்கொள்ளும் நிலை காணப்படுகிறது. இந்த மோதலுக்குள் நீதித்துறையின் மீது சார்பானதும் எதிரானதுமான கருத்துக்கள் முன்வைக்கப்படும் நிலையும் காணப்படுகிறது.

இந்தத்தீர்ப்பின்மூலம் எஸ்.பி திசநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோகிறதா? இல்லையா? என்ற விவாதம் ஒருபுறமும், இத்தீர்ப்பை மாற்றும் நாடாளுமன்றத்துக்கு உள்ளதா? இல்லையா? என்பது மறுபுறமுமாக மீண்டும் ஒருமுறை அரசியலமைப்பு வாதத்துக்குரிய பொருளாகி விட்டது.

இம்மோதலில் இம்முறை பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உண்மையில் ஒரு பேராசிரியர் தானா? என்ற கேள்வியை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எழுப்பியிருக்கிறார். அவரது பேராசிரியர் பட்டம் உண்மையானதா? போலியானதா? என்று ஆராய குற்றப்புலனாய்வுப்பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

ஆனால் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் ஏழு வருடங்கள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியில் அரசியலமைப்பு விவகார அமைச்சராக இருந்தவர் அப்பொழுது எழாத சந்தேகம் இப்பொழுது எழுந்திருப்பதைப் பார்க்கும்போது தென்னிலங்கை மக்கள் மீதுதான் பரிதாபம் ஏற்படுகிறது. அப்பொழுது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைத்திருந்த புத்திஜீவிகள் அமைச்சரவையில் ஜீ.எல். பீரிஸ் முக்கியமானவராக இருந்தார். அதேவேளை நாடாளுமன்றத்தை அரசியலமைப்பு நிர்ணய சபையாக்கி இன்றைய அரசியலமைப்பை மாற்றியமைக்கமுடியும் என ஆலோசனை கூறியவர் ஜீ.எல். பீரிஸ்தான் என அண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியிருந்தார். எனவே பீரிஸின் பட்டத்தில் ஏற்பட்ட சந்தேகம் போலவே அவரின் ஆலோசனையிலும் சந்தேகம் கொண்டு மீள ஆராய்வது நல்லது.

இந்த அரசியலமைப்புக்குறித்து கருத்துத்தெரிவித்த பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் தான் இந்த அரசியலமைப்பில் ஆற்றிய பங்கு அதில் காணப்பட்ட முரண்பாடுகளை களைய முயன்றதுதான் எனக்கூறியிருக்கிறார். இந்த அரசியலமைப்பின் ஒரு சரத்து மறுசரத்தை மறுதலிப்பதாகவும் ஒன்று வழங்கிய அதிகாரத்தை மற்றது பறிப்பதாகவும் காணப்பட்டதாகவும் இயன்றளவு முரண்பாடுகளை களையும் முயற்சியில் தான் மிகமிகக் குறுகிய காலம் ஈடுபட்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த அரசியலமைப்பை உருவாக்கிய ஜே.ஆர். ஜெயவர்த்தன சனாதிபதியின் அதிகாரத்தை வைத்துக்கொண்டும்கூட நாடாளுமன்றத்தின் ஐந்தில் நான்கு பெரும்பான்மையையும் திகதியிடப்படாத பதவிவிலகல் கடிதங்களையும் வைத்துக் கொண்டே தனது பதவிக்காலம் முழுவதையும் கழித்தார். அப்படியிருந்த அவர் மூன்றாவது முறையும் சனாதிபதியாக பதவி வகிக்க விரும்பியபோதும் பின் முயற்சியை கைவிட வேண்டிவந்தது.



பின்னர் பதவியேற்ற சனாதிபதிகளில் பிரேமதாச குற்றவியல் பிரேரணைமூலம் நாடாளுமன்றத்தின் நெருக்கடிக்கு உள்ளானார். சபாநாயகரை வழிக்குக்கொண்டுவந்ததன் மூலம் அப்பிரச்சினையிலிருந்து தப்பினார். சனாதிபதி சந்திரிகா குமாரதுங்ககூட தனது இரண்டு வருடபதவிக்காலத்தில் நாடாளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமான போட்டியில் சிக்கியிருந்தார். இப்பொழுது அவரது கட்சி நாடாளுமன்ற அதிகாரத்தைக்கொண்டிருப்பினும்கூட நெருக்கடி தணிந்துவிட்டதாகக் கூறிவிடமுடியாது. இன்றும்தான் விரும்பியவாறு நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தும் நிலையில் அவர் இல்லை. நாடாளுமன்றத்திலுள்ள 39 ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மு.கா, இ.தொ.கா என உதிரிகள், ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய நிலையிலேயே உள்ளார்.

எவ்வாறு தான் இருப்பினும் நாடாளுமன்றத்திற்கும் நிறைவேற்று அதிகாரத்துக்குமான அதிகாரவரம்பை நிர்ணயிப்பதாயின் ஒவ்வொரு நகர்வுக்கும் நீதித்துறையிடம்தான் செல்லவேண்டியிருக்கும். ஆனால், நீதித்துறையும் இருதரப்பினதும் கடும்விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலையிலும் அரசியலமைப்பு மாற்றமொன்றை பதவியை இழந்துவிடக்கூடும் என்ற அச்சநிலையிலுள்ளதரப்பே விரும்புகிறது. மறுதரப்பு எப்பொழுதும் விரும்பாத நிலையே காணப்படுகிறது.

இந்தக் குளறுபடி நிலையில் இந்த அரசியலமைப்பின் கீழ் அல்லது சுயநலனுக்காக சிறிலங்கா அரசியல்வாதிகள் ஆக்கிக்கொள்ளும் அரசியலமைப்பின்கீழ் தமிழ்மக்களும் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள். மேலும் சிக்கிக் கொள்ளவேண்டுமென்று சிங்கள அரசியல்வாதிகள் வற்புறுத்துகிறார்கள். அதைவிட அந்த அரசியலமைப்புக்கு உட்பட்டுத்தான் தமிழ்மக்கள் நடக்கவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பேசவேண்டும். சிறப்புரிமை மீறல் அது இது என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். உண்மையில் சிறிலங்காவின் அரசியலமைப்பை- மீறுபவர்கள் கேலிக்கூத்தாக்கியிருப்பவர்கள் சிங்கள அரசியல்வாதிகளே எனக்கூறுவதில் தவறில்லை.

**வேலவன**

---

## நேர்நோக்கு

# பாதிக்கப்பட்டவர்கள் இனங்காணப்பட வேண்டும்

உள்நாட்டில் தொடர்ந்த யுத்தத்தினால் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டவர்கள் சிறுவர்கள் என்பதை மறுப்பதற்கு இல்லை. அதாவது தொடர்ந்து இடம்பெற்ற போரின்காரணமாக மக்களின் இடப்பெயர்வினால் சிறுவர்களே மிக மோசமாக பாதிக்கப்படுகின்றனர் கடந்த, சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் U.N.H.C.R, புனர்வாழ்வு மீளக்குடியமர்த்துதல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சும் இணைந்து சமாதான உடன்படிக்கை கைச்சாத்



தாகிய பின் 2002ஆம் ஆண்டு நடுப்பகுதியில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஒரு ஆய்வினை மேற்கொண்டபோது 315369 சிறுவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என இனங்காணப்பட்டுள்ளனர். இடம்பெயர்ந்தவர்களில் சிறுவர்களே பெருமளவு இடம்பெயர்ந்துள்ளனர். இவ்வாறு இடம்பெயர்ந்த சிறுவர்களை காரணம் காட்டி பல்வேறு நிறுவனங்கள் பல்வேறுபட்ட நிர்வாக கட்டமைப்புக்களை உருவாக்கி அவர்களின் நலன்களில் அக்கறை காட்டுவதாக கூறிவருகின்றன. ஆனால் இதனை ஒருசில நிறுவனங்கள செம்மையாக செயற்படுத்திவருகின்றன. தவிர சில, நிறுவனங்கள் தம்மை வளப்படுத்திக்கொள்கின்றனவே, தவிர சிறுவர்நலன்களில் அக்கறை கொள்வதில்லை என்பது இராணுவ கட்டுப்பாட்டுபகுதிகளில் தெட்டத்தெளிவாக இடம்பெற்றுவருகின்றது.

கடந்த கால யுத்தநடவடிக்கை மூலம் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை உள்வாங்கி இன்று தாயகத்தில் பல சிறுவர் இல்லங்கள் உருவாக்கம்பெற்று. வாழ்வில் துன்பப்பட்ட சிறுவர்கள் இன்று வரலாற்றில சாதனைபடைத்துவருகின்றனர். இவ்வாறு தமிழர்தாயகப் பகுதிகளில் உள்ள சிறுவர் இல்லங்களை ஒரு கீழ் நிலையாகவும் அதனை, ஒரு எதிர்ப்பரப்புரை நடவடிக்கையாகவும் கொண்டு சிறிலங்கா அரசும் அரசசார்ந்தவர்களும் பிரசாரப்படுத்தி வந்தனர். மாறாக இவ்வாறு தமிழர்தாயக பகுதிகளில் உள்ள சிறுவர் இல்லங்களில் பராமரிக்கப்பட்டுவந்தவர்கள் இன்று பலதுறைகளிலும் வளர்ச்சி கண்டு இன்று எமது தேசத்தின் புத்திஜீவிகளாக திகழ்ந்துவருகின்றனர்.

மாறாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் உருவான சிறுவர் இல்லங்களை எடுத்துக்கொள்வோமாயின் பெருமளவான சிறார்கள் இவ்வில்லங்களில் பராமரிக்கப்படுகின்றனர் எனக் கருத்துக்களை சர்வதேச மட்டத்தில் பிரசாரப்படுத்தி பல மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறார்களின் வாழ்வை பாழடித்துச் செல்கின்றன. இதைவிட பெருமளவான சிறார்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கப்பட்டும் மறைமுகமாக வேலைக்கு அமர்த்துதல் போன்ற சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை மிகமோசமான வகையில் ஏற்படுத்திவருகின்றனர்.

இவை ஒருபுறம் இருக்க தமிழர் தாயகப்பகுதிகளில் சிறார்களில் அக்கறை காட்டும் வகையில் பாடசாலைக்கல்வியைவிட்டு இடைவிலகிய அல்லது பாடசாலை செல்லாத சிறார்கள் இனங்காணப்பட்டு அவர்களை மீளக்கற்றலில் ஈடுபடுத்தும் ஒரு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதன்மூலம் பெருமளவான சிறார்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுடைய பின்னணியை எடுத்துக்கொண்டால் கடந்தகால யுத்தநடவடிக்கை மூலம் தமது உறவினர்களை இழந்து, அல்லது பொருளாதார பலமற்ற குடும்பங்களை தாங்கும் தூண்களாக இவர்கள் செயற்பட்டு வருவதனால் தமது கல்வியை இடைநிறுத்தி தொழிலில் ஈடுப்பட்டு வருகின்றவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு உள்ளவர்களை, மீளக்கற்றலில் இணைக்கின்றபோது இவர்களது உழைப்பு நிறுத்தப்பட்டு இவ்வாறு உள்ளவர்களின் குடும்பங்கள் மேலும் வறுமைக்குள் தள்ளப்படுகின்றன. இவ்வாறு மீளக்கற்றலில் மாணவர்களை இனங்கண்டு இணைப்பது என்பது எமது பிரதேசத்திற்கு மிக முக்கியமான ஒன்றுதான். ஆனால், இவர்களில் தங்கி வாழ்கின்ற குடும்பங்களிற்கு பொருளாதாரத்தை கட்டி வளர்க்ககூடிய வகையான செயற்பாடுகளையும் ஏற்படுத்தி அவர்களின் பொருளாதாரத்தை கட்டி வளர்த்துக் கொண்டு இச்சிறார்களையும் வளப்படுத்துவதுதான் மிக முக்கியமான ஒன்றாகும்.

இதைவிட தற்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொழில்சார் கற்கைநெறி தொடர்பாக எடுத்துக்கொண்டால் இத்தொழில்சார் கற்கை நெறியின் முக்கியநோக்கம் போரினால் பாதிக்கப்பட்ட பொருளாதார வலு வற்றர்வர்களை, ஒரு தொழில் முயற்சியில் ஈடுபடுத்தும் வகையில் இக்கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வாறான கற்கை நெறி நிலையங்கள் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் அமைத்து மிக வறிய இளைஞர் யுவதிகளை உள்வாங்கி மேற்கொள்ளவேண்டிய கற்கை நெறியாகவே இது அமைய வேண்டும். தற்பொழுது அமையப்பெற்ற தொழில்சார் நிலையங்கள் ஏதோ அமைக்கவேண்டிய தேவையாக அமைக்கப்பட்டாலும் இதற்குள் உள்வாங்கப்படுபவர்களை எடுத்துக் கொண்டால் உதாரணமாக 25 பேர் கொண்ட ஒரு கற்கை நெறியாக இருந்தால் ஏதோ 5பேர் மட்டும் வறிய அல்லது தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ளும்வகையில் வளர்க்கப்படுகின்றனர். கடந்த 2002ஆம் ஆண்டு மாந்தை கிழக்கு பாலிநகரில் வெளிநாட்டு நிறுவன நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட தொழில்சார் கற்கை நெறியில் நாற்பதுக்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் தொழில்சார் பயிற்சியைப்பெற்று இன்று தொழில் ஈடுபட்டுவருகின்றவர்கள். மூன்று பேர் மட்டும் இதனுடைய பின்னணியை எடுத்துக்கொண்டால் இதனுள் உள்வாங்கப்பட்டவர்கள் குடும்ப, பொருளாதார வலுவுள்ளவர்கள் அல்லது வேறு தொழில் முயற்சியில் ஈடுபடுபவர்கள். ஆதலால் ஏதோ ஒரு பொழுது போக்காக இக் கற்கை நெறியை மேற்கொள்கின்றனர். இனிவரும் காலங்களில் இவ்வாறான தொழில்சார் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்டவர்கள் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கவேண்டிய தேவை உள்ளவர்களாக இனங்கண்டு அவர்களை வளப்படுத்துவதில் அக்கறையாகச் செயற்படவேண்டும் என்பதே எல்லோரினதும் எதிர்பார்ப்பாகும்.

**சு. பாஸ்கரன்**

# இந்தியாவை நோக்கி நகரும் அமெரிக்காவும் ரஷ்யாவும்

இந்தியாவை மையப்படுத்திய சர்வதேச அரசியலிலும் நாடுகளின் உறவுகளும் அதிதீவிரமாக இயங்கிவருகிறது. இந்தியாவின் அரசியலும், அதன் கொ கையிலும் காணப்படும் பலவீனமான பே[illegible]கும் அரசியல்வாதிகளது சுயநலமுமே உலக நாடுகளது ஆதிக்க அணுகுமுறைக்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. புட்டினின் வருகையைத் தொடர்ந்து அமெரிக்கப்பாதுகாப்பு செயலாளர் ரம்ஸ்பீல்ட் இந்தியாவுக்கு வருகை தந்தார். ஆப்கானிஸ்தான் அரசியல் பற்றிய உரையாடலை அடுத்து இந்தியா வந்த பாதுகாப்புச் செயலர் அதிக அரசியல் முக்கியத்துவங்களை ஏற்படுத்தியிருந்தது. அத்தகைய அரசியல் முக்கியத்துவத்தை பரிசீலிப்போம்.


ரம்ஸ்பீல்ட்டின் வருகை வழமையான தொன்றாக இருந்தாலும் புட்டினின் வருகைக்கு பின் நிகழ்ந்தமையினால் அதிகமான முக்கியத்துவத்தை அது கொண்டிருந்தது. அமெரிக்கா சார்ந்த மேற்குக்கு என்றுமே புட்டினும் புட்டின் தலைமையிலான ரஷ்யாவும் சவாலாகவே உள்ளது. இதனால் ரஷ்யாவின் நகர்வை அமெரிக்க உளவுத்துறையும், அமெரிக்க ஆளும் வர்க்கமும் உன்னிப்பாகவே அவதானித்துக்கொண்டிருப்பதுடன் புட்டின் ஓரடி முன்வைக்க அமெரிக்கா இரு அடி



குழிபறிக்க அரசியலை சாத்தியப்படுத்தி வருகிறது. அத்தகையகுழிபறிப்புக்கான நடவடிக்கையாகவே இந்தியாவுக்கு வருகை தந்த ரம்ஸ்பீல்ட்டின் அரசியலை நோக்குதல் வேண்டும்.

வழமையாக பாகிஸ்தான் விடயத்தில் தடம் போடவரும் அமெரிக்கர்கள் தற்போது ரஷ்ய-இந்திய நெருக்கத்தை உடைக்க முயலுகின்றனர். ரஷ்யா- இந்தியா-சீனா சார்ந்த அரசியல் பொருளாதார, இராணுவ, வலைப்பின்னல் சாத்தியமாவதை விரும்பாத அமெரிக்கா முளையிலேயே உறவை முறியடிக்க விரும்புகிறது. இதே அணுகுமுறையில் சீனாவுடனோ, ரஷ்யாவுடனோ அமெரிக்கா பேச முடியாது. அப்படியானால் அது மிக உயர்நத மேல்நிலையிலான பேரம்பேசலாகவே அது அமையும். இவ்வாறு சிறு சிறு சம்பவங்களுக்கு தந்திரமாகவும், அரசியலாகவும் நகர்வுகளை நிகழ்த்தக்கூடிய

அரசு இந்தியா மட்டுமே. அதனால் இந்தியாவை வைத்து நிலைமையை முறியடிக்க விரும்புகிறது.



அத்தகைய உறவையும் ரம்ஸ்பீல்ட் மிக நாகரிகமாகவே நகர்த்தினார். குறிப்பாக தந்திரத்தில் கைதேர்ந்த அமெரிக்கர் வெளிப்படையாக இந்தியாவை புகழ்ந்து பேசியதுடன் இந்தியாவுடனான நட்பை அமெரிக்கா அதிகம் விரும்புவதாகவும் இருநாட்டுக்குமான உறவு ஆழமானதாகவும் பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கும்போது ரம்ஸ்பீல்ட் குறிப்பிட்டார். அவர் இந்தியத்தலைவர்களை அதிகம் உதாசீனம்செய்யாது மிக அந்நியோன்னிய மாக நடப்பதுபோல் காட்டிக்கொண்டார். அவரது நடத்தை அரசியல் சமமான அங்கீகாரத்தைக் காட்டுகின்ற கோதாவில் அமைந்திருந்தது. இவ்வாறு அமெரிக்கத் தலைமைகள் கீழைத்தேச அரசியல் தலைமைகளுடன் நடப்பது அரிதானதே. ஆனால் இவ்வாறு நடப்பதன் மூலம் மேலும் அதிகமானவற்றை சாதிக்க திட்டமிட்டிருப்பதே தென்படுகின்றது.

ரஷ்யர்கள் ஒன்றும் இந்திய நலனுக்கான உறவாக கருதினார்கள் என்பதற்கு அப்படி அதிகாரச் சமநிலை

ஐங்கரன்

யையும், பரஸ்பர உறவு நிலையையும் சமத்துவமான மதிப்பினையும் கொண்டிருக்கும் இயல்பு காணப்படும். இதனை அமெரிக்க தரப்பிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. ரஷ்யர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் இடையிலுள்ள பிரதான வேறுபாடு இது மட்டுமே. மற்றும்படி இரண்டு அரசுகளும் தமது நலனுக்காகவே இந்தியாவிடம் வந்துள்ளது. இதில் ஆபத்தானவர்கள் அமெரிக்கர்கள் என்பது கடந்தகால அனுபவம்.

இந்தியர்களைப் பொறுத்தவரை ரம்ஸ்பீல்ட்டுக்கு தகுந்த பதிலை வழங்கியிருந்தனர். அவரது வருகையை

பலவீனத்தை அவருக்கே சுட்டிக்காட்டி அவரது விஜயத்தின் நோக்கத்தை பாதிப்படைய வைத்துள்ளனர். குறிப்பாக மிக அண்மையில் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்க சிபாரிசு செய்யப்பட்ட 1.2 பில்லியன் அமெரிக்க டொலரையும் F-16 விமானம் உட்பட எட்டு p30 விமானங்களை வழங்குவது பற்றிய சர்ச்சையை கிழப்பி அதனை ஓர் அரசியலாக மாற்றியுள்ளனர். இதனை பாகிஸ்தானுக்கு வழங்குவது இந்திய-பாகிஸ்தான் அமைதி முயற்சிக்கே ஆபத்தானதாக அமையுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். எனவே ரம்ஸ்பீல்ட்டின் வருகை பலவீனப்படுத்திய இந்தியத்தரப்பின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படுவது கடினம். ஏனெனில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் மிகப் பிரதான நாடாக மாறியுள்ளது. அதிலும் இஸ்லாமிய பயங்கரவாதத்தை அழிப்பதுடன் இந்தியாவின் நீண்டகால இலக்குகளை தகர்க்க உதவும் அரசாக உள்ளது. இதனால் பாகிஸ்தானை நிராகரித்துவிடும் நிலையில் அமெரிக்கா இல்லை. பாகிஸ்தானை கடந்த மூன்று மாதங்களிலேயே சவுதியரேபியா,



எகிப்து,லித்துவேனியா, சிரியா போன்ற நாடுகளிலிருந்து தலிபான்களுடன் இணைந்துசெயற்பட்ட 150 வெளிநாட்டு தீவிரவாதிகளை கொன்றுள்ளதுடன் இதற்கு சமமான அல்லது அதிகமான எண்ணிக்கையுடையவரை காயப்படுத்தியுமுள்ளனர். இதனால் பாகிஸ்தானின் கோரிக்கைக்கே அதிகம் செவிசாய்க்கும் நிலையில் அமெரிக்கா உள்ளது. அமெரிக்காவின் நலன்களுக்காகத்தான் வளர்த்த இஸ்லாமிய தீவிரவாதத்தையே பாகிஸ்தான்காட்டிக் கொடுக்க ஆரம்பித்துவிட்டது. இவை எல்லாம அரசியலுக்கு புதியதோ, அல்லது ஆச்சரியப்படக்கூடியதோ அல்ல. இதனால் பாகிஸ்தான் கோரிக்கைக்கு அதிகம் செவிசாய்க்கும் அமெரிக்கா இந்தியாவை சமாதானப்படுத்தவே அவ்வப்போது அமெரிக்காவின் அரசியல் புள்ளிகள் விஜயங்களை நிகழ்த்திவருகின்றனர்.

இந்தியாவை எப்படியும் கையாளலாம என்ற நிலையை காங்கிரஸ் அரசாங்கம் சற்று மாற்றுவதற்கு முயலுகின்றது. ஆனால் இதுமட்டும் போதாது அரசியல் உறுதிப்பாட்டையும், அரசியல்வாதிகளின் போக்கையும் மாற்றுவதே நிரந்தரமான மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதாக அமையும். 2020 இல் இந்தியாவை வல்லரசாக்கும் ஆட்சியாளர்கள் ஆட்சிமுறையிலும், ஆளும் தன்மைகளிலும், இயல்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தினால் மட்டுமே மேற்கின் சவால்களை சமாளிக்கமுடியும். நிரந்தரமான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றின் வளர்ச்சியையும், மாற்றத்தையும் நிரந்தரமானதாக ஆக்குதல் அவசியம். அப்படியான இறுக்கமும், கட்டமைப்பும் அரசியலமைப்புக்களிலும் அதன் விதிமுறைகளிலும் நிகழுவதே அபிவிருத்தி மாற்றமாகவும் ஊடுருவலை தவிர்க்கவும் உதவும், இந்தியாவின் வளர்ச்சியை நோக்கும் இந்திய ஆளும் வர்க்கம் தந்திரமாக அரசியலுக்கு புறம்பான சூழலை தயார் செய்வதைவிடஅரசியலமைப்புக்குள் தயார் செய்தலை முதன்மைப்படுத்துதல்வேண்டும்.

மேற்கு நாடுகள் தங்கள் பொருளாதாரத்தையும் தாராள சனநாயகத்தையும் முதன்மைப்படுத்திக்கொண்டு ஆளும் ஆட்சியென்பது தேசிய நலன்சார்ந்து பொய்த்துவிடுகின்றது. அத்தகைய நிலை ஏற்படும்பே[illegible] சர்வாதிகாரமாகவே முடிவுகளை எடுப்பதுடன் திட்டமிடலுக்குட்பட்ட பொருளாதாரக்கொள்கைகளை கட்டிவளர்க்க சனநாயகம் என்பவற்றை எல்லாம் மேற்குலக நலனுக்காக கைவிடுகின்ற தேசிய கொள்கைகளையே அந்நாடுகள் ஏற்படுத்திவருகின்றன. இதுவே அந்நாடுகளது வளர்ச்சிக்கு மூலகாரணமாக அமைந்துவிடுகின்றது. இவற்றை எல்லாம் தமது அரசியல் திட்டங்களிலேயே அந்நாடுகள் கொண்டிருக்கின்றன.

எனவே இந்தியாவின் பலவீனத்தை பயன்படுத்தி அதன் பலவீனமான அரசியல் வாதிகளைக்கையாண்டு மேற்குலகம் மட்டுமல்லாது எல்லா அரசுகளுமே இந்தியாவை கையாண்டுவருகின்றன. இத்தகைய பாதுகாப்பற்ற இந்தியா கட்டிவளர்க்கும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் குறுகிய காலத்தில் முடிவிற்கு வருவதுடன் இந்திய மக்களைச்சார்ந்ததொன்றாக அமையாது தனி ஆளும் வர்க்கத்தை மையப்படுத்தியதென்றாகவே அமையும். இது இந்தியாவுக்கு மட்டுமல்ல முழு நாடுகளுக்குமே பொருத்தமானது.

ரம்ஸ்பீல்ட்டின் வருகையை ஆளும் காங்கிரஸ் தோற்கடித்தாலும் நிரந்தரமான வெற்றியாக கொள்ளமுடியாது. தற்காலிகமான முன்னேற்றங்களை வைத்து இந்தியாவை அளவீடு செய்வது ஆபத்தானது. ஆனால் இந்தியாவைச்சார்ந்த எல்லா அரசுகளும் அதிகமான அரசியல் ஊடுருவலை நிகழ்த்திவருவதென்பதே இதன் யதார்த்தமாகும்.

இயற்கை அனர்த்தங்கள் அல்லது யுத்தம் காரணமாக தமது வாழ்விடங்களைவிட்டு வெளியேறி உள்நாட்டில் தங்கி யிருந்தால் அவ்வாறே நாட்டை விட்டு வெளியேறி இருப்பின் அவர்கள் "அகதி" என்ற அந் தஸ்தைப்பெறுகின்றனர். இவ் வாறு இடம் பெயரும் மக்க ளிற்கான மனிதாபிமான உதவி கள், ஆலோசனைகள் வாழ்விடங் கள், நிவாரணங்கள் என இவ ற்றை வழங்கவேண்டிய பொறுப்பு அரசஅதிகாரிகளைச்சார்ந்தது. அரசஅதிகாரிகள் மட்டுமன்றி அரச சார்பற்ற நிறுவனப்பிரதி நிதிகள்கூட இவர்களிற்கு தேவை யான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கலாம்.

கடந்த இரண்டு மாதங் களாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் யாழ் நகரின் தாழ் நிலங்கள் பல வெள்ளத்தில் மூழ்கின. வெள்ள அனர்த்தத்தி னால் ஆயிரக்கணக்கான பங்களிற்கு மட்டுமே வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன. இக் குடும்பங்களைச்சேர்ந்த 180 பேர் இருக்கின்றனர். இவர்களில் 50 பேர் கல்வி கற்கக்கூடிய நிலையில் இருந்த 20 பேர் மட்டுமே கல் ற்று வரு கின்றனர்.

அகதிகளிற்கான ஐக் கிய நாடுகள் தூதுவராலயம் தற் காலிகமாக அமைத்துக்கொடுத்த வீடுகளிற்கென அமைக்கப்பட்ட மலசல கூடங்களின் கட்டுமானப் பணி இன்னும் பூரணமாக வில்லை. மாதிரி வீட்டுத்திட்டம் என அமைக கப்பெற்ற வீடுகள் வெறும் கண்து டைப்பு நடவடிக் கையாகவேயுள் ளது. ஒரு பொறுப்புவாய்ந்த நிறு வனம் வயல் நிலத்தில் எதுவித திட்ட மிடலும் இல்லாமல் இவ் வீடு களை அமைத்துக்கொடுக்கப் பட்டுள்ளது இது ஒரு பரீட்சாத்த முயற்சியென நிறுவன அதிகாரி வற்றைக் கொண்டு குடிசைகள் அமைத்து ஒருவருடமாக இருந்த போதிலும் இவ்வருட நடுப்பகுதியில் U.N.H.C.R நிறுவனத்தால் இவ் வீடுகள் அமைத்துத்தரப்பட்டன. வழங் கப்படவுள்ள வீடுகள் வயல் காணிக்குள் வருகுதென தெரிந் தும் எமக்கென வீடுகள் இன்மை யால் சம்மதித்தோம்.

இவ் வீட்டுத்திட்டத்தில் இனிவரும் காலங்களில் தொடர்ச்சி யாக இருக்க வேணுமென்றால் வண்ணார்ப் பண்ணை வெள்ள வாய்க்காலுடன் இணையக்கூடிய வகையில் இங்கிருந்து வாய்க் கால் அமைக்கவேண்டும். வீடு களிற்கிடையேயான ஒழுங் கைகள் உயரமாகப் போட்டு நீர்ப்போக்கிகள் அமைக்கவேண் டும். இவ் இருநடவடிக்கைகளை யும் உடனடியாக மேற் கொண் டால் மட்டுமே சாத்திய மாகும். வெள்ளம் வழிந்தோட உரிய அமைப்புகளும் அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

கடந்த ஒரு மாதமாக மழைவெள்ளத்தில் மிதக்கும் எமக்கு இதுவரை யாரும் உதவிகள் செய்யவில்லை. வெள்ள நிவாரணத்தைகூட வழங்கவில்லையென தனது கருத்துக்களை நிறைவுசெய்தார் வனங்கள் இதுவரை எது வித உதவிகளையும் மேற் கொள்ளாமைக்கான காரண மென்ன? இவர்களது பார முகமான செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் பாதிப்பிற்குள்ளாகிவருகின்றனர். யாழ் மாவட்ட அரசாங்க அதி பரினால் வெள்ள நிவாரண உதவிகள் பாதிக்கப்பட்ட பகுதி மக்களிற்கு பிரதேச செயலக



# தாமரை வீதியில் தத்தளிக்கும் தற்காலிக வீடுகள்



குடும்பங்கள் இடம்பெயர்ந்துள் ளனர். இடம் பெயர்ந்த குடும்பங் களில் குறித்த சிலிற்கே வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

மழைவெள்ளம் வீடு களிற்குள் புகுந்தமையால் இடம் பெயர்ந்து உறவினர் நண்பர் களது வீடுகளிலும் ஆலயங்களி லும் பாடசாலைகளிலும் பாதிக் கப்பட்ட மக்கள் தற்காலிகமாக தங்கியுள்ளனர்.

இயற்கை அனர்த் தங்களின் விளைவாக இடம் பெயர்ந்தவர்களில் வண்ணார் பண்ணை தாமரைவீதி, கண்ண பிரான் (கள்ளப்புறா) வயலக் கிராமத்தைச் சேர்ந்தவர்களில் 28 குடும்பங்கள் மிகவும் பாதிக் கப்பட்ட நிலையில் பாலர் பாடசா லையிலும் ஆலயத்திலும் தங்கி யுள்ளனர். இதுவரை எதுவித உதவிகளும் வழங்கப்பட வில்லையென்பது குறிப்பிடத் தக்கது.

நல்லூர் பிரதேச செயல கத்தின் ஜே-99 கிராம சேவை யாளர் பிரிவில் 28 வீடுகள் மட்டுமே U.N.H.C.R நிறுவனத் தால் அமைத்துக்கொடுக் கப்பட்டது. மீள் குடியமர்ந்த குடும் பங்கள் இப்பகுதியில் இருந்த போதிலும் மேற்குறித்த குடும் கள் கூறினாலும் இவ் வீடுகளிற்கு அமைவாக மலசல கூடங்கள் கினறுகள் அமைக்கப்படாதன் நோக்கம்மென்ன? என மக்கள் கேட்கிறார்கள்

உண்மையாகவே மனி தாபிமான முறையில் இவ் வீட மைப்புத் திட்டத்தை குறித்த நிறு வனம் மேற்கொள்ளவேண்டு மாயின் இவ் வயல் நிலத்தை ஓரளவேனு மேடாக்கி வீட மைப்பு தி தை மேற்கொண் டிருக்கலாம். அல்லது குறித்த சில பரப்பளவுகளை மட்டும் மேடாக்கி அதில் தொடர் மாடி களை அமைத்துக்கொடுத் திருக்கலாம். அல்லது வேறோரு இடத்தை தெரிவு செய்து வீட மைப்பை மேற்கொண்டு 28 குடும்பங்களிற்கும் உதவி யிருக் கலாம்.

இப் பகுதியில் நீண்ட காலமாக வசித்துவரும் சுப்பிரமணியம்- சோதிலிங்கம் (வயது 54) இவ் வீட்டுத்திட்டம் தொடர்பாக பகிர்ந்துகொண் டவற்றை வாசகர்களிற்காக தருகிறோம்.

1995 ஆம் ஆண்டு இரா ணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து வன்னி சென்று 2003 ஆம் ஆண்டு மீள் குடியமர்ந் தோம். எம்மால் இயலுமான கூலித்தொழிலாளர் களான இவர்களிற்கு வருமானம் குறைவாக இருப்பதினால் பிள்ளை களின் கல்வித் தரம் மிகக்குறை வாகவே இருக்கிறது. இங்குள்ள வர்கள் குறித்த வகுப்பிற்கு மேல் கல்வி கற்பதில்லை. கல்வி கற்கவேண்டும் என்ற மனோ நிலை இங்குள்ள பிள்ளை களிற்கும் இல்லை. பெற்றோர் களிற்கும் இல்லை. இதற்கு சூழல் அமைப்பும் காரண மென லாம்.

வீட்டு வறுமையைக் காரணம் காட்டி நாகரிக மாற் றத்திற்கு ஏற்ப தம்மை மாற்றிக் கொள்வதற் காகசிறு வயதுகளி லேயே வேலை களிற்குப் போகிறார் கள்.இதனால் கிடைக் கும் வரு மானத்தைக் கொண்டு இதுவே வாழ்க்கை என்ற நிலை யிலுள்ளனர். கல்வி யின் முக்கியத் துவத்தை உணராத சமூகமாகவே இச் சமூகமுள்ளது. கல்வி யைப் பற்றி சிந்திக் காது பணத்தையே முன் நிறுத்துகின்ற நிலை இங்குள்ளது. இவ்வாறான மனோ பாவத்தையே வளர் ந்து வருகின்றனர்.



பாரதி சனசமூக நிலை யம் முற்றாக செயல் இழந்து போயுள்ளது. 40 பிள்ளைகளுடன் இயங்கிவந்த பாலர் பாடசாலை கடந்த மூன்று மாதமாக செயற் படுவதில்லை. இதில் கல்வி கற்ற பிள்ளைகளில் அநேக மானவர்கள் வீடுகளிலேயேயுள் ளனர். ஒருசிலர் மட்டுமே வேறு பாலர் பாடசாலைகளிற்கு தமது பிள்ளைகளை அனுப்பி வரு கின்றார். எமக்குத் தரப்பட்ட வீட் டுத்திட்டத்தை முழுமையாக்கி சிறு வீதிகளை அமைத்து மழை சுப்பிரமணியம் - சோதிலிங்கம். கண்ணபிரான் வயல் தற்காலிக வீட்டுத்திட்டத்திற்கு இதுவரை ஒரு நிர்வாகக் கட்ட மைப்பு உருவாக்கப்படவில்லை. அமைப்பு ரீதியான செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை. இங்குள்ள இளைஞர்கள், பொறுப் பானவர்கள் அமைப்பு ரீதியாக சிந்தித்து செயலாற்றினால் இக் கிராமத்தை முன்னேற்றலாம். தமக்கு மட்டுமின்றி தமது சமூகத்திற்கு கிடைக்கும் பல பலன்களை அறியாதவர்களாக வுள்ளனர். தெரிந்தோ தெரியா மலோ ஒரு அமைப்பு ரீதியாக

**இரா-வின்**

இங்குள்ள இளம் சமூகம் உரு வாகவேண்டும். புரிந்துணர் வின்மையும் ஒற்றுமையின்மை யுமே அமைப்புக்கள் தோற்றம் பெறாமைக்கான காரணங்களாக அறியமுடிகிறது.

கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக பெய்துவரும் மழை யினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த இப்பகுதி மக்களிற்கு ரீதியாகவழங்கப்பட்டு வருகின் றது. ஆனால் இப்பகுதி மக் களிற்கு இதற்கான விண்ணப்ப படிவங்கள் கூட வழங்கப்பட வில்லையென்பது நினைவு கூரத்தக்கது.

1995 ஆம் ஆண்டு இடம்பெற்ற யாழ் நகர் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் காரணமாக அழிக்கப்பட்ட வர்களது வீடுகளில் இங்குள் ளவர்களது வீடுகளும் உள் வாங்கப்பட்டுள்ளது.

சிறுதொகை வரு மானத்தை பெற்றுவரும் இவர் களால் மழை வெள்ளத்தை அகற்றுவதற்கான நடவடிக் கைகளை மேற்கொள்ளமுடி யாது. இங்குள்ள மழை நீர் வண் ணார்பண்ணை வெள்ள வாய்க் காலுடன் இணைவதற்கு தாமரை வீதியிலுள்ள வாய்க்கால்கள் புனரமைக்கப்படவேண்டும். இவற்றின் ஊடாக காக்கதீவு கட லூடன் மழை வெள்ளம் கலப்ப

இதுவரை எதுவித நிவாரண உதவிகளை வழங்காமைக்கு நிர்வாக ரீதியான முன் முயற்சி யின்மையுமே காரணமாகும். 28 குடும்பங்களைச் சேர்ந்தவர்களில் அநேகரிற்குகாய்ச்சலும், தொற்று நோய்களும் ஏற்பட்டுள்ளன. கடந்த நான்கு வாரங்களாக முரு கன் கோவில் பாரதி பாலர் பாட சாலையிலுமே இவர்கள் தங்கி யுள்ளனர்.

நல்லூர் பிரதேச சபை யினர் பிரதேச செயலகத்தின், தேவைக்கொரு நிறுவனமென முளைத்துள்ள உதவி நிறு தற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும்.

விரும்பியோ விரும் பாமலோ பிறரது உதவியை நாடி வாழவேண்டிய சமூக அமைப் பாகவுள்ள இவர்களிற்கு அவ சியமாகத் தேவைப்படும் உதவி களை வழங்கி இவர்களது சமூக வாழ்விற்கு வழிசமைக்க பொறுப் பானவர்கள் முன்வரவேண்டும். வெள்ளத்தில் மிதக்கும் வீட்டுத் திட்டத்தை கரைசேர்க்க குதி யானவர்கள் இனியாவது கை கோர்ப்பார்களா...?

# தமிழிலக்கிய வரலாற்றின் அரிய பொக்கிசம் சொக்கன் ஐயா

நீறுபூர்த்த நெற்றி நீறதன்மேற்பொட்டு புன்னகை தவழும் முகம்- சிந்தனையின் ஆழத்தைக்காட்டும் அகன்ற நெற்றி. எதையும் கூர்ந்து கவனிக்கும் கண்கள். வார்த்தையின் பெறுமதியை உணர்ந்து ஒவ்வொன்றாக வெளிப்படுத்தும் உரையாடல் உள்ளத்தைப் போல தூய வெள்ளை ஆடை இத்தனை திருக்கோலத்துடன் எம்மத்தியில் வாழ்ந்த ஓர் அறிஞன் ஓர் சிந்தனாவாதி- மாபெரும் கலைஞன். மாமனிதன் தான் அமரர் சொக்கன்ஐயா.


. எங்கள் கால குறு முனிவரும் இன்றைய தமிழ் உலகின் வசிட்டமா முனிவரும் பழமைக்கும் புதுமைக்கும் உறுதி மிக்க இணைப்புப் பாலமாக திகழ்ந்தவரும் இலட்சிய மூச்சுடன் இலக்கியம் படைத்து காலத்திற்கும் சமூகமாற்றத்திற்கும் ஏற்பத் தம் சிந்தனையைப் பக்குவமாக்கி எழுத்தின் பல துறைகளிலும் பிரகாசித்த சொக்கன் ஐயா அவர்கள் தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமுடையவர். அவருடைய நடையிலே சிவமணமும் தமிழ் மணமும் கமழ்வதைக் காணலாம். இன்று சொக்கனின் வளர்ச்சியையும் வரலாற்றையும் நாம் நோக்கவில்லை. அவர் வளர்த்த ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றுப் பின்னணியைத்தான் பார்க்கின்றோம்.

**சமயம்**

சொக்கனின் இந்து சமய நூல்களை எடுத்து நோக்கும் பொழுது அறிவு தெளிந்த நான் மணிமாலை (1966) நல்லூர்க்கந்தன் மீது இவர்பாடிய பாடல்களும் எழுதிய கட்டுரைகளும் இவர் ஒரு சிறந்த முருக பக்தர் என்பதைக் காட்டிநின்கின்றன. ஈழநாட்டில் முருகவழிபாடு பற்றிய பல விபரங்களை இவை தருகின்றன. பக்திச்சுவை நிரம்பியது. இவரது நான்மணி மாலை - வெண்பா கலித்துறை விருத்தம்- அகவல் ஆகிய பாவடிவங்களில் முருகன் பெருமையைப் பேசுகின்றார்.

"இலங்கையில் முருகவழிபாடு" 1982 என்ற கட்டுரையும் -வீர கேசரியில் வெளிவந்த "நாடுவார் வினைபோக்கும் நல்லைக் கந்தன்" என்ற கட்டுரையும் ஈழநாடுபத்திரிகையில் வெளிவந்த "நல்லை நகர்க்கந்தப் பெருமானும் அழகுத்தத்துவமும்" என்ற கட்டுரையும் ஈழத்து முருக வழிபாடு பற்றிய அறிவை அகலவைக்கின்றன.

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் 1981 இல் நடைபெற்ற சென்னை சைவசித்தாந்த மகாசமாஜ சைவ சித்தாந்த மாநாட்டில் "திருமந்திரம் காட்டும் வாழ்வு" என்ற தலைப்பில் சொக்கன் ஆற்றிய உரையும் கட்டுரையாக வெளிவந்தது. திருமந்திரம் அனைவரது வாழ்விற்கும் காட்டும் பொது நெறியை ஆசிரியர் கோடிட்டுக்காட்டுகின்றார். யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில் நடந்த சைவமாநாட்டுக் கவியரங்கில் "அப்பரின் அன்புள்ளம்" என்ற தலைப்பில் உலகாலும் வாசகர் உலகாலும் மிகவும் போற்றப்பட்டுவந்திருக்கின்றன. 1972-06-02இல் சொக்கன் வெளியிட்ட முதலாவது சிறுகதைத்தொகுதியான கடலில் குட்டை நாய்-(1961க்கும் 1972க்கும் இடைப்பட்ட காலகட்டக் கதைகளைத் தொகுத்துள்ளார்) 2004இல் சொக்கன் சிறுகதை என்ற சிறுகதை தொகுப்பினை- நயினை கி.கிருபானந்தா வெளியிட்டுள்ளார். மொத்தத்தில் சொக்கனின் சிறுகதைகளில் இலக்கண வழுவற்ற செம்மைசார்ந்த தமிழில் பழந்தமிழர் பண்பாட்டினடியாக மானுட மேன்மை நோக்கையும் கலா வியக்தியையும் காணமுடிகிறது.



**நாவல்**

நாவலிலக்கிய உலகில் சொக்கன் அவர்கள் 1949ஆம் ஆண்டில் அடியெடுத்துவைத்தவர்- ஈழகேசரி இதழில் (1949-1-3-27) தொடராக வெளிவந்த மலர்ப்பலி இவரது இத்துறைக் கன்னிப்படைப்பாகும். இதனைத்தொடர்ந்து அண்மைக்காலம்வரை செல்லும் வழி இருட்டு (1961), சீதா (1963), ஞானக்கவிஞன் (1966) சலதி (1985), பக்திக்சந்த் (1985), முகங்கள் (1986) ஆகிய நாவல்களை இவர் தந்துள்ளார். இவற்றுள் ஞானக்கவிஞன். முகங்கள் என்பன குறுநாவல் என்ற வகைமைக்குரியன பக்திக் சந்த் வங்க நாவலொன்றின் தமிழாக்கமாகும். முகங்கள் குறுநாவல் ஈழமுரசு இதழில்தொடராகவெளிவந்தது. இறுதி அத்தியாயம் பிரசுரமாகாமல் நிறைவுறாதநிலையில் உள்ளது. இதனையும் மலர்ப்பலியையும் தவிர ஏனைய நூலுருப்பெற்றுள்ளன.

மேற்படி நாவல்களை அவற்றின் உள்ளடக்க அடிப்படையில் இருவகைப்படுத்தலாம். முதல் வகை சமகால சமூகக்கதையம்சம்கொண்டவை. மலர்ப்பலி- செல்லும்வழி இருட்டு, சீதா, முகங்கள் என்பனவும் பக்திக் சந்த்தும் இவ்வகையினை- ஏனைய இரண்டும் முறையே கம்பராமயணம்-சிலப்பதிகாரம் என்பன எழுந்த காலச் சூழல்களைக் கற்பனை செய்து அமைத்த கதையம்சம்கொண்டவை.

சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இவை தவிர சைவப்பெரியார் சு.சிவபாத சுந்தரனார் மேல் சுருக்கமான பிள்ளைத்தமிழ் ஒன்றைச் சொக்கன் பாடியுள்ளார். சொக்கன் "நூலறிபுலவர்" ஆகையால் செய்யுள் வடிவம்பற்றிய நிலைமையில் எளிமை தானே கைவரும் என்பதற்கு இந்த நூல்கள் சிறந்த சான்றாக உள்ளன. நூலாசிரியரின் ஆழ்ந்த சமய அறிவும் இந்து நாகரிக அறிவும் தமிழறிவும் கற்பித்தல் அனுபவமுதிர்ச்சியும் உளவியல் அறிவும் பிறவும் இந்நூலிற் பளிச்சென்று தெரிகின்றன. வேதநெறி வேறு- சைவ நெறி வேறு என்ற தடுமாற்றம் மாணவருக்கு ஏற்படாது இருக்கும் பொருட்டு " வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க" என்ற பெரிய புராணத் திருவாக்கை எடுத்துக்காட்டி இந்த உண்மையை முதலில் மாணவர் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியவைக்க விழையும் நூலாசியர் "எமது சமயத்தின் முதல் நூல்கள் வேதங்களும் ஆகமங்களுமாகும். வேதம்பொது நூல் எனவும் ஆகமம் சிறப்புநூல் எனவும் கொள்வது சைவமரபு. வேதங்களை ஏற்றுக் கொண்ட காரணத்தினாலேயே எமது சைவ சமயம் வைதீக நெறி எனவும் வழங்கும்" எனத் தெளிவாக உரைத்துள்ளார். சமயத்தைத் தத்துவரீதியில் மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் அணுகுவதென்பது அத்துணை எளிதான காரியமன்று. இந்தப்பணியைச் சொக்கன் சிறப்பாகச்செய்துள்ளார். "சைவம் வளர்த்ததை யலர்" என்ற நூலும் சிவமணமும் தமிழ்மணமும் வீசிக்கற் போர் உள்ளங்களில் என்றும் இடம்பெறும் என்பதில் மிகையொன்றுமில்லை.

அடுத்து "அறநெறிப்பா மஞ்சரி (1969) குறிப்பிடத்தக்க தொரு தொகுப்பு நூலாகும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கேற்ற அறநெறி சார்ந்த நன்மொழிகளைச் சங்ககாலத்திலிருந்து இன்று வரை எழுந்த அறநெறிப்பாடல்களிலிருந்து தொகுத்துத் தருகின்றது. இந்நூல் கல்வி-வீரம்-கடமை-நன்றி-ஒப்புரவு-அன்பு முதலான பண்புகளின் உயர்வு பற்றிக் கூறும் அரிய பாடல்கள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. மனித சமுதாயத்தின் ஒழுக்கவியலை மேம்படுத்தும் வகையிலும் பண்பாட்டினைச் செம்மையுறச் செய்வதிலும் இந்நூல் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றது.

சொக்கனின் "பாரதி பாடியபராசக்தி" 1974 என்ற நூல் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட பல்துறை சார்ந்த கட்டுரைகளை உள்ளடக்கிய தொகுப்புநூல். இதில் சாக்தநெறி பற்றியும் தமிழகத்திலே நிலவும் சக்தி வழிபாடு பற்றியும் பாரதியின் பராசக்திப்பாடல்கள் பற்றியும் அவரது பேரிலக்கியம் பற்றியும் சிறப்பாக எடுத்துக்கூறப்படுகின்றன. மானிலம்பயனுறுவதற்கு இறை பக்தி அவசியமென்பதை இக் கட்டுரையின் வாயிலாகச் சொக்கன் வற்புறுத்துகிறார்.

நல்லூர்க்கந்தன் மீது பாடிய நல்லூர்



இவர் பாடிய கவிதைகள் நூலுருப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களின் தலச்சிறப்புக்களையும் கோவிலில் எழுந்தருளிய மூர்த்தியின் புகழையும் கூறும் ஊஞ்சற் பாடல்களும் சொக்கனின் ஆக்கங்களை அணி செய்கின்றன.

1968ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட நல்லை நகர்தந்த நாவலர் என்ற நூல் நாவலரது வரலாற்றினைச் சுவையும் பக்தியும் ததும்ப வெளிப்படுத்தியது எனலாம்.

**சிறுகதை**

சொக்கனின் சிறுகதைகளை எடுத்து நோக்கும் பொழுது பாடசாலை மாணவனாயிருந்தபோதே வள்ளி- குப்பையிலே மாணிக்கம் என்ற கதைகளை எழுதிய சிறுவனிடம் திறமையிருந்ததைப் பத்திரிகை ஆசிரியர்களும் சகபாடிகளும் கண்டு வாழ்த்தினார்கள். 1944ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை சுமார் முன்நூறுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இப்பொழுதும் புதிய இளமையுடன் எழுதிக் கொண்டிருந்தவர். இவருடைய சிறுகதைகள் அரசியல், சமூகம், வரலாறு, இலக்கியம் முதலிய பல்வேறு துறைகளைச் சார்ந்தன. ஈழகேசரியில் இவர் எழுதிய சிறுகதைகளுள் குட்டை நாய் - மாணிக்கம்- வினோத நண்பன் முதலியவை குறிப்பிடக்கூடியவை. இவர் 1944 இல் எழுதிய சிறுகதைதான் பின் பதினாறாவது வயதில் 1946இல் அப்போது மலையகத்திலிருந்து திருவாளர்மயில்வாகனன் வெளியிட்டு வந்த மின்னொளி மாசிகை நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசினை ஈட்டினார். சிறுகதையின் பெயர் கடைசி ஆசை அக்காலத்தில் இவரது எழுத்துக்கள் பத்திரிகை

**நயின.கிருஷ்ணசாமி கிருபானந்தா**

**கவிதை**

சொக்கனின் கவிதைக் கலையை எடுத்துநோக்கும் பொழுது தனிப்பாட்டுக்களையும் பாட்டு நூல்களையும் எடுத்துக் கொண்டால் அவற்றிற் பயிலும் சொல்லாட்சியும் இலக்கணமுடிவுகளும் உள்ளடக்கமும் பொருளுருவமும் தொன்மையான நெறிகளைப் பின்பற்றி நடப்பதனை நாம் தெரிந்து கொள்ளுகிறோம். நான் மணிமாலை- பிள்ளைத் தமிழ் அந்தாதி- பதிகம் முதலான பிரபந்த வடிவங்களை அவர்கையாண்டுள்ளார். அருணகிரிநாதரின் திருப்புகழைப் பின்பற்றித்தாமும் நல்லைக்கந்தன் பேரிலே திருப்புகழ்பாடியுள்ளார். வேறோரு விதத்திற் சொல்வதானால் சொக்கனின் பாட்டுகள் முன்னை நூற்சார்புடையவை என்று கூறலாம்.- நாட்டுப்பற்றுடன் மொழிப்பற்றையும் இணைத்து அதற்குப் புதியதொரு பரிமாணத்தைத்தந்திட முயன்றுள்ளார்.

இதுதவிர இறைவணக்கப்பாட்டுக்களையும் சமயஞ்சார்ந்த செய்யுள்களையும் இயற்றியுள்ளார். இவற்றுள் இரு பிரபந்தங்கள் நல்லூர்க்கந்தன் மேல் எழுந்தவை. ஒன்று நான் மணிமாலை, மற்றையது திருப்புகழ் துதிப் பாட்டுக்களும் ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேத்ர ஸ்ரீ வடிவாம்பிகாதேவி அந்தாதி குறிப்பிடத்தக்கது. ஐம்பது கட்டளை கலித்துறைகளினால் ஆனது. ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேமுத்திரம் ஸ்ரீமுன்னைநாதஸ் சுவாமி பதிகம் மேற்படி அந்தாதியுடன் முழுமையான விளக்கம் அவரிடம் உண்டு. யாப்பில் வழுக்களைச்சொக்கனின் ஆக்கங்களிற் காண்பது அரிது.

**நாடகம்**


சொக்கனின் நாடகக் கலையை எடுத்து நோக்கும்பொழுது வரலாற்று நாடகங்களுக்குரிய பண்புகள் குறைவின்றி எழுதுதல் எல்லோர்க்கும் எளிதன்று. பாத்திரங்கள் தமது சூழ்நிலையிலேதோன்றி நடமாடவேண்டும். தமது காலத்திற்குப் பொருந்தச் சிந்தித்தும் உணர்ந்தும் பேசியும் செயலாற்றல்வேண்டும். வரலாற்றுப் பாத்திரங்களுடன் ஆசிரியர் தாமாகப் புனைந்துள்ள பாத்திரங்களை இணைக்கும் பொழுது அமைதியும் நிலவுதல்வேண்டும். இவற்றைச்செய்துமுடிப்பதற்கு வரலாற்று உணர்வும் நூற்புலமையும் நாடக நுணுக்கமும் பெரிதும் வேண்டற்பாலன. அவற்றைச் சொக்கன் குறிப்பிடத்தக்க அளவு பெற்றுள்ளார் என்றே கூற வேண்டும். நாடகத் துறையை எடுத்து நோக்கும் பொழுது நாடகம் முழுவதும் ஆசிரியரது இலக்கியப்பயிற்சியும் இசை இரசனையும் இழையோடுகின்றன. அவை கற்றோர்க்குப் பேருவகைதருவன. மற்றோர்க்கும் இன்பம் அளிப்பன. "சிலம்பு பிறந்தது." சிலப்பதிகாரக்கதையைத்தழுவியது. சிறந்த இலக்கிய நடையில் எழுதப்பட்ட இந்நாடகம் குறிப்பிடற்குரிய சில அம்சங்களுடன் விளங்குகின்றது.

சொக்கன் நாடக ஆசிரியர் மட்டுமன்றி, நாடக ஆய்வாளராகவும் விங்குகின்றார். ஈழத்துத்தமிழ் நாடக வளர்ச்சி என்னும் தலைப்பில் பேராசிரியர் சு.வித்தியானந்தனுடைய மேற்பார்வையிலே இவர் ஆய்வு மேற் கொண்டார். இவர் ஆய்வுசெய்து சமர்ப்பித்த ஆய்வேட்டுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் முதுமாணிப்பட்டம் வழங்கியது. தானாக நாடகங்களை எழுதிய பொழுதிலும் மரபுவழி இலக்கியக் கதைகளையும் அடிப்படையாகக்கொண்டு இவர் நாடகங்கள் எழுதினார். கவிஞன் பரிசு- தெய்வப் பாவை போன்ற நாடகங்கள் இத்தகையனவே.

**பேச்சு**

சொக்கனின் பேச்சுக்கலை தமிழ் மேடைகளிலும் சமயமேடைகளிலுமே பெரும்பாலும் திகழ்கின்றது. கனியுரைகள்- கருத்தரங்க உரைகள், பட்டிமண்ட பப்பேச்சுக்கள் என இவருடைய பேச்சுத்துறைகளைப்பகுத்துக் கொள்ளலாம். இவ்வரங்குகளுக்குரிய உத்திமுறைகளையும் புத்திமுறைகளையும் தெரிந்துகொண்டு பேசும் வல்லமை இவரிடம் குடிகொண்டிருந்துள்ளது. மரபுத்தமிழ் அரங்குகளிலும் நவீன தமிழ் மேடைகளிலும் உறுதியாய் நிற்கக்கூடிய உரம் இவரிடம் உண்டு.

(17 ஆம் பக்கம் பார்க்க)




*இந்தவாரம் கோப்பாய் சிவம் அவர்களின் "முற்றுப்பெறாத இராகங்கள்" எனும் சிறுகதை புதையலாகப் பிரசுரிக்கப்படுகிறது.*

*இலக்கிய பாரம்பரியத்தில் வந்த கோப்பாய் சிவம் சிறந்த சிறுகதையாளர்களில் ஒருவர். இவரின் தந்தை மறுமலர்ச்சிக்குழுவின் ஆக்க இலக்கியகர்த்தாக்களில் ஒருவரான பஞ்சாட்சர சர்மா அவர்களாகும்.*

*கோப்பாய் சிவத்தின் தங்கை சௌமினியும் ஒருசிறந்த எழுத்தாளர். ஈழத்துப்பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களில் ஒருவர். ஆனால் ஏனோ பின்னர் எழுதாமல் விட்டுவிட்டார்.*



# முற்றுப்பெறாத ராகங்கள்

**கோப்பாய்சிவம்**

பொழுது மெல்ல மங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. நான் விரைவாக பஸ் தரிப்பிடத்தை நோக்கி நடக்கிறேன். இன்று 'ஓவர் டைம்' செய்ததனால் நேரம் நன்கு பிந்திவிட்டது. பஸ்ஸை எதிர்பார்த்து நிற்கும்போது மனதிற்குள் ஒரு குறுகுறுப்பு. பொதுவாகவே இப்படித் தாமதமாகப் போகிறவேளைகளில் பசி, களை, சோர்வு இவற்றையும் மீறி எனக்கு இப்படி ஒரு உணர்வு ஏற்படுவது வழக்கம்.

நான் இப்படித் தாமதமாகப் போகின்ற வேளைகளிலெல்லாம் 'அவன்' அந்த ஒற்றைப்பாறையில் இருந்துகொண்டு புல்லாங்குழலை இசைத்துக்கொண்டிருப்பதைக் காண்பதுண்டு. அவன் அமர்ந்திருக்கின்ற அந்தத் தோற்றமும் அவன் வாசித்துக் காதில் விழுகின்ற அந்த இசைத் துளியும் ஏதோ ஒரு சோக சித்திரத்தை என்னுள் எழுப்புவதையும் நான் உணர்வதுண்டு.

ஆனால், அவனை நன்றாகப் பார்க்கவோ, அவன் என்ன வாசிக்கிறான் என்பதைக் கேட்கவோ முடியாதபடி பஸ் விரைவாக அவனைக் கடந்து போய்விடும். சில நண்பர்களிடம் போயிருக்கின்றவேளைகளில் அவர்கள் வானொலியை முறுக்கிக்கொண்டு போகும்போது இடையில் ஏதாவதொரு நிலையத்தில் வீணை இசையின் ஒருசில கமகப் பிரயோகங்களை மட்டும் ஒலித்துக்கொண்டு மீற்றர்கம்பி நகரும் போதுஅவர்களால் ரசிக்க முடியாத அந்த இசையைப் போடும்படி கூறவும் முடியாமல் அந்தக் கமகங்களை முழுமையாகக் கேட்கவும் முடியாமல் ஒருவித தவிப்பை அடைகின்றேனே. அதேபோன்ற ஒரு தவிப்பை நான் இவனைத்தாண்டி எனது பஸ் போகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அனுபவிக்கிறேன்.

இதோ பஸ் வந்துவிட்டது. நான் ஏறியதும் வழமைபோல வலது பக்க ஆசனங்களில் வெற்றிடத்தைத்தேடி ஓரிடத்தில் அமர்கிறேன். அந்தப் பக்கத்தில் அமர்ந்தால்தான் அந்த சோக சித்திரத்தைக் காண முடியும்.

அலுவலகப்பகுதிகள், கடைகள், வீடுகள் போன்ற கட்டடங்கள் சந்தடிகள் அகன்று புதியநகரம் போய் மறைகின்றது. பழைய நகரின் ஆரம்பத்திற்கும், புதிய நகருக்கும் இடைப்பட்ட சுமார் கால்மைல் தூரம் இடையிடையே மரங்கள் அமைந்த பொட்டல் வெளியாக இருக்கும். அந்தப் பெரிய திருப்பத்தில் திரும்பியதும் ஒரு பஸ் நிறுத்தம். அவ்விடத்தில் பஸ் திரும்பி நின்றதும் தொலைவில் அவன் பாறையில் இருப்பது தெரிகிறது. சற்றுத்தள்ளி ஒருகுடிசை. அதில் தான் அவன் வசிக்கிறான் போலும். இதன்பின் பஸ் விரைந்து போய் பழையநகரின் ஆரம்பத்தில் தான் நிற்கும்.

நான் கண்களையும் காதையும் தீட்டிக்கொண்டு அவனையே அவதானிக்கிறேன். பஸ் விரைந்து செல்கிறது. அவனது இசையின் சில துளிகள் காதில் விழுகின்றன. என்ன அதிசயம். பஸ் திடீரென்று நிற்கிறது. எல்லோரின் கவனமும் சாரதியை நோக்கித் திரும்ப அவர் என்ஜினைத் திறந்து நோட்டம் விடுகிறார். பஸ்ஸில் ஏதோ ஒரு பிழை ஏற்பட்டுவிட்டது.

எனது கவனம் அவனில் லயிக்கிறது. இப்போது அவன் கூப்பிடுதூரத்தில் தான் இருக்கிறான். அவனது குழலிசை நன்றாகக் கேட்கிறது. நான் கண்ணாடியைக் கழற்றி நன்கு துடைத்துப் போட்டுக் கொள்கின்றேன். அவனில் இந்த பஸ் எந்த சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. கர்மயோகியாகக் குழலை இசைத்து அதிலேயே மூழ்கி நாதோபாசனை செய்து கொண்டிருந்தான்.

நான் அப்போதுதான் நன்றாக அவதானித்தேன் சுத்தமான ராக ஆலாபனை நடக்கிறது. இவ்வளவு நாளும் நான் நினைத்ததுபோல் அவன் வெறுமனே புல்லாங்குழலை ஊதிக்கொண்டிருக்கவில்லை. உண்மையான ஞானத்துடன்தான் வாசிக்கிறான் என்று அறிந்து வியந்தேன். உலகத்திலுள்ள சோகம் முழுவதையும் ஒன்றுதிரட்டி ஒலிவடிவம் கொடுத்து அந்தக் குழலிலிருந்து அவன் வெளிப்படுத்த, அது 'தேஷ்' ராகமாக உருவெடுத்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ஸ்வரங்களும் மெல்ல மெல்ல அசைந்து வந்துகொண்டிருந்தன. அவனது கண்கள் சிறிது கலங்கியிருப்பது போலத் தோன்றியது.

அப்போது பஸ்ஸினுள் சிலர் அவனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தது! என் காதில் விழுந்தது. அவன் ஏதோ ஒரு பரீட்சையில் தோல்வி அடைந்ததால் மனமுடைந்து பைத்தியமாகி அந்த இடத்திலே இருந்து குழல் வாசித்துப் பொழுதைப் போக்குகிறான் என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். அதுபற்றிய ஆச்சரியம், அலட்சியம், கேலி, அனுதாபம் எல்லாம் ஒவ்வொருவர் வாயிலிருந்தும் வார்த்தைகளாகப் பிறந்தன. ஆனால், அந்த 'தேஷ்' ராகத்தின் உன்னதமான பிரயோகங்கள் பற்றியோ அதில் வழிந்தோடி மனத்தைக் கசக்கிப் பிழிந்த அந்த சோகத்தைப் பற்றியோ யாருக்கும் பேசத் தோன்றவில்லை. என்னால் அவர்கள் கூற்றை நம்ப முடியவில்லை. பஸ் புறப்படமுன் இறங்கிப்போய் அவனோடு ஏதாவது பேசிப் பார்ப்போம் என்று எண்ணினேன். அதற்கிடையில் பஸ் புறப்பட்டுவிட்டது.

எனக்கு ஒரே அவலமான நிலையாகிவிட்டது. இதயம் கனத்துக் கிடந்தது. ஓர் அற்புதமான ராகத்தை விஸ்தாரமாக ஆலாபனை செய்து ஆரோகணத்தில் கொண்டுவந்து அந்த அளவில் வாத்தியத்தையே முறித்துவிட்டது போன்ற ஓர் இறுக்கமான உணர்வு. மறுபடியும் மீதி ராகம் முழுவதையும் கேட்டால் தான் அந்த இறுக்கம் தளரும்போல் தோன்றியது. இரவு சாப்பிடப் பிடிக்கவில்லை. எதுவுமே செய்ய மனமில்லாமல் வாசற்படியில் குந்தியிருந்தேன்.

சந்திரன் உதயமாகிறது. அன்றைக்குப் பூரணை முடிந்த இரண்டாவதோ மூன்றாவது நாள். நிலவைக்காண எனக்குப் பைத்தியம் பிடிப்பதுபோல இருந்தது. சோகம் ததும்பும் அந்த ராகத்தின் ஒவ்வொரு ஸ்வரங்களும் என் இதயத்தை ஊசியாய்க் குத்துவது போலிருந்தது. பூரணமாக அதனைக் கேட்டால் மட்டுமே நான் சமநிலையடைய முடியுமென்று தோன்றியது. என்னையும் அறியாமல் ஏதோ ஒரு துணிவில் எழுந்து புறப்பட்டுவிட்டேன். மிக விரைவாக அந்த நெடுஞ்சாலையில் நடந்தேன். இடையிடையே ஒரு சில வாகனப் போக்கு வரத்துக்களைத் தவிர வேறு சந்தடி இல்லை. எனது வீட்டிலிருந்து அவனது குடிசைவரை சுமார் ஒன்றரை மைல் தூரத்தைக் கடந்து அங்கேவந்துவிட்டேன். அவன் அப்படியே அந்தக்கல்லில் அமர்ந்திருக்கிறான். வாசித்து வாசித்துக் களைத்திருக்கிறான் என்பது தெரிந்தது.

நான் அவனுக்கு மிக அருகில் போகும் வரை அவனில் எந்தவித சலனமுமில்லை. கையில் குழலை வைத்துக்கொண்டு நாடிக்கு கைகளை முட்டுக் கொடுத்துக் கொண்டு வெகு தூரத்தில் தெரியும் அந்த நெடுஞ்சாலை வளைவை வெறித்துக் கொண்டிருந்தான். சுமார் நூறுயார் தொலைவில் தெரியும் அந்த வளைவில்தான் புதிய நகரம் ஆரம்பமாகியது. இந்தப் பக்கம் கண்ணுக் கெட்டியவரை வெறும் வெளிதான். இடையிடையே சிறுசிறு பற்றைகளும் மரங்களும் தலைகாட்டின.

நான் அவனுக்குமிக அருகில் வந்ததும் அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். அவன் பார்வை என்மேல் படிந்தது என்றாலும் அதில் அர்த்தம் எதுவும் இருக்கவில்லை. ஒரு வெறுமை குடிகொண்டிருந்தது. நான் அவன் முகத்தையும் கையிலுள்ள புல்லாங்குழலையும் பார்த்தபடி,

"நான் உங்களோட கொஞ்சம் கதைக்க விரும்பிறன். ஆட்சேபனையில்லைத்தானே"

என்று கேட்டுக்கொண்டு அருகில் நிலத்தில் என் கைக்குட்டையை விரித்துவிட்டு இருந்தேன். அவனும் பாறையைவிட்டு எழுந்து சற்றுத் தள்ளி நிலத்தில் அமர்ந்தான். என்னை வியப்போடுபார்த்தான்.

சில கணங்களை நகர்த்திய பின் நான் ஆரம்பித்தேன்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை இதிலை ஒரு பஸ் பழுதுபட்டு கொஞ்ச நேரம் நிண்டதைக் கண்டிருப்பியள். அந்த பஸ்ஸிலை நானும் இருந்தனான். அப்ப நீங்க வாசிச்ச தேஷ்ராக ஆலாபனையைக் கேட்டன். ஆனால் அதை முழுதும் கேக்க முடியாமல் பஸ் வெளிக்கிட்டிட்டுது. வீட்டை போய் இறங்கின் என்னாலை ஒண்டுமே செய்யமுடியாமல் போச்சுது. அரைகுறையாகக்கேட்டஅந்த அற்புதமான ராக ஆலாபனை என்னவோ செய்தது. அதை முழுமையாக கேட்டால்தான் எனக்கு நிம்மதிவரும். அதினாலை தான் இவ்வளவு தூரம் இந்த இரவிலையும் நடந்து வந்திருக்கிறேன். பளீஸ், அந்த தேஷ் ராகத்தைக் கொஞ்சம் வாசிக்கிறியளா?

இவ்வளவும் நான் பேசும் போதும் மௌனமாக என்னையே வெறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்த அவன் சலனமில்லாமல் சிரிப்பை உதிர்த்தான். அவனுடைய மௌனம் எனக்குப் பயத்தையும் ஏற்படுத்தியது. ஒருவேளை அவன் உண்மையிலேயே பைத்தியம் தானோ? அதற்குள் அவன் சொன்னான்.

"என்னைப் பைத்தியம் என்று சொல்லிற ஆக்களைத்தான் நான் இவ்வளவு நாளும் கண்டிருக்கிறன். என்ரை சங்கீதத்தை ரசிக்கிற முதலாவதாள் நீங்கள்தான்...."

"அதிகமாக நான் வேலை முடிஞ்சு போற நாட்களிலை உங்களைக் காணிறதுண்டு. உங்களைப் பைத்தியம் எண்டு கனபேர் கதைக்கிறதைக் கேட்டிருக்கிறன். ஆனால், நான் அதை நம்பேல்லை. உங்கடை வாழ்க்கையிலை ஏதோ ஒரு பெரிய ரகசியம் இருக்குதெண்டு நான் நினைக்கிறன். அந்த அந்தரங்கங்களிலை தலையிட நான் விரும்பேல்லை. இப்ப எனக்கு ஏற்பட்டிருக்கிற இந்தப் பைத்தியத்தை நீங்கள் தான் தீர்க்கவேணும்...."

அவன் ஒரு நீண்ட பெருமூச்சை உதிர்த்து விட்டுப் புல்லாங்குழலை வாயில் வைத்து வாசிக்க ஆரம்பித்தான். மறுபடி ராகவெள்ளம் பாய்ந்து வந்தது. அந்த வெள்ளத்துள் மூழ்கி நான் என் இதயக்கனத்தை இறக்கிக் கொண்டிருந்த அதே நேரத்தில் அவன் இதயத்தில் துயரக் கனம் ஏறிக் கொண்டிருந்தது. அதற்கு அடையாளமாக அவன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

என்மனம் குற்ற உணர்வில் தவித்தது. அவன் துயரங்களை நான் நினைவூட்டி விட்டேனோ?

இசை முடிவுக்கு வந்ததும் நான் மன்னிப்புக் கோரும் பாவனையில் கேட்டேன்.

"என்னாலை உங்கடை பழைய துயர நினைவுகள் கிளறப்பட்டு விட்டன போலும்...."

"இல்லை, இது தினமும் கிளறப்பட்டுக் குருதி பாய்கிற இதயம்தான். புதிதாக எதுவுமில்லை.

"உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால் நீங்கள் உங்கட துயரத்தை என்னட்ட சொல்லலாம். ஆனால் நான் வற்புறுத்தேல்லை"

"என்ரை வாழ்க்கை அப்பிடி ஒன்றும் பெரிய சரித்திரமோ அல்லது சுவையான காவியமோ அல்ல! நான் ஒருத்தியைக் காதலிச்சன். அவளைக் கைப்பிடிக்க முடியேல்லை இவ்வளவு தான் கதை....."

இப்படிச் சொல்லி நிறுத்தியவன் மேலும் தொடர்ந்தான்.

"நான் பல்கலைக்கழக இசைக் கல்லூரியில் புல்லாங்குழல் படிச்சன். அதே நேரத்திலை ஆஷா எண்ட பெண் ஒருத்தி கலைப் பிரிவிலை படிச்சாள். எப்படியோ எங்களுக்கை காதல் வந்திட்டிது. ஆனால் சாதாரண பல்கலைக்கழகக் காதல் மாதிரி இல்லாமல் அளவோடையும் மிக இரகசியமாகவும் இருந்தது எங்கடை தொடர்பு. கடைசியிலை என்ரை படிப்பு முடியிற சந்தர்ப்பத்திலை என்ரை ஆலோசனைப்படி அவள் தன்ரை தகப்பனிட்டை எங்கடை தொடர்பைச் சொல்லி அனுமதி கேட்டாள்"

"தன்ரை மகள் தம் சாதி அல்லாதவனைக் காதலிக்கிறாள் எண்டதை அறிஞ்ச அவர் அதுக்கு மேலை ஒண்டையுமே விசாரிக்கேல்லை. என்னைப்பற்றிய விபரங்களைக் கேட்கவே இல்லை. ஆனால் அவளை அப்படியே படிப்பை விட்டு நிப்பாட்டிவிட்டார். உடனே வேறை கல்யாண ஏற்பாடுகளும் நடந்தது"

"எனக்குப் பரீட்சை முடிஞ்சு வெளிக்கிட்ட கொஞ்ச நாட்களில் நான் ஆஷாவின் கல்யாணச் செய்தியை அறிஞ்சன். தற்செயலாக ஒருநாள் தனியாக என்னைச் சந்தித்த ஆஷா கண்ணீர் விட்டாள். தன் தந்தையைமீறித்தான் எதுவும் செய்ய முடியாதென்று சொல்லிவிட்டாள்"

"அடுத்தநாள் நான் சோதனையில் தோல்வி அடைஞ்சிருந்ததாக முடிவு வெளிவந்தது. மறுபடி

☞

படிக்கும் நிலையிலே நான் இல்லை. இரண்டு ஏமாற்றங்களும் சேர்ந்து என்னை ஓரளவு பைத்தியமாக்கியிருந்தன. என்னைப்பலர் அப்படியே நினைத்தார்கள். இது எனக்கு வசதியாக இருந்தது"

"கடைசியாகச் சந்தித்த பொழுது மிகவும் அதிசயமான ஒரு வேண்டுகோளை ஆஷா விடுத்திருந்தாள். தன் கல்யாண வீட்டிலன்று இரவு தன் வாழ்க்கை ஆரம்பமாகின்ற போது எனது குழலோசை தனது காதில் விழவேண்டும் எண்டது அவளது ஆசை.அந்த அதீத ஆசையை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. அண்டைக்கு இரவு நான் இந்தக் கல்லிலை வந்திருந்து மிக நீண்ட நேரமாய் கல்யாண வசந்தத்தை வாசிச்சுக் கொண்டிருந்தன்"

"அதோ தெரியுதே அந்தத் திருப்பத்திலை தெரியிற முதலாவது பங்களாவிலை தான் ஆஷா இருக்கிறாள். அண்டைக்கு நிச்சயமாக நான் பைத்தியம்தான் என நினைச்சு எல்லாரும் என்னை என்ரை போக்கில் விட்டு விட்டார்கள். நான் பேசாமல் இதிலை ஒரு குடிசையைப் போட்டுக்கொண்டு இருந்திட்டன். என்ரை வாழ்நாள் பூராவும் எனது குழலிசை அவள் காதிலை விழச்செய்யிறது தான் என்ரை லட்சியம்!

"ஒரு நாள் இரவு ஆஷா தனிய இங்கை வந்தாள். நான் வேற கல்யாணம் செய்து கொண்டு வாழவேணுமெண்டு சொன்னாள். நான் மறுத்துவிட்டேன். அவள் அழுதுகொண்டே போய் விட்டாள். அதிகமாக இரவு நேரங்களில் அவள் கணவன் வெளியே போனபிறகு வேலைக்காரி மூலம் சாப்பாடு அனுப்பிவைப்பாள். எப்போதாவது சிலநாள் அவளே வருவாள். ஒன்றுமே பேசிக்கொள்ளமாட்டாள். கண்கலங்க இமை கொட்டாமல் என்னையே சில நிமிடம் பார்த்துக் கொண்டு நின்றுவிட்டுப் போய்விடுவாள்"

"எப்போதாவது ஒரு நாள் அவள் வருகின்ற அந்த வேளையில் அவள் பார்வையில் சொல்கின்ற அந்த ஓராயிரம் கதைகள் தான் எனக்கு உயிரூட்டுகின்றன. அந்தப் பார்வைதான் எனக்கு உணவு"

அவன் கண்கலங்க இதைச் சொல்லி முடித்து விட்டுச் சிறிது இளைப்பாறினான். நான் மௌனமாக அவனது கையிலிருந்த புல்லாங்குழலையே பார்த்துக் கொண்டிருந்தேன். என்னால் எதுவும் பேசமுடியல்லை. அவன் என்னை ஒருமுறை பார்த்துவிட்டுப் புல்லாங்குழலை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். எப்படி இவனால் அலுக்காமல், களைக்காமல் தொடர்ந்து வாசிக்க முடிகிறது என்று வியந்தவாறு அவனது இசையைக் கவனித்தேன்.

ஏக்க உணர்ச்சியை வடிவமைத்துக் கொடுக்கிற தன்யாசி ராகம் ஆரம்பமானது. நுட்பமான நெளிவுகள் சுளிவுகள் ஏற்ற இறக்கங்களைத் தாண்டி அந்த ராகம் விஸ்தாரமாகத் தவழ்ந்து வந்தது. அப்போது தூரத்தில் ஓர் ஓசை. அவனுடைய வாசிப்பில் சிறிது சலனம் ஏற்பட்டது. பார்வை ஆஷாவின் பங்களாவை நோக்கியிருந்தது. ராகத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியில் அவன் முனைவதை உணர்ந்தேன்.

ஒவ்வொரு தினமும் அந்த ஓசை அவன் உள்ளத்தில் ஓர் எழுச்சியையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்துகிறதென்பதை நான் புரிந்து கொண்டேன். எதிர்பார்ப்புக்கள் தினமும் ஏற்பட்டாலும் அவளுடைய வருகை மிகச்சில நாட்கள்தான் கிடைக்கிறது. இன்றும் அவள் வரக்கூடுமோ...?

நான் மெல்ல நகர்ந்து பாறையின் நிழல் மறைவில் உட்கார்ந்துகொண்டேன். அவனது வாசிப்புத்தேய்ந்து வந்து முடிவுற்றபோது தூரத்தில் முக்காடிட்ட ஓர் இளம்பெண் மெல்ல நடந்துவருவதை நான் காணமுடிந்தது. சற்று முன் அவன் வாசித்த ராகத்தை நான் நினைத்தேன்.

அந்த தன்யாசி ராகத்தைப் பற்றி சில நாட்களுக்கு முன் வானொலியில் கேட்ட விளக்கம் எனக்கு நினைவுக்கு வந்தது.

'காதல் பாடல்களுக்கு உகந்த இந்த ராகம் ஏக்கத்தைப் பிரதிபலிப்பது. காதலரைத்தேடி, அவரை நினைந்துருகி, அவரை மறக்க முடியாமலும், மறந்துவிடுவேனோ என்ற அச்சத்திலும் தனது சேலைத்தலைப்பதில் காதலரின் படம் எழுதிவைத்திருப்பவளாக இந்த ராகதேவதை வர்ணிக்கப்படுகிறாள்'

அந்த ராகதேவதையே இப்போ புறப்பட்டு வருவது போல எனக்கொரு மயக்கம். அவள் தான் கொண்டுவந்த உணவை அவன் முன் வைத்துவிட்டு அசையாமல் அவன் விழிகளையே பார்த்தபடி சில கணங்கள் நின்றிருந்தாள், பின் விழிகள் கலங்க பரபரப்புடன் விரைவாகத் திரும்பி நடந்தாள்.

அவன் மௌனமாக அந்த உணவுப் பார்சலை எங்களிருவருக்குமிடையில் பிரித்து வைத்தான். நான் மறுத்துவிட்டேன். அதை அவன் ஆவலோடு சாப்பிட்டான். சிறிது நேரம் மௌனம். எனக்குப் புறப்படவேண்டுமென்ற எண்ணம் அப்போதுதான் ஏற்பட்டது. அதற்கிடையில் அவன் மறுபடி புல்லாங்குழலில் கை வைத்ததும் அந்த எண்ணம் தடைப்பட்டது. என்னுடைய ஆசையை மெல்ல வெளிப்படுத்தினேன்.

"சஹானா ராகத்தில் கொஞ்சம் வாசிக்கிறீங்களா?"

நான் வசனத்தை முடிக்க, அவன் வாசிப்பை ஆரம்பித்தான். ராகம் பிறந்தது. அவனுடைய மூச்சிலும் விரல்களிலும் முன்னரைக் காட்டிலும் வேகம் மிகுந்திருந்தது. மிகநிதானமாக ஆரம்பித்து ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல ஏறிக்கொண்டிருந்தது! மிக மிக விஸ்தாரமான எடுப்பு. சுமார் மூன்று நான்கு மணி நேரம் வாசிக்கக் கூடிய எடுப்பு. நான் மெய்மறந்த நிலையில் கண்களை மூடியபடி கேட்டுக்கொண்டிருந்தேன். இதயம் முழுவதும் ஏதோ வந்து நிறைவது போன்ற உணர்வு. ராகம் நீண்டுகொண்டே போயிற்று.

மறுபடியும் நான் ஒரு குற்ற உணர்வுடன் கண்களை விழித்து அவனை நோக்கினேன். அவன் மிகவும் களைத்துப் போய் மூச்சு இரைக்க வாசித்தான். உடல் சோர்வினால் தளர்ந்துகொண்டிருந்தது.அவனை வீணாக வருத்தி நான் அதில் இன்பம் காண்கிறேனே என்ற ஒரு கழிவிரக்கம் ஏற்பட்டது. ஆனால், நான் சொன்னால்கூட இப்போது அவன் நிறுத்த மாட்டான் என்று புரிந்தது.

நான் மறுபடியும் கண்களை மூடி ரசித்தேன். சில நிமிடங்கள் கழிந்தன சஹானா ராகம் உச்சக்கட்டத்தை அடைந்து பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்தபோது சட்டென்று அந்த வேணுகானம் நின்றது. நான் திடுகிட்டபடி அவனைப் பார்க்க அவன் மயங்கிச் சரிந்திருந்தான்.

உடனே குடிசைக்குள் ஓடி நீர் எடுத்து வந்து அவனுக்குத் தெளித்தேன். அவனை மடியில் தூக்கிப் போட்டுக்கொண்டு நீரைப் பருக்க முயற்சித்தேன். அவன் கண்களைத் திறக்கவில்லை அசையாமல் கிடந்தது அவன் உடல். எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. மூக்கில் விரலைவைத்துப் பார்த்தேன். மூச்சு வரவில்லை. உடல் குளிர்ந்து கொண்டு வந்தது. இவ்வளவு காலமும் வேணுகானமாய் ராகங்கள் இசைத்த மூச்சு அந்த சஹானாவுடன் சேர்ந்து காற்றில் கலந்துவிட்டது. அந்த நேரத்திலும் அவனது கைகள் புல்லாங்குழலை இறுக்கப் பிடித்திருந்தன. எனது கண்ணீர்த்துளிகள் அவன் முகத்தில் விழுந்து சிதறின.

நான் எவ்வளவு கொடிய பாவி. அவனைக்கொன்றது நான் தானே! இதை நினைத்ததும் கவலையையும் மீறிப் பயம் எழுந்தது. மேலே நிமிர்ந்து பார்த்தேன். சந்திரன் நடு வானத்திலிருந்து இறங்கியிருந்தது. நேரம் இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும். இந்த நள்ளிரவில் ஒரு பிணத்தருகில் காட்டுபிரதேசமொன்றில் தன்னந்தனியே இருப்பதை நினைத்ததும் கிலி பிடித்துக் கொண்டது.

மெல்ல அந்த உடலை விட்டு எழுந்தேன். நெடுஞ்சாலையில் வேகமாக நடக்க ஆரம்பித்தேன். பிசாசுகள் துரத்துவது போன்ற ஓர் உணர்வு. முழுதும் இசைக்கப்படாத அந்த இராக தேவதை வழிமறிப்பதாக ஒரு பிரமை. எல்லாவற்றையும் மீறி அவனது இழப்பும் அவனால் அரைகுறையாக நிறுத்தப்பட்ட சஹானா ராகமும் சேர்ந்து இதயத்தை அழுத்தின. எப்படியோ வீட்டையடைந்து படுக்கையில் விழுந்தேன்.

மறுநாள் அலுவலகம் செல்லும்போது அந்தப் பாறையருகில் சனக்கூட்டம் இருந்தது. அதைத்தாண்டி அந்தத் திருப்பத்தில் பஸ் நிறுத்தப்பட்டபோது அதில் ஏறியவர்கள் இரண்டு புதினங்களைப்பரிமாறிக் கொண்டனர்.

'ராத்திரி அந்தப் பைத்தியம் பேயடிச்சுச் செத்துப்போச்சு' என்பது ஒன்று.

'வேதவனம் முதலாளியின் மனைவி ஆஷா விடியக் காலமை மாரடைப்பில் செத்துப்போனாள்.

என்பது மற்றொன்று.

எனக்கு இது மற்றொரு அதிர்ச்சி. நேற்று நள்ளிரவில் அரைகுறையாக அவனது ராகம் நிறுத்தப்பட்டபோது அவளுடைய மூச்சும் நின்றிருக்கிறது. என்பதைப் புரிந்துகொண்டேன். அவனது குழலோசைதான் அவளுக்கு உணவாக இருந்திருக்கிறது என நினைத்தபோது என் கண்கள் கலங்கின.

# வாழும் மரணம்

மண் மடி ஊடறுத்து
ஊற்று நீருறிஞ்சி
விருட்சத்தின் விலாசத்திற்கு
ஆணிவேர் அரும்பாடு படுகிறது.

இற்றுப்போகும் நிலைவரின்
முயற்சிக்கு முற்றுப்புள்ளியொன்றாய்
இருப்பிழந்து போகிறது மரம்.

உருப்பெற்றுச்
சிறு நொடியில் சிங்காரச்
சிறகசைப்பில் விட்டில்கள்.
கொழுந்து விட்டெறியும்
தீயிடை புகுகையில்
நாறிப்போகிறது.

கண்ணைக் கவரும்
புள்ளி மானும்
துள்ளி ஆடும்
தோகை மயிலும்
வேடரம்பு எய்கையில்
வாழ்விழந்து போகிறது.

மனிதனும் பிறக்கிறான்.
உச்சத்தை அடையத்துடிக்கிறான்.
வானளாவ ஏக்கங்களை வளர்த்து
கனவுகளை நாளும் வளர்க்கிறான்
இடறிச் சிலர் வீழ்கிறார்.
பாறிச் சிலர் சாய்கிறார்.
முற்றிப்பேறடைய முன்னமே
காலம் கரைக்கிறது சிலரை.

வந்தான் போனான்
வாழ்ந்தான் மடிந்தான்
வரலாறே இங்கே பலருக்குண்டு.
கல்லறைச் சுவர்களில் மாத்திரம்
பெயர் முகவரிகள் மட்டும்.
கற்குவியலின் உள்ளே
இற்றுப்போவது மனித உடல்களல்ல
அவருடைய வாழ்க்கை வரலாறும் தான்
மரணத்தோடு முற்றுப் பெற்றாயிற்று.
மனித வாழ்வு.

நிரை நிரையாய் புதை குழிகள்
காலம் காலமாய் பூசிப்பதற்காகவும்
மனதின் அடி ஆழத்தில்
வைராக்கியத்தை வளர்த்திடவும்
சில உண்மை மனிதர்களின்
கல்லறை நிரல்கள் இவை
கண்களை உறுத்துகிறதே.
இவை வீணான சாவுகளா?
அன்றேல் முதிர்வுக்கு முந்திய சாய்ப்பா?
இல்லையில்லை இவை
விடுதலைக்கான விலைகொடுப்பு
விடுதலைக்கான உயிர் திறப்பு
கல்லறை தழுவிவந்த காற்று
காதுமடலுரசிச் சொல்லியது
கண்களின் நீரை கைதுடைத்தது
கால்கள் சற்றுத் திரும்பியது
அவர்கள் போன வழி நோக்கி...

அ.அன்ரனி.




# சார்ப்புக் கொள்கையை கண்டுபிடித்தவர் ஐன்ஸ்டீன்தானா?

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தந்த சார்புக்கொள்கை அறிவியல் கொள்கைகளிலேயே தலையாய கொள்கையாகப் போற்றப்பட்டுவருகிறது. அல்பேர்ட் ஐன்ஸ்டீன் தன்னுடன் பணியாற்றிய சக விஞ்ஞானி டேவிட் கில்பர்ட் என்பவர்தந்த ஆய்வின் முடிவையே தனது சார்புக்கொள்கையாக வெளியிட்டார் என அமெரிக்க பேராசிரியர்; பிரைட்வார்ட் விண்ர்பர்க் கூறியுள்ளார். அமெரிக்கப் பேராசிரியரின் அறிக்கை அறிவியல்துறையில் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஐன்ஸ்டீன் ஒரு பொருளின் பொருண்மை அதன் திசை வேகத்தைச் சார்ந்துள்ளது எனக்கண்டார். விளைவாக ஒரு பொருள் நகர்ந்தால் அதன் பொருண்மையும் அதிகமாகிறது. ஒளி யின் வேகமே உயர் எல்லை வேகம் ஆகும். இதிலிருந்து பொருளும் ஆற்றலும் சம மதிப்புடையன என்று முடிவு செய்யும் ஒரு நிலை பெற்றது. அவரது புகழ் வாய்ந்த சமன்பாடு இதன் அடிப்படையில்தான் உருவானது. ஐன்ஸ்டீனின் இந்த கொள்கையின் அடிப்படையில்தான் அணுகுண்டு உருவாக்கப்பட்டது. இந்த சமன்பாட்டினை கண்டுபிடித்தவர் யார்? என்பது குறித்துதான் அமெரிக்கப் பேராசிரியர் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளார். ஐன்ஸ்டீன், பேரண்டம் குறித்துக் கொண்டிருந்த எண்ணத்தின் அடிப்படையே மாற்றியவர். வெளி எனப்படும் ஸ்பேஸ் பற்றியும் காலம் எனப்படும் டைம் குறித்தும் இவர் தந்த கொள்கைகள் முற்றிலும் புதிய கருத்தின் அடிப்படையில் இருந்தவை ஆகும்.


சேர் ஐசக் நியூட்டன் காலம் முதல் நிலவி வந்த அடிப்படைக்கொள்கைகளை அடியோடு மாற்றியவர் என்ற பெருமையும் இவருக்கே உண்டு. 1916ல் இவர் பொது சார்புக் கொள்கையை வெளியிட்டார். இவரது கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அணுகுண்டு வெடிக்கப்பட்ட போது இவர் பெரிதும் வருந்தினார். அணுகுண்டு ஆற்றல் குறித்த உண்மையை அறிவித்து ஜப்பான் அரசைப் பணிய வைக்க முடியும் என்றே அவர் நம்பினார். ஆனால், அணு குண்டு ஜப்பான் மக்கள் மீது வீசப்படும் என்பதை இவர் நினைத்துப் பார்க்கவில்லை.

அணுகுண்டு வெடிக்கப்பட்ட போது, அணுகுண்டின் கண்டுபிடிப்புக்கு காரணமாக இருந்த சார்புக் கொள்கை சச்சரவுகளை சந்தித்தது. இப்போது அமெரிக்கப் பேராசிரியரின் அறிக்கை உண்மையில் சார்புக் கொள்கையை கண்டுபிடித்தவர் ஐன்ஸ்டீன்தானா என்ற சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

# கால்நடை தீவனத்திலுள்ள புரதச் சத்தினால் சுற்றுச் சூழல் மாசடைகின்றதா?

புரத பற்றாக்குறையினால் கால்நடைகளும் அதிக அளவில் பாதிப்பு அடைகின்றன. எனவே, அவற்றுக்குத் தரப்படும் உணவில் புரதச்சத்து போதுமான அளவு கட்டாயம் தேவை என கால் நடை மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால், கால்நடைகளின் உணவில் புரதச் சத்தினை அதிகமாக்கினால் நைதரசன் மாசுபாடு ஏற்படும் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

கால்நடைகளுக்குத் தரப்படும் தீவனத்தில் புரதச் சத்து மிகவும் அதிகமாக இருந்தால் பாலின் அளவு குறையவும் வாய்ப்பு உண்டு என கால் நடை மருத்துவ நிபுணாகள் கூறுகின்றனர்.



முழுமையான சைவ உணவை உண்பவர்கள் பாலின் குறைகளைப் பட்டியலிட்டுக் கொண்டே இருக்கின்றனர். ஆனாலும், பால் ஒரு முழுமையான உணவாகக்கருதப்படுகிறது.

வெண்மைப் புரட்சியின் விளைவாக பால் மற்றும் பாலில் இருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களின் உற்பத்தி மிகவும் அதிகமாக உள்ளது. ஆனால், அதேசமயத்தில் உற்பத்தியாகும் பாலில் உள்ள சத்துக்கள் சரியான விகிதத்தில் இருக்கவும் கூடுதல் கவனம் செலுத்தப் படுகிறது.

பாலில் புரதச்சத்து போதுமான அளவு இருக்க, கால்நடை தீவனத்தில் அதிகமான அளவு புரதம் இருப்பது அவசியம். கால்நடைகளின் உணவு மண்டலத்தில் உள்ள நுண்ணுயிரிகள் புரதச் சத்தினை சிதைத்து அமினோஅமிலங்களாக மாற்றுகிறது. அதிகப்படியான புரதச் சத்து கால்நடைகளின் சிறுநீரில் வெளியேற்றப்படுகின்றது.

இந்தச் சிறுநீரில் உள்ள அமோனியா, நைதரசன் கூட்டுப் பொருட்கள் வளிமண்டலத்தைப் பாதிக்கிறது. வளிமண்டலத்தில் உள்ள காற்று மாசுக்களை மழைநீர் கடக்கும் போது அவை அமிலமாக மாறுகின்றன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உலகெங்கும் தற்போது கால்நடைகளுக்கு தரப்படும் தீவனத்தில் உள்ள புரதச்சத்தினை 1 சதவீதம் குறைத்தால் 60 ஆயிரம் தொன் நைதரசன் மாசுக்கூட்டுப் பொருட்கள் பூமியில் குறையும்.

பாலின் தரத்தை உயர்த்த கால்நடைத் தீவனத்தில் உள்ள புரதச் சத்தின் அளவைக் கூட்டுவதா? அல்லது, சுற்றுச் சூழலை காரணம் காட்டி புரதச் சத்தின் அளவைக் குறைப்பதா? என விஞ்ஞான உலகம் குழம்பித்தான் போய் உள்ளது.

த.அருவி




# வாய்ப்புற்றுநோய் ஏற்படுவதற்கு புகைத்தல் காரணமாகலாம்

எமது மக்களை அதிகம் பீடிக்கும் புற்றுநோயென வாய்ப்புற்றுநோயைக் குறிப்பிடலாம். சுலபமாகத் தடுக்கக் கூடியதும், மிக இலகுவாக ஆரம்பக் கட்டத்திலேயே கண்டுபிடிக்கக் கூடியதுமான இப்புற்றுநோயால், அறியாமை காரணமாகப் பலர் இறக்க நேர்வது துரதிஷ்டமானதே.

வெற்றிலையுடன் புகையிலையைச் சேர்த்து அடிக்கடி சப்பிக் குதப்பிக்கொண்டிருப்பவர்களையே வாய்ப் புற்றுநோய் பெரும்பாலும் பீடிக்கிறது என்பது நன்கு தெரிந்ததே. நீங்கள் வெற்றிலை போடுபவராக இருந்தால் அதை நிறுத்த இதுவே சரியான தருணம். புகைத்தல் இன்னுமொரு முக்கிய காரணம். கடும் சூட்டுடன் நீராகாரங்களைப் பருகுவதும் இப்புற்றுநோய்க்குக் காரணமாகலாம்.

சொத்தைப்பற்களும் உடைந்த பற்களும் தொடர்ச்சியாக உறுத்துவதன்மூலம் வாயினுள்ளும், நாக்கிலும் புற்றுநோய் தோன்றுவதற்குக் காரணமாகின்றன. எனவே உங்களுக்குப் பழுதடைந்த பற்கள் இருந்தால், பல் வைத்தியரிடம் காட்டி அவற்றை அகற்றி விடுங்கள். மேல்வாய்ப் பற்களைப் பிடுங்கக் கூடாது என்று பலரும் தவறாக எண்ணுகிறார்கள். பழுதடைந்த பற்கள் எங்கிருந்தாலும் அவற்றைக் காலந்தாழ்த்தாது பிடுங்குவிப்பது அவசியம்.

நாக்கையும், கன்னத்தின் உட்புறத்தே உள்ள வாயின் மென்சவ்வையுமே வாய்ப்புற்றுநோய் பெரும்பாலும் பீடிக்கிறது. சில வேளைகளில் மேல்வாயையும், முரசையும், 'டொன்சிலை'யும் கூட பீடிக்கலாம். மேற்கூறிய இடங்களில் தோன்றும் எந்தப் புண், வீக்கம், அல்லது மென்சவ்வு வெடிப்பு இரண்டு வாரங்களுக்குள் மாறாவிட்டால் வைத்திய ஆலோசனை பெறுவது மிகவும் அவசியம்.

வலி இல்லாத புண்களை அலட்சியப்படுத்தி விடாதீகள். வாய்ப்புற்றுநோயால் ஏற்படும் புண்கள் ஆரம்பத்தில் எவ்வித வலியையோ, வேதனையையோ கொடுப்பதில்லை. பின்பு, அப்புண்களில் கிருமிகள் தொற்றுவதாலும், அப்புண்கள் நரம்புகளைத் தாக்குவதாலும் கடுமையான வலி ஏற்படலாம். சிலவேளைகளில் வாய்ப்புற்றுநோய் காதுவலியாகக்கூட வெளிப்படலாம். காதுவலியென்று டாக்டரிடம் சென்றால் அவர் சிலவேளை வாயையும் ஏன் பரிசோதிக்கிறார் என்று நீங்கள் வியப்படைந்ததற்குப் பதில் இப்பொழுது கிடைத்திருக்கும்.

பலருக்கு வாய் அவிச்சல் அடிக்கடி ஏற்படுவதையும், வாய் மென்சவ்வுகளில் வெண்மையான பாலாடைபோன்ற புண்கள் (leu coplakia) ஏற்படுவதையும் நீங்கள் கண்டிருக்கக்கூடும். வெற்றிலை சப்புதல், புகைத்தல், உயிர்ச்சத்துக் குறைபாடு போன்றவற்றால் இது உண்டாகலாம். ஆபத்தற்றவையாகத் தோன்றும் இவை. வாய்ப் புற்றுநோயின் முன்னோடி யாகவோ, அல்லது வாய்ப்புற்றுநோயின் முதல் அறிகுறியாகவும் இருக்கலாம். எனவே இத்தகைய பாலாடை போன்ற தோற்றமுடைய புண்களை அவதானித்தால் உடனடியாக வைத்திய ஆலோசனை பெறுங்கள்.

முன் கூறிய பாலாடை போன்ற புண்கள் ஆபத்தற்றவை என உங்கள் வைத்தியர் கருதினால், மருந்துகள்மூலம் குணப்படுத்தக்கூடும். ஆனால் புற்றுநோயின் ஆரம்பமாக இருக்கலாம் என்ற சந்தேகம் சிறிதளவு இருந்தால்கூட, அப்பகுதியிலிருந்து சிறுதுணிக்கைகளை எடுத்து ஆய்வுகூடப் பரிசோதனைக்கு அனுப்புவார். இப்பரிசோதனைமூலம் அது புற்றுநோயா அல்லது ஆபத்தற்ற நோயா என்பதை உறுதியாக அறியமுடியும். சிலவேளைகளில், சில காலத் தின் பின் இப்பரிசோதனையை மீண்டும் செய்யவேண்டியும் நேரலாம்.

வாய்ப் புற்றுநோயைக் குணப்படுத்த ரேடியம் கதிர்ச் சிகிச்சையே முக்கியமாகப் பயன்படுகிறது. ரேடியம் சிகிச்சைக்காக மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குப் போகப் பலரும் தயங்குகிறார்கள். சிறுசிறு தொந்தரவுகளுக்கு அஞ்சி, மஹரகம வைத்தியசாலைக்குச் சென்று பூரண சிகிச்சை பெறாவிட்டால், புற்றுநோய் பரவி வலி மோசமாகி, உணவுகூட உட்கொள்ளமுடியாமல் வேதனைப்பட்டு இறக்கநேரிடும். எனவே வைத்தியர் சிபார்சு செய்யும் சிகிச்சையை உடனடியாகவும், பூரணமாகவும் பெறவேண்டும்.



வாய்ப்புற்றுநோய்க்கு வைத்தியமாகச் சத்திர சிகிச்சை குறிப்பிட்ட மிகச் சில சந்தர்ப்பங்களிலேயே பயன் படுத்தப்படுகிறது.




## ஆசைகள்

என் ஆசைகளைக்
கட்டிப் போடுகிறேன்.
எனினும் அவைகள்
அவிழ்ந்து விடுகின்றன
அதனால் என்
நகங்களைப் போல
வெட்டி விடுகின்றேன்
எனினும் என்
நகங்களைப் போல
மீண்டும் மீண்டும்
வளருகிறது!

கு.புனிதா

# நமது கடலில் ஒக்டோபஸ்

கணவாயை நீங்கள் பார்த்திருப்பீர்கள். கணவாயை நீங்கள் உண்பவர்கள் என்பதால் அதை உங்களுக்குத் தெரிந்திருக்கும்.கணவாயின் தலையில் இருக்கும் கூந்தல் என்ற வெள்ளை வண்ணப் பகுதியைப்பார்த்திருப்பீர்கள். அது போன்ற கணவாயின் நீண்ட உடலைப்போலல்லாமல் கோளமான உடலை உடைய நமது கடலுயிரைத்தான் இங்கு பார்க்கப்போகிறோம். அதன் பெயர் ஒக்டோபஸ்.இதற்கு தமிழில் பெயர் உள்ளதா என தேடியதில் அப்படி எதுவும் அகப்படவில்லை. இது நம்கடலில் உள்ள உயிரினம்.சிலவேளைகளில் மீன்பிடிப்பவர்கள் இதனையும் வலையில் அகப்பட்டு பிடித்து வருவார்கள்.

ஒக்டோபஸ் தன்னுடைய வடிவம், உடலமைப்பு, தன்மை, நிறம், அசைவு, அதனுடைய எட்டு கால்கள் பிறரைப் போல் நடிக்கும்போது அப்படியே மாறிவிடும். இது ஒருவகையான தட்டையான மீன்களை போலவும் கடல் மட்டத்தில் அமைதியாக படுத்துக்கொண்டிருக்கும்போது காட்சியளிக்கும். இது தனது கைகளை கால்களாகவும், கடல் அடியில் நடக்கும் நண்டுகளை போலவும் மாற்றிக்கொள்ளும். இது தன்னையே விசச்சிங்க மீனைப் போலவும், முள்ளம் பன்றியின் முள்ளை போலவும் மாற்றிக்கொள்ளும். சிலநேரங்களில் கடல் நண்டைபோலவும், ஜெல்லி மீனை போலவும், கொடுக்குள்ள கடல் உயிரினங்களை போலவும், கடல் குதிரையைபோலவும், செத்துப் போய் ஒன்று சேர்ந்த கடல் பாம்புகளை போலவும் நடித்து ஏமாற்றும் என்று தற்போதைய புகைப்படங்கள் கூறுகின்றன. இதனுடைய நவரச நடிப்பால் எதிரிகளை ஏமாற்றி உணவு தேட உதவுகிறது.



ஒக்டோபஸ் வரண்ட நாடுகளின் வெப்பம் உயர்வாக உள்ள கடலில்தான் காணப்படுகின்றது. இதற்கு கூந்தலாக இருப்பதை கை என்பார்கள். இதற்கு எட்டுக்கைகள் இருக்கின்றன.இதில் உட்பகுதியில் எதையும் பற்றிப்பிடிப்பதற்காகக் காற்று இறுக்கி குமிழ்கள் இருக்கின்றன.இதற்கு இரு பெரிய பார்வைப்புலன் கொண்ட கண்கள் உள்ளன. இந்த ஒக்டோபஸ் ஒரு மீற்றர் அளவுக்குப் பெரிதாக வளரும்.

ஆனால், அத்திலாந்திக் சமுத்திரத்தில் இரண்டு சென்ரிமீற்றர் அளவு சிறிய ஒக்டோபஸ்ஸும் உள்ளது.

நமது கடலில் பெரிய வகை ஒக்டோபஸ்கள்தான் உள்ளன. கணவாய்போல ஒக்டோபஸ்ஸும் எதிரிகளைக்கண்டால் கறுப்பு மையைக்கக்கிவிட்டு, அந்த இருட்டுக்குள் தப்பிவிடும்.பெண் ஒக்டோபஸ் சினையுற்றதும் ஒரு வாரத்தில் ஒன்றரைலட்சம் முட்டைகளை கடலில் இடும். தொடர்ந்து ஐம்பது நாட்களுக்கு அது அந்த முட்டைகளை காக்கும். 3 மில்லிமீற்றர் அளவு புது ஒக்டோபஸ் பிறக்கும். இப்படியான ஒக்டோபஸ்கள் நஞ்சையும் கக்கி எதிரிகளிடம் இருந்து தம்மைக்காக்கும்.

ஒக்டோபஸ்ஸின் உயிரியல் பெயர்: Octopus vulgaris.

## சொற்சிலம்பம் - 66

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | கோ | ம | தி | ல | ட் | ஸ் |
| டி | கு | நீ | நா | ள் | ர் | ட் |
| மா | பா | ல் | கோ | ன் | ணி | ம் |
| நி | அ | க் | ய | ச | ங் | பெ |
| நா | ட் | த | ஷ் | ரா | வ | ர |
| ர | வ | கி | சா | ய் | யா | ஜே |
| சி | பூ | ப் | ஓ | கி | வி | த் |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 64 இன் விடைகள்

01. நாசா

02. நாகஷாகி

### சொற்சிலம்பம் - 64 இன் பரிசுக்குரியவர்

த.தர்மினி,
தரம்-8,
யா/பண்டத்தரிப்பு மகளிர்,
உயர்தரப் பாடசாலை.

### சொற்சிலம்பம் - 64 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ந.வினோகாந்தன்,
யா/உசன்,
இராம்நாதன் ம.வி.

02. ந.கங்கா,
கிளி/மத்திய கல்லூரி,
கிளிநொச்சி.

03. ப.டிகுஷாந்,
மு/கலைமகள் வித்தியாலயம்,
முள்ளியவளை.

04. பூ.பவளேஸ்வரன்,
கச்சார்வெளி,
பளை.

05. ப.காந்தருபன்,
இல-6 பாலிநகர்,
வவுனிக்குளம்.

06. ம.கவிப்பிரியா,
8ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

07. மு.அனித்தா,
கிளி/பூநகரி நல்லூர் ம.வி,
பூநகரி.

08. சி.லதாங்கி,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

01. புகையிலையில் உள்ள நச்சுப் பொருள.
01) ........................................

02. முதன முதலில் விண்வெளிக்கு மனிதனை அனுப்பிய நாடு.
01) ........................................

பெயர் :- ........................................

முகவரி :-........................................


சொற்சிலம்பம்-66
ஈழநாதம்,
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# முயலாரும் ஆமையாரும்

பகுதி-02




(முற்றும்)



# மண்ணின் மைந்தர்களின் கதை

பார்ப்பதற்கு மெல்லியதாய் ஒரு உருவம், ஆனால் அந்த உருவத்தைவிட பெரிதாய் ஒரு கனரக இயந்திரத் துப்பாக்கி, எந்நேரமும் அந்தக் கருவியுடனேயே உலாவிடும் மெல்லிய உருவம். நெஞ்சிலே …தா காணப்படும் ரவைக்கூட்டு அங்கியும் கண்களுக்குள்ளே நிரந்தர நினைவகமாக பதிந்துவிட்டது.

டேய் விடாதே அடி... அடி ஓடுறான் விடாதே...துரத்தி அடியடா என்ற உச்சரிப்பும் தம்பி வடிவாய் குறி தவறாமல் பார்த்து சுடு சுடு.... அரி ஒருவன் விழுந்திட்டான், மற்றவர்களை எல்லோருமா சுடுவோம் இல்லா குறிபார்த்துச் சுடுங்கோ, தம்பி உனது டொங்கானாலை தவறாமல் அந்த இடத்தை நோக்கி ஒரு எறிகணை அடி பார்ப்போம்,....இல்லை அது கொஞ்சம் விலத்தி விழுந்திட்டுது, தா, நான் அடிக்கிறேன். இந்தா பார் எல்லோரும் செத்தான் என்று நுல்லியமாக எந்தத் துப்பாக்கியிலும் குறிபார்த்து நேர்த்தியாகச் சுடும் திறனும், தெளிவான கட்டளை வழங்கும் அந்தப் போராளியை என்றுமே மறக்க முடியாது. அந்த மறக்கமுடியாத மாவீரன்தான் மேஜர்-தமிழ்ச்செல்வன் இவனுக்கு ஜீ.பி.எம்.ஜி தமிழ்ச்செல்வன் என்றும் ஒரு போர்க்காலப் புனைபெயரும் உண்டு. அப்படி சொல்லுமளவுக்கு அவன் அந்த இலகு பயன்பாட்டு கனரக ஆயுதத்துடன் பின்னிப்பிணைந்திருந்தான்.

சண்டை அணிகளில் தமிழ்ச்செல்வன் அனைவரிடத்திலும் புகழுடன், பெயருடன், இடம் பிடித்ததற்கு அவனது தாயகப் பற்றும், தலைமை விசுவாசமும், நேர்மையும், உண்மையும் சத்தியமுமே காரணம். இவற்றைவிட சண்டையில் அஞ்சா நெஞ்சன், போர்த்துறையில் நல்ல விவேகி, தெளிவான கட்டளை வழங்கும் நல்லதொரு அணித்தலைவன், எந்த இக்கட்டான நிலையிலும் பதற்றமோ, பயமோ, சிறிதளவு தளர்வில்லாமல் நேர்த்தியாகத் தனது அணியைக்கொண்டு சண்டை செய்யக் கூடிய பெரும் வீரன், எந்த நேரமும் ஒரு துடியாட்டத்துடனேயே செயற்பட்டுக் கொண்டிருப்பான். அவனது அபார துணிச்சலும், துடியாட்டமுமே அவனை போராட்டத்தில் பெரும் வீரனாக மாற்றியது என்றால் மிகையாகாது. பாடசாலை போகும்போதே தமிழ்ச்செல்வனிடம் அபார துணிவும், சிந்தனைச் சக்தியும், எதிலும் முன்னேற்றமாக திகழவேண்டும் என்ற அவாவும் இருந்து வந்தது என்று அவரது தாயார் குறிப்பிடுவதுண்டு.

சிறு வயதிலிருந்தே தமிழ்ச்செல்வன் தாயக நேசிப்புடன் வாழ்ந்தான். தொடர்ந்து எமது பிரதேசத்தில் ஏற்பட்ட இராணுவக்கெடுபிடிகள், அவலங்கள் அனைத்தையும் கண்முன்னே கண்டவனுக்கு எப்படியும் சிங்களவருக்கு எதிராக செயற்படவேண்டும் என்ற எண்ணம் தொப்பபுள்கொடி உறவாய் தொடரவே செய்தது.

மேஜர்-தமிழ்ச்செல்வனின் இயற்பெயர் இராதாரமணன் ஒரு நடுத்தரக் குடும்பத்தில் திருநகர் என்னும் கிராமத்தில் பசுமையே உருவான கிளிநொச்சி மண்ணில் 1977ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 04ஆம் திகதி திரு திருமதி ரூபசிங்கம் தம்பதியினருக்கு வீரமகனாய் அவதரித்தான். வீட்டிலே மூத்த முத்தாகப் பிறந்துவிட்டான் என்பதனால் சந்தோசத்திற்கு அளவே இல்லை.



# விடுதலைக்கு உரமிட்டவன்...

சிறுவனாக இருந்தபோது இராதாரமணன் விளையாட்டில், ஆர்வமாக இருந்தான். அதிலும் ஒரு விளையாட்டுப் பொருள் வாங்கிக்கொடுத்தால் அதை விளையாடி நேரத்தைக் கடத்துவதிலும்பார்க்க பெரும்பாலும், அது எப்படி இயங்குகின்றது என்ற அறிவியல் சிந்தனையிலே இருப்பான். அந்த வயதிலேயே அவனது அறிவாற்றல் பெரிதாக வெளிப்படத் தொடங்கியதிலிருந்து, விரச்சாவடையும் வரை தொழில்நுட்பம் சார்ந்த விடயங்களையே முன்னெடுத்துச் செய்வது அவனிடம் வழக்கமாக இருந்தது.

மேஜர்-தமிழ்ச்செல்வனுக்கு மூன்று பெண் சகோதரிகளும் உள்ளனர். இராதாரமணனின் பெயரை ஒத்ததாக அவனது பெற்றோர் மூன்று தங்கைகளுக்கும்பெயர் வைத்தனர் என்பதை அடிக்கடி கூறி சந்தோசப்படுவான். மூத்த தங்கைக்கு இராதிகா, இரண்டாவது தங்கை இரதிஸ்கா, மூன்றாவது தங்கை இரதனிகாவாகும். மூன்று த…கைகளுக்கும்

**— க. மிரேசு —**

தங்களது அண்ணாவில் கூடுதலான பாசத்தை வைத்திருந்தனர். காரணம் குடும்பத்தில் ஆண்சகோதரன் தமிழ்ச்செல்வன் மட்டும்தான்.

தனது ஆரம்பக்கல்வியை அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையில் தொடர்ந்து முதலாம் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையிலான கல்வியை, புனித திரேசா கல்லூரியிலும், அமெரிக்க குருத்துவ பாடசாலையிலும், தொடர்ந்தான். இறுதியில் கிளிநொச்சி இந்துக்கல்லூரியில் ஒன்பதாம் வகுப்புவரை பயின்றான். இந்தக் காலப்பகுதியில்தான் வகுப்பு ஆசிரியர்களாலும், அதிபரினாலும் பெரிதும் புகழப்பட்டான். படிப்பிலும், விளையாட்டிலும், கலைநிகழ்வுகளிலும் சிறந்து விளங்கியதுடன் பல நல்லொழுக்க சான்றிதழ்களையும் பெற்றிருக்கின்றான். பாடசாலையில் ஆங்கிலத்திலும், கணிதத்திலும், பொறியியலிலும் மிகுந்த ஆர்வம் காட்டினான். எல்லோரையும்விட நான் கூடுதலான புள்ளி எடுக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வமுடனும் விடாமுயற்சியுடனும் இருப்பான். இலகுவில் பிழைகள் விடமாட்டான் என்று ஆசிரியர்கள் சொல்வதுண்டு.

ஒருமுறை கணிதப்பாட ஆசிரியர் கணக்கு ஒன்றைத் தந்தபோது விரைவாகச்செய்து முடித்துக்காட்டினான். அப்போது அந்த ஆசிரியர் அதை பிழையெனக் கூறிவிட்டார். உடனே கவலையுடன் திரும்பத்திரும்ப அந்தக் கணக்கைச் செய்து பார்த்தபோது அது சரியாகவே இருந்தது. அப்போது வகுப்பு ஆசிரியரிடம் சென்று நான் செய்தது சரிதானே என்று காட்டியபோது அப்போதும் அவர் அதைப் பார்க்காமல் பிழையென்று சொல்லிவிட்டார். அப்படியே அதை விட்டுவிடாத தமிழ்ச்செல்வன் வீடு சென்று தனது சிறியதாயிடம் அந்தக கணக்கை சரிபார்க்கச் சொல்லி, அவர் அது சரிதான் என்றதும் அவரையும் கூட்டிக்கொண்டு அந்த ஆசிரியர் வீட்டிற்குச் சென்று காட்டி சரிவாங்கிய பிறகே தனது நிலையை, முயற்சியை கைவிட்டான். எப்போதும் தான் நேர்மையாக நடப்பதையே விரும்பும் ஒரு வித்தியாசமான போராளியாக தமிழ்ச்செல்வன் இருந்தான்.

பள்ளி செல்லும் காலத்திலேயே எல்லாத்தொழிலையும் கற்கவேண்டும் என்ற ஆர்வம் இவனிடம் இருந்தது. எனவே தன்னால் இயன்ற தனது வசதிக்கேற்ற தொழிலான ஊர்திகள் திருத்துவதையும், கட்டட வேலைகளையும் படித்து சிறுவயதிலேயே அதிலும் ஆர்வம் காட்டினான். இவற்றை எல்லாம்விட இவனிடம் இன்னுமொரு ஆர்வம் உருப்பெற்றிருந்ததை எவருமே அறியவில்லை. தனக்குள்ளேயே அந்த ஆர்வத்தை, உணர்வை வைத்திருந்தான். அதுதான் தானும் இந்த நாட்டின் விடுதலைக்காக போராடப்போகவேண்டும் என்ற ஆர்வமும் உணர்வும் ஆகும்.

பாடசாலை செல்லும் போதும், வெளியே செல்லும் போதும் விடுதலைப் புலி உறுப்பினரை கண்டால் அளவற்ற சந்தோசத்துடன் கதைத்துகொண்டிருப்பான். அவர்களிடம் போராட்டம் சம்பந்தமான கேள்விகளைக் கேட்பதும் அவர்களின் ஆயுதங்களை வாங்கிப் பார்ப்பதுமாக இருப்பான். இப்படியாக அவனின் ஒரு பக்க வாழ்வு அமையப்பெற்ற பக்கம் சிங்கள 'எதிரிகள் நாளுக்கு நாள் தமிழீழப் பிரதேசங்களில் செய்யும் அட்டூழியங்களைக் கண்டும் இன வன்முறையைக் கண்டும் கொதித்தெழும்பினான். அதற்குச் செயல் வடிவம் கொடுக்க நினைத்தான்.

1991ஆம் ஆண்டு 1ஆம் மாதம் 1ஆம் திகதி இராதாரமணன் தன்னை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக்கொண்டான். அங்கு அந்த விடுதலை வீரனுக்கு தமிழ்ச்செல்வன் என்ற அழகிய நாமம் சூட்டப்பட்டது. தமிழீழ விடிவிற்காய் போராட வந்தவனுக்கு தாய்த்தமிழை முதல் அடியாகக் கொண்டு தமிழ்ச்செல்வன் என்ற நாமம் சூட்டப்பட்டது. அன்றைய நாளிலிருந்து இறுதி மூச்சுவரை தமிழ்ச்செல்வன் தாயக விடிவிற்காகவே தன்னை அர்ப்பணித்திருந்தான். போராட்டத்தில் இணைந்தவனை அவரது குடும்பத்தினர் வீட்டை வாவெனக் கேட்டபோது நான் எமது மக்களின் விடுதலைக்காகவே போராட ஆசைப்படுகிறேன். நான் வரமாட்டேன் என்று தெளிவான பதில் கூறி அனுப்பிவைத்தான்.

தாயக விடிவு தேடிய தனது சுதந்திரப்பயணத்தின் முதல் அடியாக வன்னி மாவட்டத்தில் நடந்த சந்திரன் முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்து வெளியேறிய மேஜர்-தமிழ்ச்செல்வன் பயிற்சி முடிந்ததிலிருந்து 1995ஆம் ஆண்டு வரை வன்னித் தாக்குதல் அணியில் சேவையாற்றினான். அதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியிலிருந்து 1999 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் சேவையாற்றினான். தனது சிறுவயதில் வன்னிமாவட்ட தாக்குதல் அணியில் பல களங்களுக்குச் சென்று சிறப்பாகச் சேவையாற்றினான். அந்தக்கள நடவடிக்கையில் சிறியவனென்று தன்னைக் கருதிடாமல் கொடுத்த பெரியபெரிய களப்பணிகளை செய்து முடித்த போதும் அவனது பிஞ்சுடலை நிறையத் தோட்டாக்களும் துளைத்தே இருந்தன. அதில் சிந்தப்பட்ட குருதி தமிழீழ உறுதிக்கு உர மூட்டின.

வன்னித்தாக்குதலணியில் தமிழ்ச்செல்வன முதல்களத்தை நோக்கிச் செல்கிறான். உள்ளத்தில் எத்தனையோ உணர்வலைகள் தோன்றிட முதற களம் எப்படி அமையப் போகிறதோ? என்று சிந்தித்தவாறே தன் தாய்நாட்டின் விடிவிற்காக முதலாவது களத்தில் சுடுகருவி ஏந்தி எதிரியைத் துவம்சம் செய்கிறான். வவுனியா வண்ணாங்குளச் சண்டை நடந்து முடித்த போது தமிழ்ச்செல்வனும் தனது முதல் கள வரலாற்றைப் பதிக்கிறான்.

1992ஆம் ஆண்டு வண்ணாங்குளச் சண்டை.

1993ஆம் ஆண்டு பூநகரி தவளை நடவடிக்கைக்கு ஜீ.பி.எம்.ஜியின் இரண்டாவது சூட்டாளராகச் சென்று சாதனை படைக்கிறான். 1993ஆம் ஆண்டு நடந்த மணலாறு இதயபூமி -01 நடவடிக்கைக்கு 10 பேர் கொண்ட துணைப்படை அணிக்கு பொறுப்பாகச்சென்று தனது வீரசாதனையைச் செய்தான்.

1995ஆம் ஆண்டு கொக்குத்தொடுவாய் இராணுவமுகாம் தாக்குதலுக்கு ஜீ.பி.எம்.ஜி சூட்டாளராகச் சென்று சாதனை படைத்தான்.

1995ஆம் ஆண்டு சூரியக்கதிர் நடவடிக்கையில் தனது ஆயுதத்துடன் தொடர்சண்டை செய்து எதிரிப்படைகள் கதிகலங்கும் படி செய்தான்.

இதன் பின்புதான் தமிழீழ விடுதலைப்பயணத்தில் நிறையச் சாதிக்கவேண்டும், உறுதியுடன் இறுதிவரை போராடவேண்டும் என்ற நோக்கத்துடன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியில் சேர்ந்து தனது சாதனைகளை நிலைநாட்டத் தொடங்கினான். படையணி பங்கு கொள்கின்ற எந்த நடவடிக்கை என்றாலும் அதில் பங்குகொண்டு படையணிக்கு பெருமை சேர்த்துக் கொடுத்தான்.


சாதனைகளுக்காகவே உருவானது சாள்ஸ் அன்ரனிப்படையணி என அடிக்கடி தனது அணிகளிடம் எடுத்துரைப்பான். தனக்கெனத் தரப்பட்ட அணிகளின் வேலைகள், பயிற்சிகளில் மிகுந்த கவனம் செலுத்திய வீரன் இவன் என்பதனால் அவனது அணிகள் எங்குசென்றாலும் நல்ல திறமைகளை வெளிக்காட்டி வெற்றிகளை பெற்றுத்தந்தது. தாக்குதல் ஒன்றிற்கான திட்டம் வகுக்கப்பட்டு உனது அணியைத் தயார்ப்படுத்து என்று தளபதியின் கட்டளை வந்தவுடனேஅந்தத் தாக்குதல் சம்பந்தமான விளக்கங்கள் வரைபட மாதிரி, அதன் நன்மை இராணுவ அரசியல் லாபங்கள் என்பனவற்றை தனது அணிகளுக்கு சொல்லிக் கொடுத்து தனது அணியை வேகமுடன் தயார்ப்படுத்தி விடுவான். இப்படிப்பட்ட இவனது முற்போக்கான சிந்தனைகளால் சண்டைக்

(20 ஆம் பக்கம் பார்க்க)



தீவகத்தில் பிரேமதாச களமிறக்கிய ஈ.பி.ற.பிக்கும்பல் பிரேமாதாசவின் இலக்கை நிறைவேற்றுவதற்காக தம்மை மக்களின் காவலராக காட்டத்தொடங்கியது.அதாவது சிறிலங்கா அரச நிர்வாகம் செய்ய வேண்டியவேலை ஈ.பி.டி.பியிடம் பிரேமதாச வினால் ஒப்படைக்கப்பட்டது.

அவர்கள் முதலில் இறங்கியது தரைவழி இணைப்பற்ற தீவுகளில்தான். ஏனெனில் யாழ்ப்பாணத்துடன் தரைவழி இணைந்திருந்த தீவுகளில் 99 வீத மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் சென்று விட்டனர். வெளியேற முடியாத மக்கள் தரைவழித்தொடர்பற்ற மக்களாவர். அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுகளில்தான் மக்கள் வெளியேற




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

முடியாது அதிகம் அகப்பட்டனர்.இவர்கள் மத்தியில் இந்தக்கும்பல் அரசியல் செய்யப்புறப்பட்டது. சிறிலங்கா கடற்படை கப்பல்களில் நிவாரணத்துக்காக கொண்டவரப்பட்ட பொருட்கள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன .எந்த ஒரு அரச நிர்வாக அங்கத்துவம் கூட இல்லாத இந்தக்கும்பல் நிவாரணப்பொருட்களை தங்களின் பொருட்களாக காட்டிக் கொண்டு இந்தத்தீவுகளின் மக்களுக்கு தாராளமாக அவற்றை வழங்கின.குறிப்பாக மூட்டை மூட்டையாக பொருட்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.இதன் மூலம் மக்களிடம் நல்லெண்ணத்தை அவர்கள் பெற முனைந்தனர். இந்தக்கும்பல் பற்றி மக்களுக்கு எதுவுமே தெரியாது. இது புதியதொரு கும்பலாக இருந்த காரணத்தினால் மக்கள் இவர்களின் உள் எண்ணங்களை அறியவில்லை.இவர்களை நல்லவர் களாகவே எண்ணியிருந்தனர்.அதன் காரணத்தினால் முதலில் நயினாதீவில் கோலோச்சிய இவர்களை நெடுந்தீவில் இருந்த இரு முக்கியஸ்தர் களால் தமது தீவுக்கு இவர்களை சேவை செய்ய வருமாறு அழைத்தனர். உண்மையில் அவர்களுக்கு முதலில் இவர்களின் அடிப்படை தெரியாது. நெடுந்தீவை பொறுத்தவரை அது மற்றயை தீவுகளை விடத்தொலைவில் ஆழ்கடலில் உள்ளது. நயினாதீவி லிருந்து 7 கடல்மைல் தொலைவில் இது உள்ளது. இதனால் விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினால் அங்கிருந்து படைகள் தப்ப முடியாது. அதேவேளை உடனடியாக உதவியும் செய்ய முடியாது என்ற காரணத்தினால் சிறிலங்கா படைகள் அங்கு தமது தளமோ முகாமோ எதையுமே அமைத்திருக்கவில்லை. 1983இல் மட்டும் சில நாட்களுக்கு சிறிலங்கா இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்து பின் அங்கிருந்து அவை வெளியேறிவிட்டன. நெடுந்தீவு சிறிலங்கா படைகளுக்கு ஆபத்தான ஒரு பொறியாகவே இருந்து வந்தது. அதனால் அது சிறிலங்கா படைகளின் பிடியில் இல்லாத தீவாக இருந்து வந்துள்ளது. தற்போதைய போர்நிறுத்தத் தின் பின்னரே அங்கு சிறிலங்கா கடற்படையினர் முகாம் அமைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆக சிறிலங்கா படைகள் செல்ல அஞ்சிய தீவில் தமது துணைபடையான ஈ.பி.டி.பியை அந்த மக்களின் ஆதரவுடன் தங்க வைக்க சிறிலங்கா படைகள் விரும்பின் .அத்தீவின் இரு பிரமுகர்களின் அழைப்பு இதற்கு வாய்ப்பாக அமைந்தது. உடனடி யாக இந்தக்கும்பல் அரச நிவாரணப்பொருட்களை படகில் ஏற்றியவாறு நெடுந்தீவுக்கு சென்றது. மாவலி இறங்குதுறையில் படகில் கொண்டு செல்லப்பட்ட பொருட்களை இறக்கிய இக்கும்பல தாமே அவற்றை சுமந்து சென்று மக்களுக்கு மூட்டைமூட்டையாக கொடுத்து தமது நாசகார அரசியலை அரங்கேற்றத்தொடங்கியது. இந்த நிவாரணப்பொருட்களை இப்படிக் கொடுத்ததன் மூலம் அந்தக்கும்பல் நல்லபெயரை ஆரம்பத்தில் பெற்றது.இதற்கு இக்கும்பல் புத்தம்புதிதாக இருந்ததால்இது பற்றி தெரியாததே முதல் காரணம்.இந்த நல்லெண்ணத்தை வைத்துக்கொண்டு நெடுந்தீவில் அந்தக்கும்பல் சிறிலங்கா படைக்கு பதிலான ஒரு படையாக தளம்கொண்டது.இந்தக்கும்பலின் சுயரூபம் சில ஆண்டுகளில் வெளுக்கத் தொடங்கியது.அதேவேளை நெடுந்தீவு ஒரு போர்ப்பொறி என்பதையும் இந்தக்கும்பல் பட்டுணர்ந்தது.


துருவன்




# வன்னியில் பண்பாட்டுக் கால கிராமிய குளங்கள்

இந்தியாவின் வடமுனை முதல் இலங்கையின் தென் முனைவரை 1873 முதல் 1907 வரை நீர்ப்பாசனவியல் பொறியியலாளராக பணியாற்றிய எச்.பார்க்கர் ஒரு வரலாற்றாய் வாளராகவும் பணியாற்றியுள்ளார். வட இந்தியரால் தென்னிலங்கை வரை தான் கண்டநீர்ப்பாசன முறைகளை அறிந்தவரை இலங் கையின் நீர்ப்பாசனத் தொன்மை பற்றின சில முடிவுகளை தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு நீர்ப்பாசன முறையைக்கொண்டு வந்தவர்கள் வட இந்தியர்கள் என்ற கருத்தை எச். பார்க்கர் நிராகரிக்கிறார். இந்தியாவில் குளங்களை கட்டி வாய்க்கால்கள் மூலம் பாசனம் செய்யும் முறை கி.மு 3000 முதல் வந்து விட்டதாக பார்க்கர் கூறிய கருத்தை முன்னர் பார்த்தோம். ஆரியர்கள் குடியேறிய கங்கைச் சமவெளிகளில் இத்தகு நீர்ப்பாசனம் பற்றி அறிந்திருக்க வேண்டும். ஆனால் இலங்கைக்கு வந்ததாக கூறப்படும் வட இந்தியர்கள் நீர்ப்பாசனமுறை, குளங்களை கட்டும் நுட்பங்களை அறிந்துதான் வந்தார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை. அசோகனுக்கு முன்பாக வடஇந்தியாவில் புஸியகுப்தன் குளம் கட்டியதாக கூறப்படுகின் றது. அவர்கள் அதை திருத்தி யமைத்தான் என்றாலும் அந்தக் கட்டுமானம் சிறிய தொன்றாகும்.



சிங்களவர் நீர்ப்பாசன முறையை பெற்றிருந்தார்கள் என்றால் அதை தென்னிந்தியாவி லிருந்தே பெற்றிருக்க வேண்டும்.



தென்னிந்தியாவில் குளங்கள் அணைக்கட்டுக்கள் மூலம் தொல்காலத்தில் கட்டப் பட்டன. அவை கிராமங்களுக்காக குளங்களாக இருந்திருக் கின்றன. அவற்றின் அணைகளின் உயரம் 6அல்லது 10அல்லது 12அடிவரை உயரமானவையாக இருந்திருக்கின்றன. கிராமங்களில் குளித்தல் போன்ற பயன்பாட்டுக் காகவும், நீர்ப்பாசனத்துக்காகவும் இக்குளங்கள் கட்டப்பட்டன. என்று பார்க்கர் கூறுகின்றார்.

தமிழகத்திலும் சம காலத்தில் இலங்கையிலும் பரந்திருந்த பெருங்கற் பண்பாட்டுகால கிராமியக குளங்கள் இருந்தன. வன்னியில் இக்குளங்கள் உள்ளன.

பெருங்கற்பண்பாடு இலங்கைமுழுதும் பரந்திருக் கின்றன. யாழ்ப்பாணம் தவிர பெருநிலப்பரப்பில் நிலக்கீழ் நீர்வளம் மிகக் குறைவானதே.

ஆகவே கி.மு. 1000 முன் பெரு நிலப்பரப்பில் படைத்த பெருங்கற் கால குடிகள் வளமாக இம்மக்கள் வாழ்ந்ததற்கான அடித்தளமான குளங் கள் இருந்தன. என்பவற்றுக்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

இதன்மூலம் தமிழர்கள் நீர்ப்பாசன முறைமையை சுதேச மாக கொண்டிருந்தனர் என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

கிராமியக்குளங்களின் அடுத்த பரிணாமமாக பெரிய குளக் கட்டுமானங்கள் ஆரம்பமாகின. மன்னாரின் கட்டுக்கரைக் குளம், இலங்கையில் முதுமையான பெரியகுளத்தில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

குரலோன்

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூல்வல்லமையாலும் நாவன் மையாலும் சொல்லமுதம் வழங்கிச் சபையோரைச் சுவை யொராக்குவதில் கெட்டித்தனம் மிக்கவர் சொக்கன்.

**பாடநூல் எழுத்தாளர்**

அடுத்து பாடநூலாக்கம் என்பது அதுவும் சிறுவர்களுக்கான மொழிப்பாடத்துக்கான பாடநூலாக்கம் எளிதான செயல் அன்று. அதற்கு மொழி அறிவும் ஆற்றலும் இருந்தால் மட்டும் போதாது. குறிப்பிட்டபாடநூல் பாடநூல்கள் எந்தப் பருவத்துப் பிள் ளைகளுக்கென ஆக்கப்படுகின்றன என்பது முதற்கண் தெளிவாகத் தெரியவேண்டும். அத்தெளிவு ஆக்கப் படும் நூல் குறிப்பிட்ட பிள்ளைகளு டைய பருவத்துக்கு பொருந்துவதாக அமைய உதவும். நூலைப்பயன் படுத்தப் போகின்ற பிள்ளைகளின் உளவியல் தேவைகள், நாட்டங்கள், என்பனவும் அவர்களிடமிருந்து எதிர் பார்க்கப்படுகின்ற அறிவின் தரமும் நூலை ஆக்கும் ஆசிரியருடைய மனதில் பதிந்திருக்க வேண்டும். அப் போதுதான் ஆக்கப்படும் நூல்படிப்பவர் களுக்குப் பொருத்தமானதாகவும் பயனுடையதாகவும் அமையும் இவையெல்லாம்பொலியப் பெற்று விளங்குபவர் சொக்கன்.

**கட்டுரைக் கோவைகள்:-**

மாணவரோடு தொடர்புள்ள எல்லாத் துறைகளையும் தழுவியது கட்டுரைக் கோவை. இயற்சொற்களே பயிலும் எளிமையான உரை நடை ஒழுங்கான பந்தியமைப்பு- செப்ப மான குறியீடுகள் இவை கட்டுரைக் கோவையின் சிறப்பியல்புகள். இவ் இயல்புகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து கட்டுரைகள், கடிதங்கள், கற்பனைக் கதைகள், உரையாடல் கள், கூட்ட அழைப்புக்கள், அறிக்கை கள், பத்திரிகைச் செய்திகள் ஆகிய பிரிவுகளில் கட்டுரைக் கோவை சிறப் புற அமைந்துள்ளது எனலாம். திருக் குறள் முழுவதற்கும் அவர் ஒரு பொழிப்புரையும் எழுதியுள்ளார்.

**புனைப் பெயர்கள்**

ஈழத்து இலக்கிய உலகை கலாநிதி கந்தசாமிச் செட்டி சொக்க லிங்கம் தன்னை மறைத்து தமிழ் உலகிற்கு சொக்கன், ஆராவமுதன் அடியவன்-வேனிலான்-தேன் சுடலை யூர்ச் சுந்தரன்- பொய்யாம் மொழியார் சோனா- திரிபுராந்தகன்- கன்றுக்குட்டி ஈழத்துப் பேய்ச் சாத்தன்- குறளன். ஞானம்- ஜனனி- சாம்பவன்- சட்டம் பியார்- எதார்த்தன்- பாலன் என்னும் புனைபெயரில் தமிழ் உலகிற்கு ஆற் றிய பணிகள் நன்றியோடு நினைவு கூரத்தக்கன.

சிறுகதை எழுத்தாளனாக- கவிஞராக நாவலாசிரியராக- நாடக ஆசிரியராக -கட்டுரையாளராக- கல்வி யாளராக- சமயநூல் எழுத்தாளராக- பேச்சாளராக- மொழி பெயர்ப்பாளராக- நடிகராக- நெறியாளராக- ஆசிரியராக- அதிபராக பாடநூல் எழுத்தாளராக என்றும் அவர் தொடாத துறையு மில்லை அவர் தொட்டுத்துலங்காத துறையுமில்லை.. இவ்வளவும் கூறிய பிறகும் ஒரு வினா என் உள்ளத்தில் தோன்றுகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகிற்கு சொக்கனின் பங்குஎப்படிப்பட்டது. தமிழ் அறிஞர் திருக் கூட்டத்திலே அவர் எந்த வரிசை யில் எந்த இடத்தில் நிற்கின்றார்?

வாழ்க்கையினை நேரடி யாக அணுகாது நூல்களின் வாயி லாக அணுகும் தன்மையே சொக்க னிடம் காணப்படுவதாகும். இதுவே சொக்கனின் பலம். அவரின் பலவீன மும் அது தான்.

முத்தமிழ் துறைவல்லா னாக இருந்து இலக்கிய உலகில் செங்கோலோச்சிய சொக்கன் ஐயா அவர்கள் விழிக்குத்துணையான ஒளி யல்ல. விழியேயான ஒளி முகத்தி ரண்டு புண்ணிருந்த புல்லர்க்கும் கண் கொடுத்துக்காட்டிய ஒளி. இவ் வொளி யால் ஒளி பெற்ற அகல்விளக்குகள் ஆயிரம் ஆயிரம் இது தன் பிரகா சத்தைப் பிரபலப்படுத்த தெரியாத பேதை ஒளி. மற்றவர்க்கு இரங்கித் தன்னைத் தான் தாழ்த்திக் காட்டும் தன்னெளி பொங்கும் தனி யொளி இனித் தெய்வ ஒளியாய் திகழும்.

# வீடு

## சீரற்ற முடிவுகள் தொடர்பான ஒரு விமர்சனம்



தனி மனித உயர்வை எட்ட ஒவ்வொருவரும் விரும்புகிறோம். இது உள் மன இயக்கமானதால் வெளிப்படையாக தெரியவில்லை. நம்மை அறியாமலேயே உள் மனதில் உயர்வடைய வேண்டும் என்ற தாகம் இருக்கிறது. இந் நிலையில் பெரும்பாலானவர்கள் திட்டமிட்ட செயற்பாங்குடனேயே வாழ்வியல் கோலங்களை வடிவமைக்கின்றார்கள். சூழ்நிலைகள் சில சந்தர்ப்பங்களை மாற்றியமைத்து விடுகின்றன.

இந்த வகையில் 26.11.2004 திகதி வெள்ளிநாதம் வீடு பகுதியில் வெளியான சீரற்ற முடிவுகளே உளப்பாதிப்புக்குக் காரணம் என்ற பகுதியில் எழுத்தாளர் சீரற்ற முடிவுகளே உளப் பாதிப்பிற்குக் காரணம், அதுவும் பெண்களையே முதன்மைப் படுத்தி குறிப்பிட்டுள்ளார். இவர் கூறிய உளவியல் கருத்துருவங்கள் வரவேற்கப் படினும் சீரற்ற முடிவுகள் உளப் பாதிப்பிற்கு காரணம் என்பது விமர்சனத்திற்குரியது.

பெண்களுக்கு எதிர்பாராத பல சம்பவங்கள் கூட உளப் பாதிப்பை ஏற்படுத்தும்.

1. நயவஞ்சகம்
2. நம்பிக்கைத்துரோகம்
3. கழுத்தறுப்பு
4. பழிவாங்கல்
5. இருட்டடிப்பு
6. அச்சுறுத்தல் போன்ற பல கோணங்களில் உளப்பாதிப்பை ஏற்படுத்தும்.

தவறுகளே புரியாத நேர்மைத் திறன் மிக்க பெண்கள் ஏன் உளம் பாதிப்படைகின்றார்கள்? நேரே கதைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியது. ஆயினும் வேறு பல பிரச்சினைகளையும் அவப் பெயர்களையும் சம்பந்தப்பட்டவர்கள் நேர்மைக்குப் புறம்பானவர்களாக இருந்து தோற்றுவித்து விடுகின் றார்களே. ஒரு தலைப்பட்சமான சில முடிவுகள் இவ் விடயத்தில் ஏற்றுக் கொள்ள முடியாதன.

பெண்ணின் சுய பாதுகாப்புக்கு அவர் எந்நேரமும் சவால் விட்டுக்கொண்டே இருக்கின்றார். சுயபாதுகாப்பு, சுயகௌரவம்-தன்மானம் என்பவற்றுக்கு பெண், அவள் தான் சுத்தவாளி.

✤ உறவுகள் உரிய முறையில் உணர்த்தப்படாமல், மனம் விட்டுப்போதலின்றி கதைகட்டுதல், பழிவாங்குதல் போன்ற உளப் பாதிப்பை ஏற்படுத்தும்.

✤ ஒரு பெண்ணின் மீது பல்வேறு அச்சுறுத்தல்கள், வீண் வதந்திகள் மூலம் தேவையற்ற அடையாளங்களை ஒரு குழாம் ஏற்படுத்தி, வதந்திகளைப் பரப்புவதன் வழி அவளது உளம் பாதிப்படைகிறது.

✤ சீதனம், சமத்துவமின்மை, பாலியல் துஷ்பிரயோகங்கள் உளம் பாதிப்படைய பெண்களுக்கு ஏது வாகிறது.

✤ மணமுறிவு, பிரிந்து வாழ்தல் போன்றன உளப் பாதிப்பை ஏற் படுத்துகின்றன.

✤ பலாத்காரம் வன்முறைகள் பெண்களுக்கு பெருமளவு உளப்பாதிப்பை ஏற்படுத்துகிறது.

"வீடு" எனும் பகுதியில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அதே வேளையில் அவர்களின் அடக்கி ஒடுக்கப்பட்ட உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

பல காலமாக அப்பாவித்தனமாக, ஆளணியற்ற பெண்களின் அடக்கி ஒடுக்கப்பட்ட உணர்வுகளுக்கு, தந்திரமான-சாதுரியமான வழிகளைக் கண்டு போதனை செய்கின்றோமேயொழிய பிரச்சினைகளின் பின்னணி என்ன? சமூகக் கட்டமைப்பில் பெண்ணியத்துக்கு பெருமை சேர்க்கின்றோமா? பெண்கள் தொடர்பான விலகல் நடத்தைக்கு காரணமானவர்கள் யார்?

விடை- பெரும்பாலும் இந்தச் சமூகத்தில் சுயநலங்கள் எனும் போர் வையில் வாழும் விஷமிகள்தான். சில சந்தர்ப்பத்தில் பெண்களே எதிரிகளாவர்.

ஆரம்பம் இருந்தால் தானே முடிவிருக்கும். தவறாகப் புரிதல் என்பது, விசாரணையின் போது உண்மைகள் உரிய முறையில் உணர்த்தப்பட்டால் இடம் பெறாத ஒன்று. சூழ்ச்சிகள்- நரித்தந்திரங்கள் அப்பாவிப் பெண்களுக்கு ஆபத்தைக் கொடுக்கும்.

உளவியலாளர் கூறுவார்கள், உணர்வுகள் தான் பாதிக் கப்பட்ட பெண்களின் கலை வடிவம்.

எங்கள் தமிழீழத்தில் நீதி நெறிக்குட்பட்ட உரிமைகளாக பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் எல்லோருக்கும் பொதுவானது.

சந்தர்ப்பங்களை சாதகமாக்கி சதி செய்பவர்கள் பணம், பதவிகளை முதன்மைப்படுத்தி அப்பாவிப் பெண்களை அநியாயப் படுத்துபவர்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக:- ஒரு பெண், ஒரு ஆண்கள் குழாம் தன்னை நெடுங் காலமாக அடையாளப் படுத்துவதை உணர்ந்து நேரே வினாவினாள் தமது காரணங்களை இருட்டடிப்பு செய்து விட்டு அப் பெண்மீது அபாண்டமான பழிகள் திணிப்பவர்கள் இருக்கின்றார்கள்.

வன்குழு நடத்தைப் பாங்குகள் இன்றைய கால கட்டத்தில் பெண்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இவ் எழுத்தாளர் கூறும் உளவியற் தீர்வுகள் ஏற்றுக் கொள்ளப் படினும் சீரற்ற முடிவுகள் மட்டும் தான் உளப்பாதிப்பிற்கு காரணம் என்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

**இனியவள்**

## இப்படிச் செய்யலாம்...

*கண்ணாடி ஜன்னல்களை தேனீர்ஊற்றிய பிறகு எஞ்சும் தேயிலைக் கழி வால் சுத்தம் செய்யலாம். இக் கழிவைப் பூசி கடதாசியால் துடைத்தால் நன்கு சுத்தமாகிவிடும்.*

✤ ✤ ✤

*துணியில் நீலம் திட்டுப்படாதிருக்க துவைத்த துணியை நீலத்தண்ணீரில் நனைக்கும்போது அந்த நீலத் தண்ணீரில் சிறிது சலவைச் தூளை கலக்கவேண்டும். இப்படிச் செய்தால் நீலம் துணியில் திட்டுத்திட்டாகப் படியாது.*

✤ ✤ ✤

*துணிகளை பூச்சி தாக்காது காக்க துணி அலுமாரியில் நான்கு மூலைகளிலும் தேங்காய் எண்ணெய் ஐந்தாறு துளிகள் விடவும்.*

✤ ✤ ✤

*புத்தகங்களை அந்து பூச்சிகள் கெடுக்காதிருக்க, புத்தக தட்டில் சில துண்டுகள் சந்தனக் கட்டிகளை போடவும்.*

✤ ✤ ✤

*பெண்கள், வாரத்திற்கு ஒரு தடவை சமையல் அறையைக் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். சமையல் அறை சுத்தமாக இல்லாவிட்டால், வீட்டில் மழைக் காலங்களில் நிறைய பூச்சிகள் சேரும். சமையல் அறை சுத்தமாக இல்லாத வீடுகளில் தான் கரப்பான்கள் நிறையச் சேருகின்றன!*

✤ ✤ ✤

*பிஸ்கட்டுகளை எப்போதும் பேணிகளில் போட்டு வைக்க வேண்டும். தகரபேணியின் அடியில் பொலித்தின் பேப்பரைப்போட்டு அதன் மீது பிஸ்கட்டுகளைப் போட்டு வைத்தால் பிஸ்கட்டுகள் எப்போதும் மொறுமொறுப்பாக இருக்கும்.* ✤ ✤ ✤

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## பாண் போன்டா




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | -1kg |
| தேங்காய் | -1 |
| பாண் | -1இறாத்தல் |
| மிளகாய்த்தூள் | -1 1/2 கரண்டி |
| வெங்காயம் | -100g |
| பச்சமிளகாய் | -50g |
| தே.எண் | -1 1/2 L |
| தண்ணீர் | -1 1/2 L |
| உப்பு | -அளவாக |
| பெருஞ்சீரகம் | -அளவாக |
| கடுகு | -அளவாக |
| வெந்தயம் | -அளவாக |
| கறிவேப்பிலை | -அளவாக |

செய்முறை:-

உருளைக் கிழங்குக் கறிவைப்பது போன்று வைத்துக் கொள்ளவும்.

பாணை சிறு சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். வெட்டிய துண்டுகளை நாம் முன்னர் குறிப்பிட்ட 1 1/2 L நீரில் பாணை நனைத்தல் வேண்டும்.

பின்னர் நனைத்த பாண் துண்டின் மேல் ஆறிய கறியை எடுத்து வைத்து நன்றாக உருட்டுதல் வேண்டும். உருட்டிய உருண்டைகளை தட்டில் இடல் வேண்டும்.

சிறு தாச்சியை எடுத்து அதனுள் எண்ணெய்யை ஊற்றி எண்ணெய் சூடாகியதும் அந்த சிறு உருண்டைகளை அதனுள் இட்டு நன்கு பொன்நிறம் வரும் வரையும் பொரிய விட்டபின் நாம் அதனை எடுத்துத் தட்டில்வைத்துக் கொள்ளலாம்.

## கட்டுப்பாடான குடும்பம்

கட்டுப்பாடுள்ள குடும்பத்தின் ஒரு பிரிவாக எப்படிப் பார்ப்பது இக் கட்டுக்கோப்புக் குடும்பம். இவ்வகை குடும்ப உறுப்பினர்கள் ஒன்றிணைந்து ஒரே சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இருப்பார்கள். எவரேனும் ஒருவர் தன் பொறுப்பை உணரவில்லை எனில், தன் விருப்பப்படி நடக்க முற்படுகையில், மற்றவர்கள் அவமானப்பட்டதாக உணர்வார்கள். இக்குடும்பங்களில் பாதுகாப்பு மிகுதியாக இருக்கும். ஆனால் இக் குடும்ப பிள்ளைகள் தனிமனிதர்களாக நிமிர்ந்து நிற்பது கடினம். கட்டுக்கோப்பான குடும்பத்தில் வளர்ந்த பிள்ளைகள் சில சமயம் தங்களைப்பற்றியே நிச்சயமற்றவர்களாகவும், எல்லாவற்றிற்கும் மற்றவர்களை சார்ந்து நிற்பவர்களாகவும் இருப்பார்கள்.

யார் யார் என்ன செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டுமென்பதில் தெளிவாக இருப்பதோடு உறுதியாகவும் இருப்பார்கள். அரட்டை அடிப்பது மகிழ்ச்சியாக கொஞ்சிக் குலாவுவது குறைவு. ஒவ்வொருவரது செயல் திட்டமும் கட்டாயப்படுத்தப் படும். குழந்தைகள் ஒரு வித நெருக்கடியை உணருவார்கள்.




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்-27**

பெயர்:......................................

முகவரி:......................................

......................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




# பூமணியின் கருவேலம்பூக்கள்

பூமணி 'வெக்கை', 'பிறகு', 'வெளிச்சம்' எனப்பல புத்தகங்களில் சிறு கதைகளையும் நாவல்களையும் தந்தவர். கரிசல்காடு எனப்படுகிற வரட்சி நில மக்களின் வாழ்க்கையை தன் கதைகளில் சொன்னவர். அப்படிச் சொல்லி தன்அடையாளத்தை நிரூபித்தவர். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையைப் பேசுவதுதான் பூமணியின் அக்கறை. ஏழை மக்களின் கண்ணீரும், ரோஷமும் அறியாமையும் உறுதியும் நம்பிக்கையும் தான் பூமணியினுடைய கதைகளில் படிந்திருக்கும் அம்சங்கள். கரிசல்காட்டு மண் பூமணியின் கதைகளில் மணக்கும். கரிசல் மனிதர்களின் முகமும் மொழியும் அந்தக்கதைகளில் தெரியும். தன்னுடைய எழுத்தின் மூலம் கரிசலின் மீது தனிக்கவனத்தை ஏற்படுத்தியவர்.

இவ்வாறு கதையாளனாக இயங்கும் பூமணி தந்ததுதான் கருவேலம் பூக்கள் என்ற நல்ல தொரு சினிமா. ராதிகா, நாசர் உட்பட கரிசல்காட்டு வாழ்க்கையைக் காட்ட பலர் இதில் நடித்திருக்கிறார்கள். கரிசல்காடு என்பது தமிழகத்தின் தென்பகுதி நிலம். வரட்சியின் சூடு நிரம்பிய மண் அது.

வானம் பார்த்த நிலம் அது பனையும் செம்மண்ணும் சிறு குளங்களும் சிற்றோடையும் கோடையும் கலந்த களம். இந்தக் களத்தில் வாழ்வுடன் போராடி மாயும் மனிதர்கள் பற்றி பூமணி மட்டுமல்ல, தமிழின் மிகச்சிறந்த படைப்பாளிகள் பலரும் எழுதியிருக்கிறார்கள். பாரதிராஜா தொடக்கம் சேரன் வரையில் இந்தக்களத்தை வைத்து பலர் நல்ல படங்களைத் தந்திருக்கிறார்கள்.

பூமணியின் கருவேலம் பூக்கள் ஏனையவர்களின் படங்களைவிட சற்று அழுத்தமானது. அவருடைய எழுத்தைப் போல அவரின் சினிமாவிலும் கூர் அதிகம். வெம்மை கூடுதல் இந்தக் கூரையும் வெம்மையையும் தாங்கக் கூடிய அளவுக்கு தமிழ்ச்சினிமாவின் பார்வையாளன் இல்லாமற் போனது தமிழின் துயரநிலை.

***கரிசல் காட்டோடு:-***

எங்களுடைய நிலத்துக்கும் எங்களுடைய வாழ்வுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமைகளுண்டு அந்தமனிதர்களைப் போலவே நமது முகங்களும் மனங்களும் அவருடைய வாழ்க்கையைப் போலவே எங்களுடைய வாழ்க்கையும் அவர்களுடைய உணர்வுகளைப் போன்றதே நமது உணர்வுகளும். கனவுகள், கற்பனைகள், நம்பிக்கைகள், தோல்விகள், வெற்றிகள், சரிவுகள், எழுச்சிகள், மகிழ்ச்சியும் துயரமும் என்று எல்லாவற்றிலுமே ஒத்ததன்மைகளை காணமுடியும்.

கருவேலம் பூக்கள் ஒரு வறியகுடும்பத்தின் கதை. கரிசல் களத்தின் வாழ்க்கை.

நமது மனிதர்களின் உண்மையான வாழ்க்கையைப் பார்க்க வேணுமா நிச்சயம் கருவேலம் பூக்களைப் பாருங்கள்.



உழைக்கப் போகாத சோம்பேறிக் கணவனுடன் வாழும் போது ஒரு பெண் படுகின்ற பாடுகள் எவ்வளவு துயரமானது. வருமானத்தைக் கொடுக்காவிட்டாலும் பிள்ளைகள் மூன்றுமட்டும் அந்தக்குடும்பத்துக்குண்டு. இரண்டு பிள்ளைகள் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு வேலைக்குப் போய்விடுகிறார்கள். மிகச் சின்ன வயதில் தீப்பெட்டி வேலைக்குப் போவது தவிர்க்க



முடியாத ஒரு நியதிபோல அந்தக் கிராமங்களிலுள்ள நிலை. கிராமங்களை சூழ்ச்சிப் பொறிக்குள் வைத்திருக்கும் முதலாளிகளின் தந்திரமும் லாபநோக்கும். எல்லாவற்றுக்கும் பலியாகிக்கொண்டேபோகும். கிராமத்துச் சனங்கள்.

கள்ளும் குடியும் வீட்டில் சண்டையுமாக பொறுப்பற்றுத்திரியும் கணவன் (நாசர்) ஆண் என்ற அடிப்படையில், புருஷன் என்ற உரிமையில் அதிகாரம் செய்து மனைவியும் பிள்ளைகளும் உழைத்த பணத்தை குடிக்குப் பறிப்பது யதார்த்தம்.

வீட்டுச் சூழல் சரியாக இல்லாததால் பிள்ளைகள் தம் எண்ணப்படி போதல் கடைசிப்பிள்ளையையாவது படிக்கவைக்க வேணும் என்ற ஆவலோடு கஷ்டப்படுகிற தாய் எல்லா ஆசைகளுக்குமாக தோட்டத்தில் கூலியாகவும் வீட்டில் ஓய்வில்லாத உழைப்பாளியாகவும் வாழும் அவளின் மரணம்.

தனது பொறுப்பில்லாத நடத்தைகளால் பிள்ளையும், மனைவியும் இறந்தபின் இனிக்குடிக்கமாட்டேன் எனச் சத்தியமெடுக்கும் தந்தை. மறுபடியும் கள்ளைக் கண்டவுடன் சத்தியத்தை மறந்து குடியின் பின்னால் செல்லுவது. மிஞ்சிய இரண்டு பிள்ளைகளும் தீப்பெட்டித்தொழிற்சாலைக்கு சிறுவயதிலேயே கூலிக்குப்போதல்.

இப்படி படம் முழுதாக யதார்த்தத்தில் இயங்குகிறது. பூமணிகாட்டிய யதார்த்தம் மிக அழுத்தமானது. அதனால்தானோ என்னவோ படத்தைப் பார்க்கும் போது நமது இதயம் கரைந்துபோகிறது.

கதை, கதைப்புலம், கதை மனிதர்கள் அந்த மனிதர்களின் வாழ்க்கையும் மொழியும் எல்லாமே கருவேலம்பூக்களை மறக்கமுடியாததாக்கின்றன.

தீப்பெட்டித் தொழிற்சாலைகளின் குரூரமான அமைப்பு முறையையும் சிறுவர் உழைப்புச் சுரண்டலையும் உரிமை மீறலையும் பூமணி காண்பிக்கும் விதம் இதயத்தை உறைய வைக்கிறது.

சாதிப்பிரச்சினை, மது, ஆணாதிக்கம், கூலிகளின் அல்லல், சமூக நீதியின்மை, அறியாமை எனப்பல பரிமாணங்களில் விரிகிறது கருவேலம் பூக்கள். ஒரு நல்ல படைப்பின் அடிப்படை. அது பல தெறிப்புகளில் பரிமாணங்களை வெளிப்படுத்துவது. கருவேலம் பூக்களிலும் இது உண்டு. ஒரு சினிமாவை பார்க்கிறோம் என்ற உணர்வு துளிகூட வராமல் அந்தக் கதையோடு நாமும் ஒருவராய் வாழ்வதாகவே படுகிறது. குறிப்பாக கிராமியச் சூழலில் பனங்காட்டுடன் வாழ்ந்தவர்களுக்கு இது நன்றாகப் புரியும்.

கேளிக்கையாகவும் வெறும் சேக்கஸாகவும் மாறிவிட்ட இன்றைய தமிழ்ச்சினிமாவில் வித்தியாசமான படமாக பூமணி துணிந்து கருவேலம் பூக்களை தமிழர்களிடம் தந்திருக்கிறார்.சினிமாவை இன்னும் சரியாக விளங்காத சமூகம் எங்களுடையது. மகேந்திரன், பாலுமகேந்திரா, ருத்ரய்யா, ஜெயகாந்தன்தன் போன்ற பலரை ஒரு எல்லைக்குள்ளே முடக்கிய பார்வையாளர்கள் தமிழ்ச் சினிமாவின் நிரந்தர ரசிகர்களாக இருக்கிறார்கள். இவர்களை கடந்துதான் நல்ல சினிமா உருவாகவேணும்.

பூமணி இதற்கு முயன்றுள்ளார். அவருடைய கதைகளைப் போல இந்தச் சினிமாவினூடாகவும்.

— ஆரதி



# கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் என்ற வழியில் பனைச்செல்வம்

திருவள்ளுவரின் கையிலிருப்பது ஏட்டுச்சுவடியும் எழுத்தாணியும். தமிழின் அறிவைச் சேமிப்பதற்கும் கடத்துவதற்குமான மூத்த ஊடகமாக ஏடுகள் இருந்திருக்கின்றன. கடந்த நூற்றாண்டுவரையில் ஏட்டுச்சுவடியின் புழக்கம் இருந்துள்ளது. ஏடுகள் ஓலையிலேயே இருந்தன. அதுவும் பனை ஓலையில்.

தமிழர்களின் தின்பண்டங்களில் முக்கியமானதாக பனம் பண்டங்கள் இருந்திருக்கின்றன. கிழங்கு, பூரான், பனம்பழம், பனம் பணியாரம், பனாட்டு, நுங்கு, குருத்து, புளுக்கொடியல், ஒடியற்பிட்டு, ஒடியற்கூழ் என்று இந்தவகை நீளும். கள்ளு, பதனீர், பனங்கட்டி என்ற வகை இதில் தனியானவை.

தமிழர்களின் வீடமைப்புக்கும், வீட்டுப்புழக்கத்துக்கும் பனை ஆதாரமாக இருந்திருக்கிறது. பனை மரத்தில் வளைகள், கைமரங்கள், சலாகை, குத்துக்கால், ஓலையில் பெட்டி, கடகம், பாய். நீத்துப்பெட்டி, கொட்டாப்பெட்டி, மூடற்பெட்டி, சுழகு, அது இது என பலது. வீட்டுக் கூரைக்கும் வேலிக்கும் ஓலையும் மட்டையும், எரிப்பதற்கு பனஞ்சிராய், கங்கு, கொக்கறை, பன்னாடை, பாளை, ஊமல் என இதுவும் பெரியபட்டியலாகும். இப்படிப்பல வகையில் பனையின் பயன்பாட்டோடு நம்முடைய வாழ்க்கை ஒன்றாகிக்கலந்தது.

பனையைக் கண்டவுடன் தமிழர் என்கிற அடையாளம் உடனே வந்துவிடும். அல்லது பனையை நாம் எங்கேனும் கண்டோமானால் நம்மையறியாமலே அதில் நம்முடைய சூழலையும் நமது முகத்தையும் உணர்ந்தது மாதிரி அனுபவங்கொள்கிறோம்.

அந்தளவுக்கு பனை எங்களுடைய இரத்தத்துடன், உணர்வுடன் கலந்தது. ஆனால் இன்று பனையைப்பற்றி சொல்லித் தெரியவேண்டியிருக்கிறது.

பனையைப் பற்றிப் பேசாமலிருக்கமுடியுமா எங்கள் நாக்கால்? எத்தனைவிதமான சுவையை பனையிலிருந்து அனுபவித்திருக்கிறோம். பனைதந்த ஓலையால் கூரைவேய்ந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். ஏன் எம்மிற் பலர் பனை ஓலை வீட்டில்தான் பிறந்து வளர்ந்தவர்கள். இன்று பனைபற்றி சொல்லித்தான் தெரியவேணும் என்ற மாதிரியான ஒரு நிலை உருவாகியிருக்கு.

இப்பொழுது பனை பற்றிய அறிவை பெறுவதற்கு ஒரு புத்தகம் வந்திருக்கிறது. பனையின் பெருமை, அருமை பற்றியெல்லாம் அவ்வப்போது பல வெளியீடுகள் வந்தாலும் இப்போது வந்திருக்கிற பனைச்செல்வம் என்றநூல் மற்றவற்றை விட பனையின் முழுச்சித்திரத்தை தரும்விதமாக வந்துள்ளது.

பனை ஒருதாவரம் என்பதில் தொடங்கி அது ஒரு பொருளாதாரப் பயிர் என்பது வரையில் பல விடயங்களை அறிவிக்கிறது பனைச்செல்வம். அறிவியல் கண்ணோட்டத்தோடு எழுதப்பட்ட இந்த நூல் வள ஆய்வு நூலாகவும் சுய




பொருளாதாரத்துக்குரிய புத்தகமாகவும் தொழிற்றுறைக்குரிய ஏடாகவும் ஒரே நேரத்தில் பரிணாமங்கொள்கிறது.

**கருணாகரன்**

எம்மிடையே பொதுவாக வள ஆய்வு குறித்த சிந்தனை குறைவு. வள ஆய்வுகளின்மையால் தொழிற்றுறை, உற்பத்தி, அதனோடிணைந்த பொருளாதாரம் என்ற அடுத்தகட்ட நோக்குகளும் இருப்பதில்லை. பனைச்செல்வம் கெட்டிதட்டிப் போன நமது சிந்தனை மரபில் புதிய வெடிப்பை நிகழ்த்தும் முதலடிகளில் ஒன்றாக உள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாசும் தால மூலவள அபிவிருத்தி நிறுவன இயக்குனர் திரு.வி.ஜி. தங்கவேலும் இணைந்து 'பனைச் செல்வத்தை' எழுதியிருக்கிறார்கள்.

மிகச் சாதாரணமாக இன்று பார்க்கப்படுகிற பனைபற்றி, பனை வளம் பற்றி, பனைத்தொழில் பற்றி, பனை உற்பத்திபற்றி துணைவேந்தர் காட்டிய அக்கறை பாராட்டுக்குரியது. அவருடன் இணையாக நின்று பனை ஆய்வைச் செய்த தங்கவேல் அவர்களும் மெச்சத்தக்கவராவார்.

பனை ஒரு வளமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இயற்கையோடிணைந்த வளமாக பனையின் உற்பத்தியும் பெருக்கமும் பெரும்பாலும் நிகழ்ந்து வந்துள்ளது. எனினும் பனையை இனி பெருக்கவேண்டிய தேவை அதிகம் இருக்கும் ஒரு நிலை தோன்றியுள்ளது.

தமிழர்களின் வாழ்வுடன் கலந்துநிற்கும் பனைபற்றிய சித்திரம் சங்கப்பாடல்களில் இருந்து இன்றைய வாழ்க்கை வரை தொடர்சியாக இருப்பதை பனைச்செல்வத்தில் ஆதாரங்களுடன் நிறுவுகிறார்கள் நூலாசிரியர்கள்.

பனை, தமிழீழத்திலும் தமிழகத்திலும் மட்டுமல்ல, இந்கோனேசியா, தாய்லாந்து, பர்மா, கம்பூச்சியா, செனகல்,மாலி, கஜானா, ஐவறிகோஸ்ட், நைஜீரியா, மடகார் ஆகிய நாடுகளிலும் இருக்கின்றன. உலகின் உஷ்ண வலயப் பகுதிச்சூழலிலும் அப்பகுதி மக்களின் வாழ்கையிலும் பனையின் அமைவுண்டு.

இவ்வாறு பல இடங்களில் பனை இருந்தாலும் தமிழகத்திலும் தமிழீழத்திலும்தான் அது கூடுதலாகவுண்டு. தமிழர்களுடன்தான் பனையின் அடையாளமும் துலக்கமாக இருக்கிறது. பெருவாரியாக இருக்கும் பனையிலிருந்து பெறப்படும் பயனும் கூடுதலானதே. ஆனால், பனையை நவீன அறிவியற்றுறையுடன் தொடர்புபடுத்தாமல் இருப்பதால் அது கவனிப்பாரற்ற வளமாகிவிட்டது. பாரம்பரிய முறையிலான

(21 பக்கம் பார்க்க....)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 05**

**பகுதி -27**




"முதல்ல கடதாசியை நனைக்க வேணும். பிறகு கடதாசி மேலே கொஞ்சம் தீந்தையை பூச வேணும். பிறகு உங்கட விரலால அல்லது கையால பரவிவிடவேண்டும். இந்தா இப்பிடி... நீங்கள் விரும்புற விதத்தில பரவி விடலாம்...டிப்ஸ்" நான் சொல்வதை கவனமாகக் கேட்ட அவன், நான் செய்து காட்டியதை அவதானித்துக் கொண்டிருந்தான்.

"விரலால் பூசும் தீந்தையா?" அவன் கேட்டான். "ஓம் விரலால் பூசும் தீந்தை."

அவன் தனது விரலொன்றை தயங்கித் தயங்கி சிவப்பு நிறத் தீந்தையின் மேல் இறக்கினான். "சுத்திச் சுத்திப் பூச வேணும்" என்று அவன் சொல்லிக் கொண்டாலும் தீந்தையை தொடும் அளவுக்கு அவனால் துணிய முடிய வில்லை. அவன்தன் விரலை கடதாசிக்கு மேல் மிக நெருக்கமாக பிடித்தபடி வட்டமாக அசைத்தான். பின் மரத்தாலான வண்ணம் கலக்கும் தட்டையான கரண்டியை எடுத்து, தீந்தையினுள் தோய்த்து எடுத்து கடதாசியின் மேல் சுற்றிச் சுற்றிப் பரவி விட்டான்.

"இது விரலால் பூசும் தீந்தை என்றுதான் நான் நினைக்கிறேன்."


"ஓம் நீங்கள் இது விரலால் பூசும் தீந்தை எண்டுதான் சொன்னனீங்கள். இப்ப அதை உங்கட விரல்களால் சுற்றிச் சுற்றி பரவி விடுங்கோ" என்றான். அந்த தீந்தையை தன் விரல்களால் மீண்டும் தொட்டவன், "ஐயோ! இதை துடைத்து விடுங்கோ" என்றான்.

நான் கைதுடைக்கும் கடதாசியை அவனிடம் நீட்டினேன். அவன் அதனால் தீந் தையை துடைத்து விட்டான்.

"ஏன் அப்பன்...தீந்தை உங்கட விரலில படுகிறது. உங்களுக்கு விருப்பமில்லையா?" நான் கேட்டேன்.

''அரியண்டமாயிருக்கு... அரியண்டமா ஒட்டுது'' என்றான்.

அவன் அந்த தீந்தைச் சாடியைத் தூக்கிப்பிடித்துக் கொண்டு அதனுடைய லேபிளை வாசித்தான். "சிவப்பு" என்று உரத்து சொன்ன அவன் சாடியை மேசையின் மீது வைத்துவிட்டு உள்ளங்கையை அந்த சாடிக்கும் கடதாசிக்கும் மேலாக மிக அண்மையாக வட்டமாக அசைத் தான். ஆனால் அவற்றைத் தொடவில்லை. பின்மிக வேகமாக தன் விரல் நுனிகளால் தீந்தையைத் தொட்டான்.



"தீந்தையை பூசுங்கோ" என்றவன். "சிவப்பு தீந்தையை தொடுங்க டிப்ஸ். தொட்டு அதை பூசுங்க. ஒரு விரலில இரண்டு விரலில மூண்டு விரலில தொட்டு பூசுங்க. முதல் சிவப்பு நிறம். பிறகு மஞ்சள்.... பிறகு நீலம்.... எண்ட ஒழுங்கில பூசுங்க" என்றான்.

"அப்பிடி நீங்கள் செய்து பாக்கப் போறீங்களோ?" என்று நான் கேட்டேன்.

நிமிர்ந்து என்னைப் பார்த்த டிப்ஸ், ''சாடிகளில் இருக்கிற லேபிள்களில அப்பிடித்தான் சொல்லியிருக்கு" என்றான்.

''ஓம் அப்பிடித்தான் சொல்லியிருக்கு."

தீந்தையினுள் மீண்டும் தன் விரல் களை தோய்த்தான். ''ஐயோ! இதைத்துடைத்து விடுங்கோ" என்றவன். இன்னொரு கை துடைக்கும் கடதாசியை எடுத்து, அதனால் விரல்களை விறுவிறுப்பாகத் துடைத்து விட்டான்.

"உங்களுக்கு அப்பிடிச் செய்ய விருப் பமாயிருக்கு.....ஆனா அப்பிடிச் செய்யவும் விருப்பமில்லை." என்றேன் நான்.

"அந்த கிறேயோன்கள் வித்தியா சமானவை'' என்ற டிப்ஸ் தொடர்ந்து, "அமெரிக்க கிறேயோன் கொம்பனிதான் அதை செய்யுது. இது ஷோ பிங்கர் பெயின்ற் கொம்பனியுடயது. நீர்வர்ணங்களை பிறாங் நிறுவனம் செய்யுது" என்றான்.

"ஓம்" என்றேன் நான்.

"இதெல்லாம் விரலால பூசுற தீந்தைகள்" என்றவன், தனது விரல்களை மஞ்சள் தீந்தையில் தோய்த்து தனது விரல்கள் அனைத்தின் மீதும் மெதுவாகவும் அவதான மாகவும் பரவி விட்டான். பின் கைதுடைக்கும் கடதாசியால் அவற்றை துடைத்து விட்டான். அடுத்து அவன் நீல தீந்தையினுள் விரல்களைத் தோய்த்தான். பின் தனது கையை கடதாசியின் மீது வைத்தான். தான்செய்யும் வேலையில் மூழ்கிப்போய் விட்டவன் போல் மேசைமீது சிறிது குனிந்து கொண்டான். ஒவ்வொரு விரலின் மீதும் தீந்தையை அவதானமாகப் பரவி விட்டான்.

''இஞ்ச பாருங்கோ'' என்று வெற்றிக்களிப்புடன் கூறிய படி தன் கைகளை நீட்டிப் பிடித்தான்.

"இந்தமுறை நீங்கள் உண்மை யாகவே அதை செய்துவிட்டீங்கள் அல்லவா?" என்றேன்.

"இஞ்ச பாருங்கோ" என்றவன் தொடர்ந்து, "எல்லாவிரல்களிலயும் நீலத் தீந்தை நிரம்பியிருக்கிறது.'' என்று சொல்லிவிட்டுத் தன் கைகளைப் பார்த்தான். "விரல்கள் எல்லாம் இப்ப நீல நிறம். இனி பச்சை நிறமாக போகின் றன" என்ற பின், நிறத்தை மாற்றிக்கொண்டே, "முதலில நான் விரல்களை சிவப்பாக்கினன்.

(தொடரும்....)

---

(16ஆம் பக்சத் தொடர்ச்சி)

களங்களில் இவனது அணி நிச்சயமாக வெற்றி உடனே திரும்பி வரும். இவனது அணிகளில் இழப்புக்களும் குறைவாக இருந்தன.

தமிழ்ச்செல்வன் எப்போதும் தனது அணிகளிடம் கதைக்கும்போது படையணி, படையணி என்றே கதைப்பதுண்டு. எமது படையணிக் காக நாம் உயிரையும் கொடுக்க வேண்டும். படையணியைப் உயிரிலும் மேலாக நேசிக்கவேண்டும். நாம் ஒவ்வொருவரும் செய்யும் அனைத்து விடயங்களும் எமது படையணியின் வளர்ச்சிப்போக்கை கருதியதாக இருக்கவேண்டும் என்றே குறிப்பி டுவான். அவனது அதே சிந்தனை களுக்கு உருவம் தருவதாக அவனது செயற்பாடும் அமைந்தது.

1996ஆம் ஆண்டு ஓயாத அலைகள்- 01இன் போது முல்லைத் தள மீட்புக்காக தனது கனரகக் கருவியுடன் தளராது போரிட்டு வெற்றிப்பாதைக்கு வழிவகுத்தான்.

1997ஆம் ஆண்டு தொடங் கிய ஆனையிறவு பரந்தன் சண் டையில் இறுதிவரை போராடி சாதனை படைத்தான்.

1997ஆம் ஆண்டு மண லாறு கலியாணபுரச்சண்டையில் திறம்படச்சண்டை செய்து தளபதியின் பாராட்டை பெற்றான்.

1997ஆம் ஆண்டு தொடங் கிய ஜெயசிக்குறு எதிர்நடவடிக் கையில் ஓமந்தை தொடக்கம் மாங் குளம் வரை எதிரியை எதிர்த்துப் போராடி வீரசாதனைகள் படைத்தான்.

1997ஆம் ஆண்டு ஜெசிக் குறு முறியடிப்புக்காக நடந்த சமர்களிலும் .

1.தாண்டிக்குள ஊடறுப்புச் சமர்.

2.ஓமந்தை ஊடறுப்புச் சமர்.

3.மன்னகுளச் சமர் அனைத்திலும் தளராத சுதந்திர மூச்சுடன் போரிட்டு எதிரிப்படைகளை கதிகலங்க வைத்தவன் மேஜர்-தமிழ்ச்செல்வன்.

1998ஆம் ஆண்டு கிளி நொச்சி முன்பகுதியை கைப்பற்றும் சண்டையில் களநிர்வாக பொறுப்பா ளராக இருந்து மிகவும் வேகமுடனும், சீராகவும் தனது வேலையைச் செய்த துடன் கூடுதலாகச் சண்டையிலும் பங்குபற்றினான்.

1998ஆம் ஆண்டு நடந்த ஓயாத அலைகள்- 02 கிளிநொச்சி நகரை மீட்கும் சண்டையில் ஒரு பிளாட்டூண் அணித்தலைவனாக சென்று அவனுக்குத் தந்த பகுதியை முற்றுமுழுதாகப் பிடித்திருந்தான்.

இந்தக் களங்களில் இவனது செயற்பாடுகள் சண்டைத் திறன் என்பன எல்லோராலும் போற்றப்பட்டதொன்றாகவே இருந்தது. எனவேதான் எத்தனையோ களங்க ளைக் கண்ட, எத்தனையோ எதிரி யின் பதுங்கித்தாக்குதலை எதிர் கொண்ட மேஜர்-தமிழ்ச்செல்வனை எதிரியால் ஒன்றும்செய்யமுடிய வில்லை.

மேஜர்- தமிழ்ச்செல்வன் களத்துக்குள் நுழைந்து விட்டான் என்றால் வீராவேசத்துடனே செயற் படுவான். அணிகளுக்கும் அவ னுக்கும் அடுத்த நிலையில் உள்ள பொறுப்பாளர்களுக்கும் தெளிவான கட்டளைகளையே வழங்குவான். எமக்கு நேரே உடைத்திட்டான் என்னி லிருந்து 50மீற்றரில் அடியுங்கோ எதிரிபக்கத்தில் வந்தாலும் பதட்டப் படாமல் கட்டளையைக் கொடுப்பான். "தம்பி டே...நீ அந்தப்பக்கம் வாற வனைச் சுடு...... நீ இங்கே நின்று இதிலை யாரும் ஓடிவிடாமல் சுடு..... நீங்கள் என்னோடு வாருங்கள் சுடு...சுடு... எல்லோரும் ஒன்றாகச் சுடு... விடாதே பண்டை நெருங்கிக் குண்டை கழற்றிப்போடடா" என்பதும் தமிழ்ச்செல்வன் அங்கு என்ன நடக்குது என்று கேட்கும் தளபதிக்கு இங்கே ஒரு பிரச்சினையும் இல்லை. எனக்கு கிட்ட வந்து குவிஞ்சிட்டான் நான் அணிகளை ஒழுங்கு படுத்துகிறேன். அவன் இன்னும் கிட்டவந்ததும் நான் சொல்லேக்க செல்லை அடியுங்கோ என்று பதட்ட மில்லாமல் எதிரி பக்கத்தில் என்பதை மறந்து தெளிவாக நிலைமையை சொல்லும் அந்த வீரனின் வீரத்தில் என்றுமே எமக்குச் சந்தேகம் இருந்ததில்லை.

அப்படித்தான் அந்த வீர னின் வீரத்தில் சிறிதும் சந்தே கமில்லாமல் அன்றைய களப்பணியும் அவனிடம் வழங்கப்பட்டது. அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை யணியின் மூத்த அதிகாரிகளில் மேஜர்- தமிழ்ச்செல்வனும் ஒருவனாக இருந்தான். எனவே அணிகளுக்கான கொம்பனித்தர அதிகாரியாக அவனே இருந்தான். எனவே 19.06.1999 அன்று ஆனையிறவு சுட்டதீவுப் பகுதியில் நிலைகொண்டிருந்த எதிரியானவன் அடிக்கடி அவனது காவலரணைக் கடந்து வெளியில் எமது பிரதேசத்திற்கு ஊடுருவித்தாக்க முற்பட்டான். அதனைத் தடுக்க எமது அணியொன்று மேஜர்- இராசநாயகம் தலைமையில் பதுங்கித்தாக்குவதற்கு ஏற்றவாறு நிலையெடுத்திருந்தது. அந்த அணியைச் சந்தித்து மாற்றுத் திட்டங்களை செயற்படுத்தவென தமிழ்ச்செல்வன் நினைத்தான்.

அதற்கமைய 20.06.1999 அன்று காலை 10.00 மணியளவில் முதல் நாள் தானும் அணிகளும் சென்ற அதே பாதையில் தமிழ்ச் செல்வன் சென்றபோதுதான் அந்த வெடியோசைகேட்டது. அணிகள் நிலை கொண்டிருந்த இடத்திற்குச் சற்றுப் பின்பக்கமாக அதேவேளை வலப்பக்கமாகவெடிச்சத்தம் கேட்டது. இப்போது தமிழ்ச் செல்வனுக்குத் தான் அடிவிழுகின்றது என்று எவராலும் புரிந்து கொள்ள முடிய விலை. எதிரி வேறொரு இடத்தில் தற்செயலாகத் தாக்குதல் நடத்து கிறான் என்று எல்லோரும் நினைத் திருந்தோம். ஆனால் சிறிது நேரத்தில் எமது காவலரணுக்கு முன்னே தெரிந்த உருவம் எம்மை சோகத்தின் உச்சத்திற்கே கொண்டு சென்று விட்டது.

ஆம் அந்த உருவம் கிட்டக் கிட்ட வந்தபோது எங்களில் ஒருவித பயம் தொற்றியது. ஆம் எதிரியின் தாக்குதலில் காயமடைந்த மேஜர்- தமிழ்செல்வனை சீர்வாணன் தூக்கிக் கொண்டு ஓடி வந்துகொண்டி ருந்தான். அதைக்கண்ட நாமும் ஓடித் தமிழ்செல்வனைத் தூக்கிக்கொண்டு வந்து முதலுதவிகளைச் செய்தும் அது பயனளிக்கவில்லை. அந்த வீரன் தனது இறுதிப் பயணத்தை ஆரம் பித்து விட்டான். எதிரியின் குண்டை மார்பினில் ஏந்தி இந்த நாட்டின் விடுதலைக்கு உரம் சேர்த்துவிட்டு இந்த மண்ணில் உறங்கத் தயாராகி விட்டான். அவனது இலட்சியத் தாகம் வீரமரணமாய் அவனை அணை த்து முத்தமிட்டு விடுதலையில் வித்தாகிப் போனது. அந்த வித்து இன்று ஆலவிருட்சமாய் எழுந்து சுதந்திர தேசத்தின் சுடரொளியாய் பிரகாசித்து மாவீரன் மேஜர்-தமிழ்ச் செல்வனாய் வீறுநடை போடுகிறான். தோழனே உனது கனவு நிறை வேறும்வரை எமது இலட்சியப் பய ணம் தொடரும் நிச்சயம் ஓர் நாள் தமிழீழம் மலரும்.




# சிறிலங்கா–நியூசிலாந்து கிரிக்கெட் மோதல் சூடு பறக்குமா?

பாகிஸ்தானுக்கு அணைமயில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட சிறிலங்கா கிரிக்கெட் அணி பாகிஸ்தானுடனான டெஸ்ட் போட்டியை 1-1என்ற ரீதியில் சமன் செய்ததுடன் சிம்பாப்பே அணியும் பங்கு பற்றிய முக்கோண ஒருநாள் தொடரை கைப்பற்றி திரும்பியது.

அதன் பின்னர் நீண்ட ஓய்வு பெற்று இன்னும் சில தினங்களில் உலகத்தரவரிசையில் ஒருநாள் போட்டியில் 2ஆம் இடத்தை பெற்றுள்ள நியூசிலாந்து அணியுடன் போட்டிகளில் கலந்து கொள்ளும். மாவன் அத்தபத்துவின் தலைமையின் கீழ் 2 டெஸ்ட் போட்டிகளிலும் 3ஒருநாள் போட்டிகளிலும் அணி பங்குபற்றும்.

நியூசிலாந்துடன் அவ்வணி மோதுவது சிறிலங்கா அணிக்கு பாரிய சவாலாக அமையும். காரணம் அங்கு நிலவும். குளிர்ச்சியான காலநிலை ஆடுகளத்தின் தன்மை என்பவையும் வீரர்களின் திறமையுமே. ஆயினும் சிறிலங்கா அணி வெளிநாடொன்றில் பெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றி என்றால் 1995ஆம் ஆண்டில் அது நியூசிலாந்து அணியை 1.0 என்று வெற்றி கொண்டதாகும் அப்போது அணியின் தலைவராக அர்ஜுன ரணதுங்க பணியாற்றினார். அத்தொடரில் சமிந்த வாஸ் 90 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. அதே போன்று 1984ஆம் ஆண்டில் நியூசிலாந்து அணியின் றிச்சட் ஹாட்லியும் சளைத்தவரல்ல என்ற வகையில் சிறிலங்காவுக்கு எதிரான போட்டியில் 102 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஹாட்லி சிறிலங்காவுக்கு எதிரான போட்டிகளிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார்.




துடுப்பாட்டத்தைப் பொறுத்தவரை ஸ்ரீபன் பிளமிங் சிறிலங்காவுடனான டெஸ்ட் போட்டிகளில் 946 ஓட்டங்களைப் பெற்று 72.76 சராசரியுடன் காணப்படுகிறார். மொத்தமாக நியூசிலாந்து அணி 7போட்டிகளிலும் சிறிலங்கா 4போட்டிகளிலும் வென்றுள்ளன.. ஒருநாள் போட்டிகளில் நியூசிலாந்து 28 போட்டிகளிலும் சிறிலங்கா 24 போட்டிகளிலும் வென்றுள்ளன.

தற்போதைய நிலையில் முத்தையா முரளிதரனின் பந்து வீச்சும் சனத்ஜயசூரியா போன்ற ஓட்டங்களை குவிக்கும் சிறிலங்கா அணி நியூசிலாந்து அணியின் பிளமிங், மார்க் றிச்சட்சன் போன்றோரின் துடுப்பாட்டத்தையும் விட்டோரில் ஓரம் போன்றோரின் தாக்குதல் பந்து வீச்சையும் சமாளித்து வெற்றியுடன் நாடுதிரும்புமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.






(19ஆம் பக்கத்தொடர்ச்சி...)

பனைத்தொழிலும் சாதியமயப்பட்டு இருந்தது பனைப் பயனுக்கும் பனைத்தொழிலுக்கும் வரையறைகளை உண்டாக்கியது.

"பனைச்செல்வம்" இப்பொழுது பனையை நவீன முறையில் விளங்கக்கோருகிறது. வளம் ஒன்றை இனம் காட்டுவதிலும் வளப்பயன்பாட்டை நவீன முறையில் மேற்கொள்வதிலும் அதனூடான புதிய பொறிமுறை சார்ந்த தொழில்முறையிலும் புதுச்சிந்தனைவேண்டும். அவ்வாறு புதுச்சிந்தனையுடன் பனையை அணுகினால், எமது தேசிய வருமானம் உயரும். தேசியவளமொன்றை தேசிய வருமானத்துக்குரிய தாக்குவதன் மூலம் சுதேசியப் பொருளாதார விருத்தியை உயர்த்த முடியும். இயற்கையோடிணைந்த உற்பத்தி முறைமைக்கான ஆய்வுகளையும், கண்டுபிடிப்புக்களையும் செய்யும் போது சூழல் பாதுகாப்பும், இயற் கைப்பொருள் உபயோகமும் கிடைக்கும். இவ்வாறான அணுகுமுறையிலும் நோக்கு நிலையிலுமே பனைச் செல்வம் எழுதப்பட்டுள்ளது.

இன்றைய பனைமரப் பயன்பாடு வரையறுக்கப்பட்ட அளவில்தானுண்டு. ஆனால் பனை வளத்தை பயன்படுத்தக்கூடிய விதமாக அணுகினால் அது பணப்பயிர் என்கிறது பனைச்செல்வம்.

விளக்கப்படங்கள், புள்ளிவிபரங்கள், உற்பத்தி முறைகள், பயன்பாடுகள் எனப் பல வகையிலும் பனையை அணுகுவதற்கு வழி சொல்கிறது இந்தப் புத்தகம்.

பனம் பண்டங்களின் சுவையை அறியாத தலைமுறை உருவாகி வருகிறது இன்று. இல்லையென்றால், ஒருகிலோ ஒடியல் மாவின் இன்றைய விலை, எண்பது ரூபா என வன்னியிலேயே நடக்கிறது. ஆனால்,அமெரிக்காவில் இருந்து வரும் கோதுமையின் விலை இருபத்திமூன்று மட்டுமே.

பனையின் பண்டங்கள் சுவையும் சுத்தமும் நிரம்பியவை. பனம் பானத்தை "கள்" என்று மதுநிலையிலிருந்து மென்பானம் என்பதற்கு [illegible]றுவதுதான் இன்றுநமக்குள்ள பொறுப்பு. இதை வெற்றிகரமாக சாதித்துவிட்டால் பின்னர் பனையின் பெறுமதியை சொல்லத்தேவையில்லை.

பிளாஸ்ரிக் யுகத்தை முடிவுக்குக்கொண்டு வரவேண்டுமென்று உலகெங்குமுள்ள சூழலியலாளர்களால் அபாயக்குரல் எழுப்பப்படுகிறது. பனைமூலமான பாவனைப்பொருட்கள் இதற்கு நல்லமாற்றேற்பாடு.

மண்ணரிப்பைத்தடுக்க, மழைவீழ்ச்சியைப்பெருக்க, சூழலின் அமைவுக்கு இதமளிக்க, அழகுக்கு சிறப்பூட்ட என்று பனை பலநிலையிலும் தன்னை இயைபாக்குகிறது. யுத்தத்தில் அதிகம் வடுக்கண்டவையும் பனைகளே. அதிகமாக அழிக்கப்பட்டவையும் பனைகளே.

எல்லாவற்றையும் பதிவு செய்கிறது பனைச்செல்வம்.

இன்று 'பனை' பற்றிய கல்விபல்கலைக்கழகத்தில் ஒரு பாடமாக்கப்பட்டுள்ளது. இது பனைக்கு கூடுதல் முக்கியத்துவத்தைத்தருகிறது. புதிய மதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தச் சூழலில் பனைச்செல்வம் புத்தகமாக வந்திருப்பது பயனுள்ளது.

எளிமையும் விவரங்களின் விரிவும் கூடிய வள அடையாளத்தைத் தரும் இந்தப்புத்தகம் இங்கே மட்டுமல்ல, புலம்பெயர்ந்தோரிடையேயும் அறிமுகமாக்கப்படவேணும்.. புதியபொறி முறை, உற்பத்தி முறையைப் பற்றி அவர்களும் சிந்திக்க அது வாய்ப்பாகும்.

பனைச் செல்வத்தை நகர் சார்ந்த இடங்களில் அறிமுகம் செய்வதை விடவும் பனை அதிகமாக உள்ள வடமராட்சி, தீவகம், வரணி, பளை, இயக்கச்சி, பூநகரி,முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மன்னார் போன்ற இடங்களில் விதைத்தெறியப்படலாம். அந்தப் பகுதி மக்கள் தான் எப்போதும் பனையோடு வாழ்கிறவர்கள்.

# குண்டுப்பிள்ளைகள் கண்டுவரும் திண்டாட்டம்



அதிகரிப்பு என்பது அவசியமான ஒன்று தான். சந்தேகமே இல்லை. ஆனால் அந்த அதிகரிப்பு கூட எங்கே வருகின்றது என்பதைப் பொறுத்தே அதன் அவசியம் தெரிகின்றது. நாட்டின் வளம் அதிகரித்தால் நமக்கு ஆனந்தந்தான். வீட்டு வருமானம் அதிகரித்தால் வருவது குதூகலந்தான். அதாவது ஒரு நாட்டின் பொருளாதாரமும் குடிமக்கள் கல்வித் தரமும் அதிகரித்து விட்டால் பல அதிகரிப்புகளுக்கு இது வித்திட்டு விடுகின்றது. இதற்கு மாறாக நாட்டில் பஞ்சமும் பட்டினியும் அதிகரித்தால், கதை வேறாகிவிடுகின்றது. பிணியும் அதிகரித்தால் நிலைமை மிகவும் மோசமானதாகி விடுகின்றது.

இந்த அதிகரிப்புகளில் உடல் எடை அதிகரிப்பு என்பது நமக்கு அறவே வேண்டப்படாத ஒன்றாக இருக்கின்றது. அப்படி யிருந்தும் இன்றைய காலகட்டத்தில், உடல் பருத்தவர்கள் தொகை அசுர வேகத்தில் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இதன் விளைவாக வேண்டப்படாத விருந்தாளிகளாக பல நோய்கள் வந்து குடிபுகுந்து விடுகின்றன. குண்டாகும் உடல்களில் குடியிருக்க வரும் நோய்கள் வாழ்க்கையை அடியோடு நாசம்செய்து விடுகின்றன.

உலக நாடுகளில் இன்று அமெரிக்கா தான் உடல் பருமன் தொல்லையால் பெரிதும் அவதிப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டில் எடுத்த ஒரு கணக்கின்படி 15 மில்லியன் பிள்ளைகள் உடல் பருத்தவர்களாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 70களில் ஆரம்பத்தில் இருந்து இன்று வரையிலான காலகட்டத்தில், உடல் குண்டானவர்கள் தொகை இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்து இருப்பதாக ஆய்வுகள் மூலம் கண்டறிந்து இருக்கிறார்கள் அதாவது முன்னைய தொகையை விட 15 வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாம்.

இது ஆரோக்கியமான நிலையல்ல என்பது தெளிவாகவே தெரிகிறது.

ஏன் உடல் பருக்கின்றது?

இன்றைய சாப்பாட்டு முறைகள் நன்றாக மாறிப்போயிருப்பதுதான் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். குறிப்பாக அமெரிக்க பிள்ளைகள். Fast Food எனப்படும் உடல் உணவுகளை விரும்பி உண்டு வருவது இவர்கள் உடல் கொழுப்பதற்கு ஒரு காரணியாக இருந்து வருகின்றது. பெரியவர்களும் இந்த உணவு வகைகளைப் பெரிதும் விரும்பி உண்பது வழக்கத்தில் இருக்கின்றது. தொலைக்காட்சிகள் முன்னாலும் கணனிக்கு முன்னாலும் நிறைய நேரத்தைச் செலவிடும் பழக்கமும் பிள்ளைகளிடம் தொற்றி இருக்கிறது. இதன் காரணமாக உடலின் எடை அதிகரிக்கின்றது.

அவுஸ்திரேலியாவிலும் இதே பிரச்சினைகள் தான் இங்குள்ள அரசியல்வாதிகள் பிள்ளைகள் குண்டாகிக் கொண்டு வரும் பிரச்சினையை பிரசார மேடைக்கு இழுத்து வந்து அதில் ஆதாயம் தேட முற்படுகின்றார்கள். அவசர உணவுக்கான விளம்பரங்களை நாம் பதவிக்கு வந்தால் அடியோடு ஒழிப்போம் இந்த விளம்பரங்களைத் தான் எங்கள் பிள்ளைகளுக்கு ஆசையைத் தூண்டி இந்த வகையான உணவுகளின் நாட்டத்தை ஏற்படுத்தி வருகின்றன என்பது இவர்கள் பிரச்சார உத்தியாக இருக்கின்றது. ஆனால் அரசு ஆட்டங்காணுவதாயில்லை. பிள்ளைகள் எப்படியான உணவு உண்ணவேண்டும். என்பது பெற்றோர்கள் கைகளில்தான் இருக்கின்றது. பிள்ளைகளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்து உரிய உணவு வகைகளை வழங்க வேண்டியது பெற்றோர் கடமை இதற்காக விளம்பரங்களை எதற்கு நிறுத்த வேண்டும் என்று கேட்கிறது அரசு.

1180 பெற்றோர்களிடையே ஓர் ஆய்வை நடாத்தியதில் 25 வீதமான பெற்றோர்களுக்கு மாத்திரமே தம் பிள்ளைகள் உடல் எடை கூடியவர்கள் என்று முன்பே தெரிந்திருக்கின்றது என்கிறார்கள் அதிகாரிகள். அதாவது பெற்றோர்கள் பிள்ளைகள் உடல் நிலை மீது அசிரத்தையோடு இருப்பதையே இது நன்கு உணர்த்தியிருக்கின்றது. வீட்டு அங்கத்தவர்கள் ஒன்று கூடி, காலையிலும், மாலையிலும் எப்படியான உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். எப்படியான உணவைத் தவிர்க்கலாம் என்றெல்லாம் திட்டமிடாததால் வந்த வினைதான் இது என்கிறார்கள்.

பிள்ளைகளே தமது உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணட்டும் சாப்பாட்டின் முடிவில் தாராளமாக இனிப்பு வகைகளைச் சுவைக்கட்டும் என்றெல்லாம் அளவுக்கு மீறிய சுதந்திரக் காற்றை சுவாசிக்கவிட்டதால் வந்த சம்பாத்தியந்தான் இந்தக் குண்டு உடல்கள். பிள்ளைகள் தமது இஸ்டத்திற்கு நொறுக்குத் தீனிகளை உண்ண பெற்றோர் அனுமதிப்பதும் உடல் குண்டாவதற்கான காரணமாகி விடுகின்றது.

அண்மையில் நடாத்திய ஓர் ஆய்வில் கர்ப்பிணித் தாய் குண்டானவராக இருந்தால், பிறக்கும் பிள்ளையும் 4 வயதை எட்டும்போது குண்டாகிவிடும் என்று கண்டறிந்து இருக்கின்றார்கள். 8500 பெற்றோர்களை வைத்து ஆய்வு நடாத்தியதில் 24 வீதமான அதாவது ஏறத்தாழ நான்கில் ஒரு பிள்ளை குண்டாகி வருவதை அவதானித்து இருக்கின்றார்கள். இந்தப்பிள்ளைகளின் தாய்மார் எல்லோரும் பிரசவகாலத்தில் எடை கூடியவர்களாக இருந்துள்ளார்கள். சாதாரண உடம்போடு இருந்து பிரசவித்த தாய்மாரின் பிள்ளைகளில் 9 வீதமானவர்கள் மாத்திரமே குண்டாகி இருக்கின்றார்கள்.

இன்னொரு ஆய்வின் மூலம் புதியதொரு அபூர்வ தகவல் வெளியாகி இருக்கின்றது. வழமையான நித்திரை நேரத்தை ஒரு மணி நேரத்தால் அதிகரித்தால் எடைகுறையும் வாய்ப்பு உருவாகின்றது என்பது அந்தத் தகவல்.குறைவான நேரம் உறங்குவதால் உடல் எடைகூடி விடுகின்றதாம். Leptin எனப்படும் இராசாயனக் கலவை நமது நித்திரையின் போது உடலின் கொழுப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாக அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்து இருக்கின்றார்கள். 27க்கும் 40 க்கும் இடைப்பட்ட 500 வயதானவர்களில் பரிசோதனை நடாத்தப்பட்டுள்ளது 7.7 மணி நேரம் நன்றாகத் தூங்கிய ஆண்கள் எடை 13 வருடங்களில் 7.3 கிலோவால் குறைந்திருக்கின்றது. பெண்கள் இதே காலகட்டத்தில் தினமும் 7.1 மணி நேரம் ஒழுங்காகத் தூங்கியதில் 6.9 கிலோ எடை குறைந்துள்ளது.

5 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலையை விட இன்று முக்கால்வாசிப் பகுதியினர் குறைவாகவே தூங்குகின்றார்கள் என்பது இன்னொரு ஆய்விலிருந்து தெரிய வந்துள்ளது. நிஜமும் அது தான் இன்றைய அவசர உலகில் எதற்கும் முந்த வேண்டும் என்ற நிலை வந்து சேர்ந்திருக்கின்றது. பிந்தியவர் பாடு அரோகராதான் என்ற நிலையில் எதற்குமே முண்டியடித்துக் கொண்டு அவசர உணவு வகைகள் அவசரம் அவசரமாக வாய்க்குள் தள்ளிக் கொண்டு ஓடும் நிலை வந்து சேர்ந்திருக்கின்றது. கூடவே குண்டாகி விடும் அவலமும் சேர்ந்திருக்கின்றது.

நிலைம்ம மாற வேண்டும் என்பது தான் ஆசையாக இருக்கின்றது. ஆனால் அது எப்பொழுது சாத்தியமாகும் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.


இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா !

A/L தகமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visa க்களைப்பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகமை, உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் BSc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப்பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.



தே. வாகீசன்
கோண்டாவில்

2002ம் ஆண்டு உயர்தர பரீட்சை எடுத்த நான் 2004ம் ஆண்டுக்குரிய யாழ் பல்கலைக் கழக விவசாயபீடத்திற்கு தெரிவு செய்யப்பட்டேன். கணனித்துறையில் இருந்த எனது ஆர்வம் காரணமாக அத்துறையிலேயே எனது பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பினேன். இதற்காக IIS நிறுவனத்தினால் நடத்தப்படும் Edexcel இன் BTEC HND கற்கை நெறியினை தெரிவு செய்து கற்று வருகிறேன். எனது இறுதியாண்டு பட்டக் கல்வியினை மேற்கொள்ள இங்கிலாந்து பல்கலைக் கழகமொன்றிற்கு செல்ல இருக்கும் இச் சந்தர்ப்பத்தையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். HND கற்கைநெறியானது குறுகிய காலத்தில் ஒரு சர்வதேச பட்டக் கல்வியை பெற்றுக் கொள்வதற்கு சிறந்த தெரிவு என்பது எனது கருத்தாகும்.



இ. திருமுருகன்
கோப்பாய்

நான் க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் பிரிவைச் சேர்ந்த மாணவனாக இருந்தும் எனது எதிர்காலத்தின் தேவையை உணர்ந்து (வேலை வாய்ப்புக்கள்) கணனித்துறையினைத் தெரிவு செய்தேன். அதற்காக வடக்குக் கிழக்கில் எனது துறைசார்ந்த கல்வியை மேற்கொள்ள IIS நிறுவனத்தினால் நடாத்தப்படும் HND கற்கை நெறியினைத் தெரிவு செய்தேன். இக்கற்கை நெறியினைப் பூர்த்தி செய்ததும் இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் 3ம் வருடக் கல்வியைத் தொடரவுள்ளேன்.

BTEC HND
World Class Qualifications

Delivered Locally....... Recognised Globally

BSc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK,USA,Australia,Canada etc

↑

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

↑

GCE A/L
with 2 Subjects


IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road, Jaffna.
P.No.: 021 222 2831 / 021 222 6933

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

*பாவலா!*

*ஷாருகான் நிகழ்ச்சியை எதிர்த்து பிக்குகள் தீக்குளிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்ததைப் பற்றி?*

*அருள்நேசன்,*
*அக்கராயன்.*

பிக்குகள் மூன்றாந்தர அரசியல் வாதிகளாகிக்கொண்டிருக்கிறார்கள் என்பது உறுதியாகியுள்ளது

*பாவலரே!*

*தற்போது நாடாளுமன்றம் பைத்தியகாரரின் முகாமாகி வருவதாக அநுரா விமர்சிப்பதையும் கோமாளிகளின் கூடாராமாகி வருவதாக மகேஸ்வரன் கவலை கொள்வதைப் பற்றியும் தங்களின் பாணியில் கூறுவதானால்?*

*பிரியங்கா,*
*யாழ்ப்பானம்.*

வரவர நாடாளுமன்றம் மொத்தத்தில் பைத்தியக்காரக் கோமாளிகளின் புகலிடமாகவே மாறிக் கொண்டிருக்கிறது.

*வணக்கம் பாவலா!*

*எஸ்.பி திஸாநாயக்க இரண்டு வருட கடூழிய சிறைத் தண்டனையை அனுபவிப்பாரா?*

*துஸ்யந்தன்,*
*முல்லைத்தீவு.*

இரண்டு நாட்கள் அனுபவித்தாலும் சந்திரிகாவின் பழி வாங்கும் வெறி தீர்ந்தாகவே இருக்கும்.....

*அன்பின் பாவலா!*

*போரா? சமாதானமா? என்ற குழப்பத்தில் இருக்கும் தமிழ் மக்களுக்கு தாங்கள் கூறும் கருத்து?*

*நிசாந்தன்,*
*உருத்திரபுரம்.*

போர் சுதந்திரத்தையும் சமாதானம் வெறுமையையும் பெற்றுத்தரும். எனில் தமிழர்கள் தமக்கு எது தேவையென தேர்வு செய்யும் இறுதிக்கட்டம் நெருங்கிக்கொண்டிருக்கிறது அவ்வளவுதான்.

*பாவலா!*

*யாழில் மின்சாரம் தாக்கி பலியாவோரின் தொகை அதிகரித்துக்கொண்டே போகின்றதே இதனை தடுக்கமுடியாதா?*

*யசிகலா,*
*ஸ்கந்தபுரம்.*

கள்ளக் 'கரண்ட்' பாவிப்போர் தொகையைக் கட்டுப்படுத்தினால் தடுக்கலாம். இதுதான் இப்போது Currenl problem...!

*பாவலா!*

*பலஸ்தீன சனாதிபதி வேட்பாளர் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனரே கவனித்தீரா?*

*அனுசியா*
*கிளிநொச்சி.*

இப்படியான நிகழ்வுகள் ஹட்லர் ஒரு தீர்க்கதரிசியோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே தோன்றுகிறது...இஸ்ரேலியச் சண்டித்தனம் அருவருப்பானதே....!

*பாவலா!*

*உலகமயமாதலுக்குள் இன்றைய கலைகளின் போக்கு எப்படியிருக்கிறது?*

*யாழினி,*
*சுன்னாகம்.*

கலப்படமயமாகிக் கொண்டிருக்கிறது.

*பாவலா!*

*ஒரு காலத்தில் கவிஞர்கள் எல்லோருமே தாம் படைக்கும் படைப்புக்களால் தங்களுக்கான புகழ்களைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் *இப்போது அப்படியில்லையே ஏன்?*

*திரேஜா,*
*யாழ்ப்பாணம்.*

அக்கால கவிஞர்கள் மொழிக்கு உயிர் கொடுத்தார்கள் இக்கால கவிஞர்கள் மொழியின் உயிரை சிதைக்கிறார்கள்... (சிலரைத்தவிர).... இது தான் காரணம்.

*பாவலா!*

*உலகில் ஏழைகள் எப்போதாவது இல்லாமல் போவார்களா*

*ஜெகாந்தன்,*
*திருவையாறு.*

ஆம் உலகம் இல்லாமல் போகும் போது....!

*பாவலா!*

*காலம் சென்ற தமிழ் அறிஞரின் படைப்புக்கள் பற்றி?*

*பிரியா,*
*வவுனியா.*

காலத்தை வென்ற படைப்புகள்....

*பாவலா!*

*நாடாளுமன்றத்தில் செங்கோல் ஒழித்து விளையாடும் பொருளாகிவிட்டதே கவனித்தீரா?*

*வினோதா,*
*சங்கானை,*

நாடாளுமன்றில் கொடுங்கோலாட்சி நடக்கிறதே நீர் அதைக் கவனித்தீரா?

*பாவலா!*

*அன்றைய கல்வியையும் இன்றைய கல்வியையும் ஒப்பீடு செய்க?*

*துர்க்கா,*
*வட்டக்கச்சி.*

அது ஏட்டுக்கல்வி... இது நோட்டுக் கல்வி.....நோட் கொப்பிகளும்....ரூபா நோட்டுகளும்தான் இன்றைய கல்வியை நிர்ணயிக்கின்றன.

*பாவலா!*

*வயது வந்தவர்கள் தாங்கள் குழந்தையாகவே இருப்பதாகவே எண்ணுகிறார்களே இவர்களுக்கு தாங்கள் கூறுவது என்ன?*

*சசி,*
*இராமநாதபுரம்.*

காலம் ஓடிக் கொண்டிருக்கையில் குழந்தையாக தவழ நினைக்கலாமா?



# தெருப்பேச்சு

பண்டார நாயக்க குடும்பத்தைப் பற்றி பேச ரவிராஜ் எம்பிக்கு என்ன தகுதியிருக்கெண்டு அநுரா கேட்டவராமெல்லோ?

ஓமோம். அவரே ஆசுப்பத்திரியில மாறுப்பட்டவரென்றுமாமாவே சொன்னவர். ரவிராஜ்சிட்ட இப்படிக் கேட்க அநுராவுக்கு தகுதியிருக் கோண்டு, மாமாவத்தான் கேட்கோணும்.

அலையடிக்கிற கடகலில
புலி அடிக்குது... ஐலேசா
ஐலேசா....ஏலேலேலோ..... ஐலசா...
என்ன பாட்டோட பம்பலாக வாறாய்
ஐலேசா... ஏலேலேலோ... ஐலசா....

அண்ண இது புதுப்பாட்டண்ண-எங்கட ரேடியோவில இப்ப தான் கேட்டனான். சோக்கான பாட்டண்ணே.

அதுசரியடா! உதென்னடா இந்த ஐலேசா இதென்ன பாசையடா.

எனக்கென்னண்ணே தெரியும் ஏதோ ரேடியோவில கேட்டன் பாடினன அவ்வளவுதான். டேய் தம்பி நானும் இந்த எங்கட மீன் பிடிமாவட்டம் எல்லாம் போயிருக்கிறன். வலை இழுத்தும் பிழைச்சிருக்கிறன். ஆனா எங்கட மீன் பிடி தொழிலாளிகள் ஐலேசா எண்டு அம்பாச் சொல்லிறது ஒரு இடத்திலயும் கேக்கயில்ல. பிறகென்னண்டு இந்த 'ஐலேசா' இங்க பூந்தது.

எனெக்கென்னண்ண தெரியும்? பொறுப்பானவையட்ட எல்லோ கேட்க வேணும். சிலவேள ஏதும் விளக்கம் சொன்னாலும் சொல்லுவினம்

என்னண்டு? அறிவுமதிதான் சொல்லித் தந்ததெண்டா?

சிங்கள பேப்பரில இல்லாத சிண்டு முடிப்பெல்லாம் நடக்குது தெரியுமோ. இப்ப கிட்டடியில பாகிஸ்தான் 156 A யை ஏற்றுக்கொள்ளாது எண்டு 'ஐலண்ட்' காரர் செய்தி போட அப்பிடித் தாங்கள் சொல்லயில்லையெண்டு பாகிஸ்தான்காரர் மறுத்துப் போட்டினம்.

பிறகு புலிகளின்ர கொடுமையள மத்திய கிழக்கில பிரசாரம் செய்ய உதவுறதா குவைத் சொன்னதா (டிசம்பர்7) இதே ஐலண்ட் செய்தி போட குவைத்காரரும் அப்பிடியொண்டும் சொல்லயில்லயெண்டு மறுத்துப் போட்டினம் இந்த சிங்கள பேப்பருகளுடவேலையை பாத்தியே!

புதினம் தெரியுமோ? ஐ.தே.க. காரர் விசா குடுக்காம கலச்ச போன் ஹறிஸ் எல்லோ திரும்பி வாறாராம் மாநாட்டில பேசிற சாட்டில வாறார். சீமான் என்னென்ன குண்டுகளை போடப் போறாரோ?

ஏனண்ணை சலிச்சுப் போனியள் உங்களுக்கு விளங்கயில்லையே உண்மை எப்பிடியும் வெளியில வரும். போள் ஹறிஸ் என்ன அந்த கோயபல்ஸ் இறங்கி வந்தா லும் அவ்வளவுதான்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–99



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்–99**

..............................................................
..............................................................
..............................................................
..............................................................

பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –98



**சு.சிவாஜினி,**
**மந்துவில்,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*வாசல் படியில் வாடியிருந்து பயனில்லை பையா*
*மனவலுக் கொண்டு எடு துவிச்சக்கர வண்டியை*
*துணிவே உனக்கு துணையாக இருக்கு*
*தொடர்ந்திடு உன் பயணத்தை.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*அன்று யுத்தமது தொடரும் போது ஒதுங்கினாயே*
*இன்று இயற்கையது விரட்டிடவும் ஒதுங்குகின்றாய்*
*என்றும் ஒதுங்கிடவே நீ எண்ணும் நேரத்திலே*
*நாளை வீடு தேடி வந்து விடும் இறுதியுத்தம்.*

கோ.மயூரன்,
கிளிநொச்சி

*துடிப்பான சிறுவனும் துவிச்சக்கரவண்டி*
*துரிதமாய்ப் பயணத்தை துள்ளியுடன் செல்ல*
*வெள்ளத்தை இடையில் வென்று கொள்ள*
*வெளியே நின்று வெதும்பி நிற்கின்றான்.*

கு.சிவகுமார்,
முரசுமோட்டை.

*வெளியில் சென்ற பெற்றோர் வீடுதிரும்பவில்லை*
*வெள்ளம் வராது தடுக்க சிறுவனே நீ*
*பள்ளியை கோட்டைவிட்டு வாசலில் குந்தி*
*துவிச்சக்கரவண்டிக்குக் காவலோ.*

ச.வினோதரன்,
உடையார் கட்டு.

*வெள்ளத்துக்கை சைக்கில் ஓடேலாதெண்டு- அப்பா*
*வெள்ள நிவாரணம் எடுக்க நடந்து போனார்*
*அப்பா பாவம் பாரம் தூக்க மாட்டர்*
*எப்படி சுமக்கப் போறாரோ? நிவாரனத்தை*

க.இரத்தினசிங்கம்,
கிளிநொச்சி.

*இப்போது உயர் பாதுகாப்பு வலயத்தால் தாயகமும்*
*இப்படித்தான் இருக்கிறது- மழை ஓய்ந்து*
*வசந்தம் வந்தால் முற்றத்தில் விளையாடலாம்*
*போர் மூண்டு விமானம் வந்தால் ...?*

ஆ. குமரன்,
உடையார்கட்டு..

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** கிளிநொச்சி. வழங்குகின்றது. புதுக்குடியிருப்பு






(படம்: சோதி)



வன்னியில் பெய்த கடும் மழையால் கிளிநொச்சி நகர்ப்பகுதியில் வெள்ளத்தால் பாதிப்புற்ற வீடொன்றையும் புளியம்பொக்கனை கோஸ்வேயில் மக்களை பாதுகாப்பாக ஒரு புறத்தில் இருந்து மறுபுறத்திற்கு செல்வதற்கு உதவிபுரியும் காவல்துறையினரையும் அவ்வூர் இளைஞர்களையும் படங்களில் காணலாம்.










இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.